Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 214 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 14, வெள்ளி 28.06.2013



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு

30°c 28°c

# பொதுநலவாய மாநாட்டை தவிர்க்க டில்லி உத்தேசம்

## கொழும்பின் '13' எதிர்ப்பு நடவடிக்கையால் கடும் அதிருப்தி

புதுடில்லி, ஜூன் 28

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மீறி, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் முக்கிய அதிகாரங்களை நீக்குவதற்கு இலங்கை அரசு தலைப்படுமானால் பொதுநலவாய மாநாட்டினைப் பகிஷ்கரிக்க இந்தியா உத்தேசித்திருப்பதாக நம்பகமாக அறியமுடிகின்றது.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு இராஜதந்திர ரீதியாக கொழும்புக்கு அறிவிக்கப்படுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்பதாலும், அதனை மீறும் வகையில் இலங்கை செயற்பட்டால் அது இந்தியாவின் தன்மானத்துக்கே சவால் விடும் வகையில் அமைந்துவிடும் என்பதாலும், இது விடயத்தில் இந்திய காங்கிரஸ் அரசு கடும்போக்கைக் கடைப்பிடிக்க முடிவு செய்துள்ளதாக இந்திய அரசின் உயர் மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

> “ இலங்கை-இந்திய ஒப்பந்தம் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்பதாலும், அதனை மீறும் வகையில் இலங்கை செயற்பட்டால் அது இந்தியாவின் தன்மானத்துக்கே சவால் விடும் வகையில் அமைந்துவிடும் என்பதாலும், இது விடயத்தில் இந்திய காங்கிரஸ் அரசு கடும்போக்கைக் கடைப்பிடிக்க முடிவு,

இதற்கிடையில், கொழும்பில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா பகிஷ்கரித்தால் அது சர்வதேச ரீதியில் இலங்கைக்கு அவப் பெயரை தந்துவிடும் என்பதால் பொதுநலவாய மாநாடு மற்றும் வடக்குத் தேர்தல் முடிவடைந்த பின்னர் அரசமைப்புத் திருத்தங்களைச் செய்யுமாறு இலங்கை அரசுக்கு மூத்த இராஜதந்திரிகள் பலர் ஆலோசனை தெரிவித்திருப்பதாகவும் அறிய முடிகின்றது. (த-சி)

## இந்தியா



பக். 06

தேர்தலில் பங்குகொள்ளுங்கள் காஷ்மீர் மக்களுக்கு பிரதமர் மன்மோகன் அழைப்பு

## உலகம்



பக். 07

சீனாவில் கலவரம்: 27 பேர் உயிரிழப்பு

## விளையாட்டு



பக். 22

சம்பியனாகினர் இராமநாதன் மகளிர்



பக். 23

விம்பிள்டன் ரென்னிஸ் : பெடரர், மரியா அதிர்ச்சித் தோல்வி

## அரசு - கூட்டமைப்பு பேச்சுக்கு தென்னாபிரிக்கா கடும் முயற்சி

கொழும்பு, ஜூன் 28

அரசு - கூட்டமைப்பு பேச்சுக்கு தென்னாபிரிக்கா தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவித்துள்ளது.

இலங்கை வந்த தென்னாபிரிக்க வெளிவிவகார பிரதி அமைச்சர் இப்ராஹிம் தலைமையிலான குழுவினர் கடந்த திங்கட்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன் பின்னர் அரச தரப்பினரைச் சந்தித்த தென்னாபிரிக்க குழுவினர், நாடு திரும்புவதற்கு முன்னர் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நேற்றுமுன்தினம் சந்தித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இதில் பங்குபற்றினர்.

இது குறித்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

''தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும், இந்த முயற்சிகளைத் தாங்கள் தொடர விரும்புவதாகவும் தென்னாபிரிக்க வெளிவிவகார பிரதியமைச்சர் கூறினார்'' - என்றார். (த-5)

## இந்தியப் பொறியே '13' ஆவது திருத்தம்

### அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 28

தெற்காசிய நாடுகளைப் பலவீனப்படுத்தி அரசியல் இலாபம் பெறும் இந்தியாவின் சூழ்ச்சிக்கு பங்களாதேஷ் இரையாகியது. அவ்வாறே '13' என்ற வலையை வீசியும், தனது படையை அனுப்பியும் இலங்கையைத் துண்டாட இந்தியா முயன்றது. இன்று இந்தியப் படை இல்லாவிட்டாலும், '13' என்ற கிரகணம் இலங்கையைச் சுற்றி வருகிறது.

-இப்படி ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தார் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன.

இந்தியாவின் சூழ்ச்சியை அன்று அறிந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த என்னைக்கட்சியிலிருந்தே தூக்கிவிட்டார் அன்றைய ஜனாதிபதியாக இருந்த அமரர் ஜே.ஆர். ஜயவர்த்தன. எனினும், அவர் இழைத்த பிழையின் விளைவை இன்று நாம் அனுபவிக்கிறோம் - என்றும் அவர் கூறினார்.

இதுதொடர்பாக 'உதயன்' பத்திரிகையிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவிடமிருந்து தனி நாடாகப் பிரிந்த பாகிஸ்தா

தொடர்ச்சி: பக்கம் 21

## கூட்டமைப்பு - மு.கா. சந்திப்பு '13' தொடர்பாக முக்கிய பேச்சு

கொழும்பு,ஜூன் 28

அரசமைப்பின் '13'ஆவது திருத்தச் சட்ட விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் நேற்றிரவு முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலை

தொடர்ச்சி: பக்கம் 21

## ஆஸ்திரேலிய செல்ல முயன்ற 26 பேர் கைது

கொழும்பு,ஜூன் 28

ஆஸ்திரேலியாவுக்குப் படகில் செல்ல முயன்ற 26 பேரை இராணுவத்தினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கஞவாஞ்சிக்குடி கடற்கரையிலிருந்து சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு செல்வதற்கு முற்பட்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 15 பேர் வவுனியா பிரதேசத்தையும் ஆறு பேர் இங்கிரிய பிரதேசத்தையும் மூவர் மீகம பிரதேசத்தையும் ஏனையோர் களுவாஞ்சிகுடி மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களையும் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இராணுவத்தினரால் களுவாஞ்சிக்குடிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (த)

## தேர்தலில் போட்டியிடுவதற்கே தமிழினி விடுவிக்கப்பட்டார்

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன் 28

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடத் தயாராகவே தமிழினி எனப்படும் புலிப் பெண் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

''எந்தவொரு கொலையாளியும் சால்வையைத் தொங்கவிட்டுக் கொண்டு முன்னேறிச் செல்ல முடியும்'' எனக் கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டார்.

13ஆவது திருத்தம் குறித்து



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இரண்டு கருத்துக்கள் நிலவுவதால் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகவும் வடமேல், மத்திய, வடக்குத் தேர்தலுக்கு முன் '13'ஆவது திருத்தம் குறித்து அரசு சரியான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் எனவும் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (த)

## இந்திய மீனவருக்கு மறியல் நீடிப்பு

மன்னார், ஜூன் 28

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 மீனவர்களுக்கும் விளக்கமறியலை நீடித்தது மன்னார் நீதிமன்றம்.

குறித்த மீனவர்கள் நேற்று வியாழக்கிழமை மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் ஜூலை மாதம் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளார். (த-12)

## குடைக்குள் இருக்கத் தடை

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். மாவட்டத்தில் ஒரு குடைக்குள் திருமணமாகாத ஆணும் பெண்ணும் ஜோடியாக இருப்பதைத் தடை செய்ய வேண்டும் என்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடந்த சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

விவாகரத்துப் பெறாமல் இரண்டாவது திருமணம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாகவும் இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

காதலர்கள் வீட்டை விட்டு வெளியேறிச் சென்று விட்டால் அது தொடர்பில் பொலிஸில் முறையிட்டால் ஓடிச் சென்ற காதலர்களைப் பிடித்து வருமாறு பொலிஸார் முறைப்பாட்டாளர்களிடமே தெரிவிக்கின்றனர் என்றும் பிரதேச சபை ஒன்றின் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் அங்கு சுட்டிக் காட்டினார்.

இதன்போது 18 வயதுக்கு மேற்பட்ட ஆணும் பெண்ணும் விரும்பிச் சென்றால் தங்களால் ஒன்றும் செய்ய முடியாது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

''கொழும்பு காலிமுகத்திடலில் (கோல்பேஸ்) ஒரு குடைக்குள் ஆணும், பெண்ணும் இருந்தால் பிரச்சினையில்லை. இங்கு அப்படி இருக்க முடியாது. அது தென்னிலங்கை கலாசாரம். இது வட பகுதி கலாசாரம். இதனைப் பாதுகாக்க வேண்டும்'' என்று கூட்டத்தில் கலந்து கொண்டோர் குறிப்பிட்டனர். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டியில் ஒரே சூலில் 5 குழந்தைகள் பிரசவம்




கண்டி,ஜூன் 28

கண்டி, வைத்தியசாலையில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்ட மடவளையைச் சேர்ந்த 38 வயதான தாயொருவர் ஒரே. சூலில் ஐந்து குழந்தைகளை நேற்று வியாழக்கிழமை பிரசவித்துள்ளார்.

சத்திர சிகிச்சை மூலமாகவே குழந்தைகள் பெற்றெடுக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. அத்துடன் இரண்டு குழந்தைகள் பேராதனை வைத்தியாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

# அச்சுவேலி தொழில் பேட்டையில் முதலிட 50 முதலீட்டாளர்கள்

வடமராட்சி,ஜூன் 28

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் முதலீடுகளை மேற்கொண்டு கைத்தொழில் உற்பத்திகளை ஆரம்பிக்க 50 முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளதாகப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

> “இந்திய அரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள அச்சுவேலி கைத்தொழில் பேட்டையைப் புனரமைக்கும் முன்னோடித் திட்டங்கள் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

சிமெந்து, கட்டட நிர்மாண உற்பத்திப் பொருள்கள், மரம் சார்ந்த உற்பத்திப்பொருள்கள், பொறியியல் உற்பத்திகள், இறப்பர், பிளாஸ்ரிக் மற்றும் ஆடை உற்பத்திகள் இந்த முத லீட்டாளர்களால் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்திய அரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள அச்சுவேலி கைத்தொழில் பேட்டையைப் புனரமைக்கும் முன்னோடித் திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நிறைவடையும். அதனைத் தொடர்ந்து முதலீட்டாளர்கள் கைத்தொழில் பேட்டையில் உற்பத்திகளை ஆரம்பிப்பார்கள். இது தொடர்பாக அமைச்சு, முதலீட்டாளர்கள், வங்கிகள் மற்றும் துறைசார்ந்த முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடலை நடத்தவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-8)

## பொலிஸிலும் தவறுகள் நடப்பது உண்மைதான்

### ஒப்புக் கொள்கிறார் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்

யாழ்ப்பாணம், ஜூன் 28

பொலிஸில் தவறுகள் நடப்பது உண்மைதான். பொலிஸில் செய்யப்படும் ஒரு சில முறைப்பாடுகளுக்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதை ஏற்றுக் கொள்வதாக யாழ். மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெப்றி தெரிவித்தார்.

யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இதில் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், ஒரு சில திணைக்களத் தலைவர்கள் , யாழ். மாவட்ட பொலிஸ் நிலையங்க ளின் பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெப்றி,

பொலிஸாருக்கு தேச வழமைச் சட்டம் தெரியாது. இதனால் இங்குள்ள கலாசார சீரழிவுகளை தடுப்பதற்கு தேச வழமைச் சட்டத்தை எமக்குச் சொல்லித்தர வேண்டும்.

மேலும் இங்குள்ள பொலிஸார் தவறிழைக்கின்றனர் என்பது உண்மைதான். பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளுக்கு ஒரு சில இடங்களில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்காக மக்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யாமல் விடக்கூடாது -என்றார். (த-5)

## மஹிந்த சிந்தனையை மீறும் யாழ். மாநகர சபை

யாழ்ப்பாணம்,ஜூன் 28

'மஹிந்த சிந்தனையை மீறும் வகையில் யாழ். மாநகர சபை செயற்பட்டு வருகின்றது.

நாய்களைக் கொல்லக் கூடாது என்று மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள போதும், யாழ். மாநகர சபை பிடிக்கப்படும் கட்டாக்காலி நாய்களை கொலை செய்து வருகின்றது.

ஜனாதிபதி மஹிந்தவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியிலுள்ள யாழ். மாநகர சபையே இவ்வாறு நடந்து கொள்கிறது.

யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது யாழ். மாவட்டத்தில் தினந்தோறும் 15 பேர் நாய்க்கடி மற்றும் பூனைக்கடி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இவற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கு ஒரு ஊசி போடுவதற்கு 6 ஆயிரம் ரூபா செலவாகின்றது எனவும் ஒருவர் 5 ஊசிகள் வரை போட வேண்டியிருப்பதால் 30 ஆயிரம் ரூபா வரை செலவாகின்றது எனவும் சுட்டிக்காட்டப்பட்டன.

> “முதல்வர் வெளியேறுகையில், மாநகர சபை யால் பிடிக்கப் படும் கட்டாக்காலி நாய்களை என்ன செய்கின்றீர்கள் என்று ஊடகவியலாளர்கள் கேட்ட போது, அவற்றைக் கொல்வதாக அவர் பதிலளித்தார்.

எனவே கட்டாக்காலி நாய்களைப் பிடிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கலாம். ஆனால் அவற்றைக் கொல்ல முடியாது. அவற்றை வேறிடத்தில் வைத்துப் பராமரிக்க வேண்டும்- என்றார்.

யாழ். மாநகர சபையால் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்படுவதாகக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட, அப்படியாயின் மாநகர சபை பிடிக்கின்ற கட்டாக்காலி நாய்களை எவ்வாறு பராமரிக்கின்றது என்ற தொழில் நுட்பத்தைக் கேட்டு ஏனைய பிரதேச சபைகளும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

இதன்போது கூட்டத்திலிருந்த மாநகர சபை முதல்வர் எதுவும் பேசாமல் இருந்தார். கூட்டம் முடிந்து முதல்வர் வெளியேறுகையில், மாநகர சபையால் பிடிக்கப்படும் கட்டாக்காலி நாய்களை என்ன செய்கின்றீர்கள் என்று ஊடகவியலாளர்கள் கேட்ட போது, அவற்றைக் கொல்வதாக அவர் பதிலளித்தார். (த-5)

## காரைநகருக்கு பொலிஸ்'போஸ்ட்'

காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை வரை மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் தனித்தனியான பொலிஸ் நிலையங்கள் அமைக்குமாறு பிரதேச செயலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். உடனடியாகவே காரைநகர் பிரதேசத்தில் தனியான பொலிஸ் 'போஸ்ட்' அமைப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. நேற்றைய சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் இது குறித்து கலந்துரையாடப்பட்டது.

ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தின் மூலமே வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகள், காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகள், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகள் என்பன கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் பொலிஸாரினால் சகல பகுதிகளிலும் ஒழுங்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. அத்துடன் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு உரிய ஆளணி வசதிகள் இல்லை என்பதுடன் போக்குவரத்து வசதிகளும் குறைவாகவே உள்ளன. ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு அருகிலுள்ள வீட்டில் களவு நடந்துள்ளது. மண் கும்பான் பிள்ளையார் கோயிலில் களவு நடந்துள்ளது. பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் போதாமையே இதற்குக் காரணமாகும். மேலும் விழிப்புக் குழுக்களுடன் பொலிஸார் ஒத்துழைப்பதில்லை. தமிழ் தெரிந்த பொலிஸாரும் இல்லை. எனவே வேலணை ,காரைநகர் , ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளுக்கு தனியான பொலிஸ் நிலையங்களை நிறுவுமாறு பிரதேச செயலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு காரைநகர் பிரதேசத்தில் மின்சார வசதியையும் கட்டடத்தையும் பெற்றுத் தந்தால்பொலிஸ் 'போஸ்ட்' அமைக்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர். இதற்குப் பிரதேச செயலர் கட்டடத்தைப் பெற்றுத்தர முடியும் என்று தெரிவித்தார். இதற்கமைய காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 'போஸ்ட்' அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் வாகனப் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 2 மோட்டார் சைக்கிள்கள் வழங்குவதாகத் தெரிவித்தார். (ஒ-5)

## ஆசிரியையை முழந்தாளிட வைத்த மாகாண உறுப்பினருக்குப் பிணை

கொழும்பு,ஜூன் 28

பாடசாலை ஆசிரியையை முழந்தாளிட வைத்துத் தண்டனை வழங்கிய வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆனந்த சரத்குமார பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

5000 ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் அவர் நேற்று வியாழக்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரான வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆனந்த சரத்குமார ஆனமடுவ நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டபோதே அவரைப் பிணையில் விடுவிக்குமாறு நீதிவான் ரங்க திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளார். பிணையில் விடுவித்த நீதிவான், சாட்சியாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கவேண்டாமெனவும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கையொப்பமிடுமாறும் உத்தரவிட்டார்.

வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது நவகத்தேகம பாடசாலை ஆசிரியை நீதிமன்றுக்கு சமூகமளித்திருக்கவில்லை.

அத்துடன் இந்த வழக்கு விசாரணை ஜூலை 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

பிணையில் விடுவிக்கப்பட்ட அவர், தனது ஆதரவாளர்களுடன் ஆனமடுவ நகரத்தை வலம் வந்ததுடன் அய்யநாயக்க தேவாலயத்துக்குச் சென்று சிதறுதேங்காய் உடைத்து நேர்த்திக்கடன் செலுத்தியுள்ளார். (த)

## மு.காவிலிருந்து நேற்று இருவர் இடைநிறுத்தம்

கொழும்பு,ஜூன் 28

மாகாண சபை உறுப்பினர்கள் இருவரை இடைநிறுத்தி வைக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வட மேல் மாகாண சபை உறுப்பினர்கள் இருவரே கட்சியிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ரீ.ஹசன் அலி தெரிவித்தார்.

புத்தளத்தை சேர்ந்த எஹியா ஆப்தீன் மற்றும் குருநாகலையைச் சேர்ந்த றிஸ்வி ஜவகர்ஷா ஆகிய இரண்டு உறுப்பினர்களே இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவதற்கு அங்கீகாரம் வழங்குவது தொடர்பிலான பிரேரணை வட மேல் மாகாண சபையில் நேற்று வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது.

"அதற்கு ஆதரவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் குறித்த இரண்டு உறுப்பினர்களும் வாக்களித்துள்ளனர். இதனையடுத்தே அவர்கள் உடனடியாகக் கட்சியிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்'' என நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி தெரிவித்தார்.(த)

## புத்தளம் ஆசிரியர்கள் நேற்று சுகவீன விடுப்புப் போராட்டம்

நவகத்தேகம பாடசாலை ஆசிரியையை முழந்தாளிடவைத்த வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஆனந்த சரத்குமாரவுக்கு தண்டனை வழங்குமாறு வலியுறுத்தி புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் நேற்று வியாழக்கிழமை சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் குதித்தனர். இதனால், புத்தளம் மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் பலவற்றின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

## பொன்சேகாவின் உரிமைகளை வழங்க மஹிந்த ஆலோசனை

கொழும்பு,ஜூன் 28

ஜனநாயகக் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகாவின் உரிமைகளை மீண்டும் வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிக கவனம் செலுத்தி வருகிறார் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன. கடந்த வருடம் மே மாதம் 21 ஆம் திகதி சரத் பொன்சேகா சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட போது, அவரது வாக்குரிமை மற்றும் அரசியல் ஈடுபாடு போன்றனவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இவற்றையே தற்போது ஜனா திபதி மீண்டும் வழங்கவுள் ளார் என அலரி மாளிகை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின் றன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரணி- குடத்தனை வீதியில் பாலம் அமைக்கக் கோரிக்கை



வரணி, ஜூன் 27

வரணி குடத்தனை பிரதான வீதியில் குறிப்பிட்ட இடம் ஒன்றில் பாலம் ஒன்றை அமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்களால் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மாசேரி கிராம அபிவிருத்திச் சங்கம் இவ்வாறான கோரிக்கை ஒன்றை தென்மராட்சி பிரதேச செயலருக்கு சமர்ப்பித்துள்ளது. குறித்த வேண்டுகோளை பரிந்துரை செய்து சம்பந்தப்பட்ட திணைக்களத்துக்கு அதனை அனுப்பி விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பருவ மழை காலத்தில் ஆனையிறவுப் பகுதியில் இருந்து சவர் நிலக்காடு ஊடாக தொண்டமானாறு கடலேரியை வெள்ளம் சென்றடையும் . வெள்ளம் இந்தப் பாதையின் மேலாகப் பாய்ந்து செல்வதால் தற்போது இந்தப் பாதை வெள்ள வாய்க்காலாக மாறி உள்ளது. கடந்த மாரி காலத்தில் இருந்து சுமார் 5 மாதம் வரை இந்தப் பகுதியில் வெள்ளம் தேங்கி நின்றமை காரணமாக வடமராட்சி கிழக்கு . தென்மராட்சி கிழக்கு பிரதேச மக்கள் இப்பாதையை பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

அதற்குப் பதிலாக வடமராட்சி வல்லிபுரப் பாதை, கொடிகாமம் பருத்தித்துறை வீதி ஆகியனவற்றின் ஊடாக பயணித்தனர். குறித்த இரு பிரதேசங்களையும் இணைக்கும் குறுகிய தூரம் கொண்ட இந்தப் பாதை மிக அவசியமானது. எனவே வெள்ள வாய்க்காலாக மாறியுள்ள பிரதேசத்தில் பாலம் அமைத்துத் தருமாறு கோரப்பட்டது. (வ-122)

### சட்டவிரோதமாக மண் அகழ்வு:

# தடுத்து நிறுத்தும் அதிகாரம் பிரதேச செயலர்களுக்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 28

அனுமதி இல்லாமல் மண் அகழப்படுவதைத் தடுக்கும் உரிமை -அதிகாரம்- சகல பிரதேச செயலர்களுக்கும் உண்டு. பிரதேச செயலர்கள் சட்ட விரோத மண் அகழ்வைத் தடுப்பதற்கு தங்களது அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் சிவில் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம் பெற்றது.

இதன்போது மக்கள் பிரதிநிதிகளால் சட்ட விரோத மண்அகழ்வு தொடர்பாக பல்வேறு குற்றச் சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.

வேலணைப் பிரதேசத்திலிருந்து பிரதேச சபையின் அனுமதியோ, பிரதேச செயலகத்தின் அனுமதியோ பெறப்படாமல் மண் அகழப்படுகின்றது. இவ்வாறு அகழப்படும் மண் பண்ணைப் பகுதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைக்குப் பயன்படுத்தப்படுகின்றது.



ஒரு பிரதேசத்தின் வளத்தை அழித்து இன்னொரு பிரதேசத்தை அபிவிருத்தி செய்யக் கூடாதென வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார். அத்துடன் வேலணைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மண் அகழ்வைத் தடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதே போன்று பொன்னாலைப் பிரதேசத்திலும் சட்ட விரோத மண் அகழ்வு இடம் பெறுகின்றது. இதனைத் தடுப்பதற்கு சங்கானைப் பிரதேச செயலர் நடவடிக்கை எடுத்த போதும் சகலரையும் சட்ட விரோத மண் அகழ்வாளர்கள் மிரட்டியுள்ளனர். இந்த விடயங்களில் பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை என்று குற்றம் சாட்டப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட அரச அதிபர்:-

மண் அகழ்வு மேற்கொள்வோருக்கு அதற்குரிய அனுமதியுள்ளதா என்பதனைப் பரிசோதிக்கும் அதிகாரம் பிரதேச செயலருக்கு உண்டு. பிரதேச செயலர் தங்கள் அதிகாரங்களை சரிவரப் பயன்படுத்த வேண்டும்.

சட்டவிரோத மண் அகழ்வைத் தடுப்பதற்கு பிரதேச செயலர்கள், மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுவின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ளலாம்-என்றார். (வ-5)



யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற சிவில் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்...

## பிணக்குகளை முறையிட செயலகத்தில் தனிப்பிரிவு

### முதலாம் திகதி முதல் செயற்படும்

**சிவில் பாதுகாப்புக் குழுக்களில் இருப்பவர்கள் தவறு செய்பவர்களைப் பிடிக்க பயப்படுகின்றார்கள் என்று யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜெப்றி தெரிவித்தார்**

பிணக்குகள் தொடர்பான பொது மக்களின் முறைப்பாடுகள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் தனியான பிரிவொன்று எதிர்வரும் முதலாம் திகதி முதல் யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்கவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நியமிக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்கள் பொலிஸாருக்கு உரிய முறையில் பிரச்சினைகளைத் தெரிவிப்பதில்லை. சிவில் பாதுகாப்புக் குழுக்களில் இருப்பவர்கள் தவறு செய்பவர்களைப் பிடிக்க பயப்படுகின்றார்கள் என்று யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜெப்றி தெரிவித்தார்.

இதனை அடுத்து கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட அரச அதிபர், பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று முறைப்பாடு செய்வதற்கு பிரச்சினையுள்ளவர்கள் மற்றும் சிவில் பாதுகாப்புக் குழுக்களிடம் முறைப்பாடு செய்ய முடியாதவர்கள் நேரடியாக மாவட்ட செயலகத்தில் முறைப்பாடு செய்ய முடியும். இதற்காக எதிர்வரும் முதலாம் திகதி முதல் யாழ்.மாவட்ட செயலகத்தில் தனியான அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார். (வ-5)

## மத்திய கல்லூரியாக திருநாவுக்கரசு ம.வி

தென்மராட்சி, ஜூன் 28

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் கடந்த மார்ச் மாதம் தொடக்கம் செயற்படும் வகையில் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியாக பெயர் மாற்றம் செய்யப் பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளரால் அறிவிக்கப் பட்டுள்ளது.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் கடந்த 2012 ஜனவரி தொடக்கம் 1 ஏபி தரப் பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்ட போதிலும் மத்திய கல்லூரியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டமை குறித்து தற்போது அறிவிக்கப் பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் வ.நடராஜா தெரிவித்தார்.

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஐந்தாவது கல்லூரியாக கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)


## கொடிகாமத்தில் வேகக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்த மக்கள் கோரிக்கை

### வாகனப் புழக்கம் அதிகரித்துள்ளமையே காரணம்

கொடிகாமம், ஜூன் 28

கொடிகாமத்தில் புதிய பஸ் நிலையத்துக்கும் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை நடைமுறைப் படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதியில் வாகனப் புழக்கம் அதிகரித்துள்ளதால் இதனை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.



இந்தப் பகுதியில் வீதியின் இரு மருங்கிலும் வர்த்தக நிலையங்கள், பொதுச் சந்தை என்பன இயங்கி வருகின்றன. மற்றும் கொடிகாமம் புதிய பஸ் நிலையத்தில் இருந்து வேறு இடங்களுக்குச் செல்பவர்களும் தினமும் இந்தப் பகுதியில் நடமாட நேர்கிறது. ஏ-9 வீதியில் பயணிக்கும் வாகனங்கள் வேகக் கட்டுப்பாடு ஏதுமின்றிச் செல்வதைக் காணமுடிகின்றது.

கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை பருத்தித்துறை வீதியால் வேகமாகச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்று கொடிகாமம் சந்தியில் வைத்து குடும்பப் பெண் ஒருவரை மோதித் தள்ளியதால் அவர் காயங்களுக்கு உள்ளானார்.

குறித்த வாகனம் வேகக் கட்டுப்பாடு ஏதுமின்றிப் பயணித்தமையே இதற்குக் காரணமாகும். இந்த டிப்பர் வாகனம் பயணிகள் பஸ் ஒன்றை முந்திச் செல்வதற்கு முற்பட்ட போதே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது. எனவே சாவகச்சேரி பிரதேச சபையினர் கொடிகாமம் பொலிஸாருடன் இணைந்து குறிப்பிட்ட பிரதேசத்தில் வாகனங்களின் வேகக் கட்டுப்பாடு தொடர்பில் அறிவித்தல் பலகைகளை நடுவதுடன் அதனை மீறிச் செல்லும் வாகனங்களின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (க-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலனோம்பு அட்டை

### மாற்றுவலுவுள்ளோர் தொடர்பு கொள்ளவும்

அச்சுவேலி, ஜூன் 28

வலி.கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 880 பேருக்கு மாற்று வலுவுடையோருக்கான நலனோம்பு அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதுவரை நலனோம்பு அட்டையைப் பெற்றுக்கொள்ளாத மாற்றுவலுவுடையோர் பிரதேச செயலக சமூக சேவை அலுவலருடன் தொடர்பு கொண்டு நலனோம்பு அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வலி. கிழக்கு பிரதேச செயலர் எம். பிரதீபன் அறிவித்துள்ளார்.

மாற்றுவலுவுடையோருக்கான நலனோம்பு அட்டையைப் பெறுவதற்கு குடும்ப அட்டை, இரண்டு புகைப்படங்கள் (பாஸ் போட் அளவு) மருத்துவ அறிக்கை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவை பிரிவுக்கு சம்பந்தப்பட்டவர்கள் நேரில் சமூகம் அளித்து உரிய படிவங்கள் மற்றும் நலனோம்பு அட்டையில் கையொப்பம் இட்டு அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம்-என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-11)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20 ★ 11 ★ 1950

உதிர்வு
09 ★ 07 ★ 2012



**அமரர்(ஸ்வர ஞானபூபதி) சிதம்பரநாதன் சண்முகதாஸ்**
(நல்லூர் ஆஸ்தான வித்துவான்)

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவலைகள் எம் மனதைவிட்டு அகலவில்லை நீங்கள் காட்டிய அன்பின் பாதையில் ஒருவரும் ... ஆண்டும் உங்கள் நினைவில் வாழ்கின்றோம் நீங்கள் எல்லாம் வல்ல இறைவனடி சேர்ந்து இன்புற்றிருக்க நிதமும் பிரார்த்திக்கின்றோம்.

51, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்.

# பொதுபல சேனாவின் கருத்துக்கு தமிழ்க் கூட்டமைப்பு கண்டனம்

மன்னார், ஜூன் 28

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை புலிகளின் தலைவர் பிரபாகரன் போன்று செயற்பட்டு வருகின்றார் என பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்த கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரி வித்துள்ளதாவது:-

நாட்டில் இடம்பெற்ற போரைத் தொடர்ந்து தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், உரிமை தொடர்பாகவும், தமிழ் மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாகவும் மன்னார் மறைமாவட்ட ஆயர் குரல் கொடுத்து வந்தார்.

பொது பல சேனா என்ற அமைப்பு முஸ்லிம் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டு வந்தது. தற்போது தமிழ் மக்களுக்கு எதிராக அவர்களின் செயற்பாடு ஆரம்பித்துள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு அன்று முதல் இன்று வரை தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்து வருகின்றது. தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும் என்னும் நோக்குடன் மன்னார் மறை மாவட்ட ஆயர் செயற்பட்டு வருகின்றார்.

தமிழ் மக்களுக்கு ஒரு பக்க பலமாக மன்னார் மறைமாவட்ட ஆயர் செயற்பட்டு வருகின்றமையை பொது பல சேனா அமைப்பினால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இதன் எதிரொலியாக அரச தரப்பிலிருந்து தொடர்ச்சியாக மன்னார் ஆயருக்கு எதிரான விமர்சனங்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

இதன் ஓர் அங்கமாக பொது பல சேனா என்ற பேரினவாத அமைப்பு கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போது அந்த அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் குறித்த கருத்தை தெரிவித்துள்ளார்.

ஆன்மீக பணி செய்கின்றவர்கள் தன் மக்கள் சார்பாகவும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் குரல் கொடுக்க கூடாது என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை.

எனவே தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வரும் மன்னார் ஆயருக்கு எதிராக பொது பல சேனா அமைப்பு முன்வைத்துள்ள கருத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது-என்றுள்ளது. (த-12)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் **தவரத்தினம் இராணி**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 | 29 |
| 05 | 05 |
| 1943 | 2013 |

28.06.2013

உனது நல்வாழ்வே எங்கள் வாழ்வென
என்றென்றும் எண்ணி வாழ்ந்த எம்
நெஞ்சில் நிறைந்திருந்த எம் குடும்பக் குலவிளக்கே
எமையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
ஆண்டவன் நிழலில் சரண் புகுந்த அன்புத் தெய்வமே
வையமிதில் நாம் வாழும் வரை
என்றென்றும் நிலைத்திருக்கும் உம் நினைவு
எம் உள்ளங்களில்

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

குடும்பத்தினர்.

## உள்ளூர் பால் இன வெண்டி விதைகளுக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்.குடாநாட்டு உள்ளூர் பால் இன வெண்டி விதைக்கு தற்போது கிராக்கி அதிகரித்துள்ளதாக யாழ்.குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் ரி.ரவிமயூரன் தெரிவித் தார்.

இந்த வெண்டி இன விதைகள் சங்கத்தில் தாராளமாக உள்ளன.

இந்த வெண்டியில் நோய்த் தாக்கங்கள் மிகவும் குறைவாகக் காணப்படுவதனால் தான் அவற்றை விவசாயிகள் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

அதனைவிட விதை உற்பத்திச் சங்கத்தில் ஏனைய மரக்கறி வகைகளின் விதைகளும் தாராளமாகவுள்ளன.

இந்த விதைகள் கமநலசேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பட்டும் வருகின்றன.

பாகல், புடோல், கத்தரி, கீரை போன்ற மரக் கறி விதைகளே இவ்வாறு விநியோகிக்கப் பட்டு வருகின்றன என்று அவர் மேலும் குறிப் பிட்டார். (வ-17)

## இந்தியாவிலிருந்து கொழும்புக்கு கடத்தவிருந்த கஞ்சா பறிமுதல்

சென்னை.ஜூன் 28

இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடியில் இருந்து கொழும்புக்குக் கடத்த முயன்ற 6 கிலோ கஞ்சாவைக் கியூ பிரிவுப் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இராமநாதபுரம் பாம்பன் அண்ணாநகரைச் சேர்ந்த அருளானந்தம் என்பவரின் மகன் வேளாங்கண்ணி (வயது-25), தங்கச்சிமடம் கருப்பையா என்பவரின் மகன் நாகராஜ் (வயது-47) இருவரும் வேளாங் கண்ணியின் சகோதரர் அஜீத் என்பவரின் படகில் சென்றனர்.

ஏர்வாடியில் இருந்து இலங்கைக்கு அவர்கள் கஞ் சாவைக் கடத்திச் செல்ல முயன்றதாகக் குற்றஞ்சாட் டப்பட்டுள்ளது.இந்நிலையில், தனுஷ்கோடி அருகே ஓட்டப்பட்டி கடற்கரையில் இவர்களின் படகு பழுதாகி நின்றது.

இது குறித்து தகவல் அறிந்த கியூ பிரிவுப் பொலிஸார் அந்தப் பகுதிக்குச் சென்று படகைச் சோதனை செய் தனர். அதில், 6 கிலோ கஞ்சா இருந்தது தெரியவந் தது. அதனைக் கைப்பற்றிய பொலிஸார் படகில் வந் தவர்களைத் தேடினர்.

இந்நிலையில், படகின் உரிமையாளர் அஜீத் உட்பட 3 பேர் தலைமறைவாகிவிட்டனர். அவர்களை கியூ பிரிவுப் பொலிஸார் தேடி வருகின்றனர். (த)

## மரண அறிவித்தல்கள்

### அப்புக்குட்டி நல்லதம்பி

(ஓவசியர், TRRO)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக் குட்டி நல்லதம்பி நேற்று (27.06.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பொன்னம்பலம் பத்மினி

கொல்லங்கலட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் ஐயனார் கோயிலடி மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் பத்மினி நேற்று(27.06.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வநாதர் பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான அம்பலப்பிள்ளை(மலேசியா), கந்தையா, நரசிங்கம், காசிப்பிள்ளை(மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பத்மதேவி(விசுவமடு)மற்றும் சண்முகதேவன் (சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்ட மாவட்ட ஆலோசகர், வவுனியா), பாமதேவன், பாஸ்கரதேவன்( லங்கா சீமெந்து லிமிடெட், ஓய்வுபெற்ற இயந்திரஇயக்குநர்,(விசுவமடு), காலஞ்சென்ற சத்தியதேவி ஆகியோரின் அன்புத் தாயும், , காலஞ்சென்ற லோகநாதன் (விசுவமடு) மற்றும் குகானந்தி, வசந்தராணி, காலஞ்சென்ற வசந்தராணி(ஆசிரியை, விசுவமடு) ஆகியோரின் அன்பு மாமியும், வற்சலன்(பொறியியலாளர்), துஸாந்தன்(ருகுணு பல் கலைக்கழகம்), நிரோஜா(மாணவி, யூனியன் கல்லூரி), காலஞ்சென்றவர்களான பர்மிகா, சர்மிகா, நிர்மிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(27.06.2013) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப் பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **சின்னத்தம்பி கந்தையா தேவதாசன்**

Rtd CTK.Cement Corporation K.K.S
Time officer lanka cement LTD K.K.S

கர்த்தருக்குள் நித்திரையடந்த அமரர் சின்னத்தம்பி கந்தையா தேவதாசன் அவர்களின் வாழ்வுக்கும் பணிக்குமான நன்றி செலுத்தும் வழிபாடு நாளை 29.06.2013 சனிக்கிழமை மு.ப 11.30 க்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இவ் வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய விருந்திலும் பங்குபற்றுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நியோட்டர் லேன், இணுவில் கிழக்கு,
இணுவில். T.P- 0217200006

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தசாமி (இளைப்பாறிய ஊழியர், இலங்கை மின்சாரசபை )

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி (இளைப்பாறிய ஊழியர் இலங்கை மின்சாரசபை) நேற்று (27.06.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து இலட்சுமி தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லன் -முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னப்பிள்ளையின் அருமைக் கணவரும் கௌரி, மங்களேஸ்வரி, காலஞ்சென்ற சசி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமலிங்கத்தின் மாமனும் தாரகனின் பேரனும் தவஞானம் (கலால் திணைக்களம்), கணேஸ் (நூலகர்), காலஞ்சென்றவர்களான நடேசன், குபேந்திரம் மற்றும் மகேந்திரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.06.2013 இன்று பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக கோப்பாய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## கொடிகாமம் பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு



தென்மராட்சி, ஜூன் 28

வரணிப் பகுதியில் சட்ட விரோதமாக வாகனங்களில்மணல் ஏற்றிச் செல்வதையும், தென்னந்தோட்டங்களில் இரவு வேளைகளில் தேங்காய் திருடப்படுவதையும் தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பொலிஸ்– பொது மக்கள் சந்திப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இரவு வேளைகளில் வாகனங்களில் வருவோர் வரணிப் பகுதியில் மணலை ஏற்றிச் செல்வதாகவும் இதனைத் தடுக்கச் செல்வோரை ஆயுதங்கள் கொண்டு கொலை அச்சுறுத்தல்கள் விடுப்பதாகவும், வாகனங்களில் வருவோர் தென்னந் தோட்டங்களில் அத்துமீறி நுழைந்து தேங்காய்களைப் பிடுங்கி எடுத்துச் செல்வதாகவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இவ்வாறான சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்தார். (வ-9)

# புங்குடுதீவு கிராம அலுவலர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

புங்குடுதீவில் கிராம அலுவலர் ஒருவரது அலுவலகத்தை தாக்கிச் சேதப்படுத்திய நபர்களை பொலிஸார் கைது செய்யாததைக் கண்டித் தும், தமக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியும் புங்குடுதீவு கிராம சேவையாளர்கள் நேற்று முதல் பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட வருகின்றனர்.

வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டு புங்குடுதீவு (ஜே/26) கிராம அலுவலர் பிரிவில் கடந்த 24 ஆம் திகதி தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

> “ குறித்த நபர் என்னை நீதிமன்றில் பிடித்துக் கொடுக்கப் போகிறாயா எனக் கேட்டது டன் அவருடன் கூட வந்த நபர் தகாத வார்த்தைகளால் கிராம சேவையாளரை ஏசியுள்ளார்.

அன்றைய தினம் பி.ப. 1.45 மணியளவில் கிராம அலுவலரது அலுவலகத்துக்குள் புகுந்த, நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒரு நபர், மது போதையில் கிராம சேவை யாளருடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த நபர் என்னை நீதிமன்றில் பிடித்துக் கொடுக்கப் போகிறாயா எனக் கேட்டதுடன் அவருடன் கூட வந்த நபர் தகாத வார்த்தைகளால் கிராம சேவையாளரை ஏசியுள்ளார்.

அதன் பின்னர் கிராம அலுவலரது அலுவலகத்திலிருந்த பிளாஸ்ரிக் கதிரையை உடைத்ததுடன், அங்கிருந்த ஆவணங்களையும் சேதப்படுத்தியுள்ளார். இது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் வந்த போதும், தாக்கிய நபர்கள் தப்பியோடி விட்டனர்.

இதுகுறித்து ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் இதுவரையில் எந்த வித நடவடிக்கைகளும் எடுக் கப்படவில்லை.

மேலும் புங்குடுதீவு கிராமத்திலுள்ள 8 கிராம சேவகர்க ளும் தாம் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியுள்ளதுடன் தமது அலுவலகத்திலிருந்து கடமையாற்ற மாட்டோம் எனத் தெரிவித்து பிரதேச செயலகத்துக்குச் சென்று கடமையாற்றுகின்றனர்.

இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (வ-5)

## நவசன அறிவகங்கள் நல்லூரில் விரைவில்

யாழ்ப்பாணம், ஜூன் 28

கணினி இணையம், தொலைநகல் போட்டோ பிரதி முதலிய வசதிகளை கிராமப்புற மக்கள் பெற்றுக்கொள்ளக்கூடியதான நவசன அறிவகங்கள் இரண்டு நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்திறந்துவைக்கப்படவுள்ளன.

திருநெல்வேலி கிராம அலுவலர் பிரிவு ஜே/114 கோண்டாவில் பிரிவு ஜே/118 பகுதி களில் ஜூலை மாத பிற்பகுதி யில் இந்த அலுவலகங்கள் திறந்து வைக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தெரிவித்தார்.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (வ-7)

## இரண்டாம்மொழி பயிற்சிநெறி

தென்மராட்சி, ஜூன் 28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி கல்விசாரா உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான இரண்டாம் மொழி பயிற்சிநெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் அதிபர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் தமது விண்ணப்பங்களை இன்று பிற்பகலில் வலயக் கல்வி அலுவலகத்தில் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தினால், இரண்டாம் மொழித் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டமும் இருமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன. பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பயிற்சி பெறுவோருக்கான மொழித் தேர்ச்சிப் பரீட்சைகள் வருடாந்தம் மார்ச், ஜூலை மாதங்களில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)

## பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி சங்க ஆண்டு விழாவும் நூல் வெளியீடும்

பளை, ஜூன் 28

பளை, பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் மூன்றாவது வருட நிறைவு விழாவும் 'தென்னங்கீற்று' நூல் வெளியீடும் நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கத் தலைவர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பச்சிலைப்பள்ளி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான முருகேசு சந்திரகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் க.தெய்வேந்திரனும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சி.சத்தியசீலனும், கௌரவ விருந்தினராக பச்சிலைப்பள்ளி எழுத்தாளர் சி.கருணாகரனும் கலந்து கொள்வார்.

விழாவில், பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 101 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கலும், சங்கத்தால் நடத்தப்பட்ட இல வச கணினிப் பயற்சியை நிறைவு செய்த 79 பேருக்கு, சான்றிதழ்கள் வழங்கலும் இடம்பெறுமென சங்கச் செயலாளர் க.சண்முகதாஸ் தெரிவித்தார். (வ-9)



சாவகச்சேரி நகரசபைப் பிரிவில் சுமார் 40 வருடங்களாகத் திருத்தப்படாது இருந்த உதயசூரியன் வீதியைப் புனரமைக்கும் பணி ஆரம்பமானது. சபை ஒதுக்கீட்டிலிருந்து வழங்கப்படும் 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியில் புனரமைப்பு செய்யப்படும் வீதியின் புனரமைப்புப் பணியை சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் த.சுதர்சன் ஆரம்பித்து வைத்தார். (வ-4)

## ஆலய உண்டியல் உடைத்துத் திருட்டு

தென்மராட்சி, ஜூன் 28

நாவற்குழி–கேரதீவு வீதியில் உள்ள தெருவடிப் பிள்ளையார் ஆலய உண்டியல் செவ்வாய்க்கிழமை இரவு இனந் தெரியாதோரால் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## ஆன்மிகச் சுற்றுலா

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்கள் இன்று வெள்ளிக்கிழமை ஆன்மிகச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த முதியோர்கள் மாதாந்தம் கடைசிவார வெள்ளிக்கிழமையில் குடாநாட்டில் உள்ள கோயில்களுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதனடிப்படையில் இன்று வெள்ளிக்கிழமை வடமராட்சி கிழக்கு நாகதம்பிரான் ஆலயம், மிருசுவில் கிறிஸ்தவ ஆலயம் போன்றவற்றுக்குச் சென்று வயோதிபர்கள் ஆன்மிக வழிபாட்டில் ஈடுபடுவார்கள். (ந-17)

# குழாய்க் கிணறுகளில் பொருத்த இந்தியாவிலிருந்து 'கைப்பம்பி'கள்

## தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில்



வலி. வடக்கு, ஜூன் 28

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட எட்டுக் குழாய் கிணறுகளுக்கும் இந்தி யாவில் இருந்து கொண்டு வரப்படும் 'கைப்பம்பி'கள் பொருத்தப்படவுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தலைவர் கு.பாலகிருஸ்ணன் தொவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் கைப்பம்பிகளைப் பொது இடங்களில் பொருத்துவதால் குறுகியகாலத்தில் அவை பழுதடைந்து விடுவதுடன் அதனை மீண்டும் யாரும் திருத்திப் பயன்படுத்தும் வாய்ப்பும் கிடைப்பதில்லை.

இதனால் தேவையற்ற முறையில் நிதி விரயம் ஏற்படுவதுடன் பணம் செலவு செய்தும் பொது மக்கள் பயன்பெற முடியாத நிலமையே காணப்படுகின்றது.

இத்தகைய நிலமையை போக்கும் வகையில் இலங்கை நீர் வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையுடன் தொடர்பு கொண்டதன் அடிப்படையில் தரமான கைப்பம்பிகளை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்து பொருத்துவதன் மூலம் நீண்டகாலத்துக்கு அவை பழுதடைய மாட்டா என்ற உத்தரவாதத்தை நீர் வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபை வழங்கியுள்ளது. ஒரு கைப்பம்பிக்கு ஒரு லட் சத்து 25 ஆயிரம் ரூபா செல விடவுள்ளதாகவும் விரைவில் எட்டுக் குழாய் கிணறுகளுக்கும் அவை பொருத்தப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டுக்கு விடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை விட 28 திறந்த கிணறுகள் புனரமைப்புச் செய்யப்பட்டு பொது மக்களுடைய பாவனைக்கு விடப்பட்டுள்ளதாகவும் திறந்த கிணறுகளுக்கும் தலா 90 ஆயிரம் ரூபா வீதம் 25 லட்சம் ரூபாவும் குழாய் கிணறுகள் எட்டுக்கும் 10 லட் [illegible] பட்டுள்ளது–என்றார். (வ-86)

## 'ரெட்லேடி' பப்பாசி செய்கையை குடாநாட்டில் விஸ்தரிக்க ஏற்பாடு



யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்.குடாநாட்டில் 'ரெட் லேடி' இன பப்பாசி செய்கையை மேலும் விஸ்தரிப்பதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதற்கென இந்தப் பப்பாசிக் கன்றுகளை கூடுதலாக விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[illegible] விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் ஊடாகக் குறித்த இன பப்பாசிக் கன்றுகளைப் பெற்று விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

கடந்த போகத்தின்போது குடாநாட்டில் 'ரெட் லேடி' இன பப்பாசி செய்கை பெரும் வெற்றியளித்துள்ளது.

இந்தச் செய்கைமூலம் விவசாயிகள் பெரிதும் நன்மையடைந்தார்கள் என்று திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செங்கல்லை உண்ணும் 85 வயதுப் பாட்டி




சென்னை, ஜூன் 28
உணவாக செங்கற்களை மட்டுமே நாளாந்தம் உண்டு உயிர் வாழ்கின்றார் 85 வயதானதொருபாட்டிதுத்துக்குடி குறிஞ்சி நகரை சேர்ந்தவர் சரஸ்வதி (வயது 85). அவரது கணவர் மாரியப்பன் 22 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்து விட்டார். தற்போது தனிமையில் வசித்து வரும் சரஸ்வதிப் பாட்டி, அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு தண்ணீர் எடுத்துக் கொடுத்து பிழைப்பு நடத்தி வருகிறார். அவரது உணவே செங்கல் மட்டும்தான், இதனால் இவரை செங்கல் பாட்டி என்றே அழைக்கின்றனர். தினமும் 1 முதல் 3 வரையிலான செங்கற்களை உண்டு வருகிறார். சிறுவயதில் செங்கலை சுவைக்க தொடங்கியுள்ளார் சரஸ்வதிப் பாட்டி. அதன் சுவை பிடித்துப் போகவே சிறிது சிறிதாக செங்கல்லை உண்ணத் தொடங்கி, தற்போது கண்ணில் எங்கு செங்கல் பட்டாலும் எடுத்து உண்ணத் தொடங்கி விடுகிறாராம். "85 வயதாகியும் என்னால் செங்கல்லை உண்ணாமல் இருக்க முடியவில்லை. திருமணத்திற்கு முன்னர் எனது பெற்றோரும், திருமணத்திற்கு பிறகு எனது கணவரும் என்னை திட்டினர். பசி காரணமாகவோ, வறுமை காரணமாகவோ இதை நான் செய்யவில்லை. நிறைய செங்கற்களை உண்டும் கூட எனது உடல் நிலை பாதிக் கப்பட வில்லை." என்று கூறுகின்றார் சரஸ்வதிப் பாட்டி. (ற)

## விபத்தில் தமிழகம் முதலிடம்

சென்னை, ஜூன் 28
இந்தியாவில் வீதி விபத்துக்கள் அதிகளவில் இடம் பெறும் பகுதியாக தமிழ்நாடு பதிவாகியுள்ளது. கடந்த வருடம் தமிழ்நாட்டில் 67 ஆயிரத்து 757 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் 16 ஆயிரத்து 175 பேர் விபத்துக்களால் உயிரிழந்துள்ளனர். அளவுக்கு அதிகமான வேகம், மதுபோதையில் வாகனம் செலுத்துதல், சாரதிகளுக்கு முறையான பயிற்சியின்மை, உள்ளிட்டவை விபத்துக்களுக்கான பிரதான காரணங்கள் என கண்டறியப்பட்டுள்ளன. (ற)

# தேர்தலில் பங்குகொள்ளுங்கள்

## காஷ்மீர் மக்களுக்கு பிரதமர் மன்மோகன் அழைப்பு



ஸ்ரீநகர், ஜூன் 28
ஜம்மு – காஷ்மீர் மாநில மக்கள் தேர்தல்களில் பங்கேற்று வளமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.
ஜம்மு–காஷ்மீர் மாநிலத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மன்மோகன் சிங், அங்கு மின் உற்பத்தி நிலையம் ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.
"தேர்தலில் பங்கேற்று நமது வருங்கால சந்ததிகளின் வாழ்க்கையை வளமாக்க ஜம்மு–காஷ்மீர் மக்கள் முன்வர வேண்டும். ஜனநாயக முறையில் காஷ்மீரில் பொறுப்பேற்கும் அரசு, அந்த மாநிலத்தின் பொருளாதார, அரசியல் முறைகளில் முன்னேற்றத்தைக் கொண்டு வர மாநில மக்கள் தான் உதவி செய்ய வேண்டும். அடித்தட்டு மக்கள் முதல், மேல்தட்டு மக்கள் என அனைவரும், பல்வேறு நிலைகளில் நடைபெறும் தேர்தல்களில் பங்கேற்க வேண்டியது அவசியம்" என்று அவர் மேலும் அங்கு குறிப்பிட்டார். (ற)

## தி.மு.கவுக்கான ஆதரவு குறித்து விளக்கமளிக்கிறது காங்கிரஸ்

சென்னை, ஜூன் 28
தி.மு.கவுடன் கூட்டணி தொடருவது குறித்து காங்கிரஸ் மேலிடமும் ஏ.கே. அந்தோனி தலைமையிலான தேர்தல் குழுவும்தான் முடிவு செய்யும் என்று காங்கிரஸ் கட்சி விளக்கம் அளித்தது.
தமிழகத்திலிருந்து மாநிலங்களவைக்கு வெற்றிடமாகவுள்ள ஆறு இடங்களுக்கு தேர்தல் நடைபெறுகிறது. அதில் ஓர் இடத்துக்கு தி.மு.க. வேட்பாளராக போட்டியிடும் கனிமொழிக்கு காங்கிரஸ் கட்சி ஆதரவளித்துள்ளது. அதையடுத்து, தி.மு.கவுடன் வரும் நாள்களிலும் கூட்டணி தொடருமா என்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் சந்தீப் தீட்சித்திடம் கேட்டபோது,
" தி.மு.கவுக்கு காங்கிரஸ் அளித்துள்ள ஆதரவை வேறு அர்த்தத்தில் புரிந்து கொள்ளக் கூடாது. தமிழக சட்டப்பேரவையில் காங்கிரஸுக்கு 5 உறுப்பினர்கள் உள்ளனர். மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் குறிப்பிட்ட கட்சியின் வேட்பாளரை ஆதரிக்கும் விஷயத்தில் மாநில குழு, அகில இந்திய தலைமையுடன் இணைந்து முடிவு செய்யும்.
அந்த வகையில் கனிமொழியை ஆதரிக்க இரு தரப்பும் சேர்ந்து முடிவு செய்துள்ளன. கூட்டணியைப் பொறுத்தவரை ஏ.கே. அந்தோனி தலைமையில் கட்சியின் தேர்தல் குழு உள்ளது. மாநில, மத்திய அளவில் நடைபெறும் தேர்தல்களில் எந்தக் கட்சியுடன் கூட்டணி அமைக்கலாம் என்பதை தேர்வு செய்து மேலிட ஒப்புதலுடன் அறிவிக்கும்.
கனிமொழிக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுதான் சுமத்தப்பட்டுள்ளது. அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்படவில்லை. அதை நீதிமன்றம் தான் தீர்மானிக்க வேண்டும். அந்த அடிப்படையில் அவருக்கு காங்கிரஸ் ஆதரவு தெரிவித்துள்ளது." என்று தெரிவித்தார் அவர். (ற)

## மக்களவை வாக்குப் பதிவு நிறைவு

சென்னை, ஜூன் 28
மாநிலங்களவைக்கு தமிழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 6 இடங்களுக்கான தேர்தலில் நேற்று மதியம் 1.43 மணியுடன் வாக்குப் பதிவு நிறைவடைந்தது. நேற்றுக்காலை காலை 9 மணிக்கு முறைப்படி தேர்தல் வாக்குப்பதிவு தொடங்கினாலும், காலை 11.25 மணிக்கு முதல்வர் ஜெயலலிதா வந்து தனது வாக்கைப் பதிவு செய்யும் வரை யாரும் வாக்களிக்கவில்லை.
பின்னர் அ.தி.மு.க. உறுப்பினர்களும்தொடர்ந்து தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோரும் வாக்களித்தனர். (ற)

ஈர விழிகளுடன் ஈராண்டு நினைவலைகள்





அன்னை மடியில் 11.05.1930 | அன்னை மடியில் 19.06.1925
அம்பிகை அடியில் 20.06.2011 | அம்பிகை அடியில் 18.02.2002

வள்ளுவனின் குறளுக்கு
வாழ்வு தந்து எம்மை
வாழவைத்த தெய்வங்கள்
இன்று இல்லை
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
தெய்வமாகிவிட்ட - உங்கள்
நினைவுகள் சுமந்து வாழ்கின்றோம்
எத்தனை பிறவிகள் எடுத்தாலும்
உங்களுக்கே பிள்ளைகளாக வர
வரம் அருள்வாய் நயினை நாகபூஷணியே!

அமரர் பொன்னர் வீரவாகு

அமரர் பூமணி வீரவாகு

"பூமணி அகம்",
7 ஆம், வட்டாரம், நயினாதீவு. (C/10123)(2.6.3)

நீங்கா நினைவுகளுடன்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80 ஆயிரம் படையினர் வீட்டுக்கு

## அமெ. தீர்மானம்

நியூயோர்க், ஜூன் 28
இராணுவத்தின் செலவினத்தைக் குறைப்பதற்காக 2017 ஆம் ஆண்டுக்குள் 80 ஆயிரம் படையினரை வீட்டுக்கு அனுப்ப உள்ளது அமெரிக்கா.

பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்கும் முயற்சியாகவே இந்த முடிவை எடுத்துள்ளது அமெரிக்கா.

இதுகுறித்து அமெரிக்க இராணுவத்தின் தலைமை அதிகாரி ஜெனரல் ரேமன்ட் ஓழிர்னோ கூறும்போது,

''அமெரிக்காவின் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்காக அரசு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, இராணுவத்துக்கு ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்பட்டு வருகிறது. சிக்கன நடவடிக்கையின்படி 2017ஆம் ஆண்டுக்குள் இராணுவத்தில் 80 ஆயிரம் பேர் பணி நீக்கம் செய்யப்படுவார்கள். இராணுவத்தின் 12 பெரிய படையணிகள் கலைக்கப்படும்.

இராணுவத் தலைமையகங்களின் எண்ணிக்கையும் குறைக்கப்படும். 12 ஆண்டு கால போர் நடவடிக்கைகளில் கிடைத்த பாடத்தின் அடிப்படையில் தீவிர ஆலோசனைக்குப் பிறகே இந்த 14 சதவீத ஆள் குறைப்பு குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.'' என்று தெரிவித்தார். (ற)



எந்த நேரமும் கொந்தளித்துக் கொண்டிருக்கும் ஜாவா தீவில் ஓர் எரிமலையின் அடிவாரத்தில் ஒரு இந்து ஆலயம். இந்தப் புகைப்படம் புவிசார் புகைப்படப் போட்டிக்காக திம் ஜென்கா என்ற புகைப்படக் கலைஞரால் எடுக்கப்பட்டது. (ற)

# நெருக்கடி நிலை நாட்டைப் பாதிக்கும்

## எகிப்து ஜனாதிபதி

கெய்ரோ, ஜன.28
நாட்டில் தொடரும் நெருக்கடியான சூழல்நிலை எகிப்தின் எதிர்கால செயற்பாடுகளை வெகுவாக பாதிக்கும் என ஜனாதிபதி முஹமட் முர்சி தெரிவித்துள்ளார்.

அளவுக்கு அதிகமான அதிகாரங்களை ஜனாதிபதி முர்சி பெற்றுக்கொள்வதாக எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் குற்றஞ்சாட்டி வருவதுடன், ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து எகிப்தில் தொடர்ந்தும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே முர்சி இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

# சுமுக உறவு வேண்டும்

## இந்தியா – பாகிஸ்தான் –ஆப்கன் ஆகிய நாடுகளை வலியுறுத்துகிறது அமெரிக்கா

நியூயோர்க், ஜூன் 28
இந்தியா, பாகிஸ்தான், ஆப்கன் ஆகிய நாடுகளுக்கு இடையே சுமுகமான உறவு நீடிக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இந்தியாவுக்கு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி பயணம் மேற்கொண்டு திரும்பிய பின்னர் அமெரிக்க வெளியுறவுத் துறை விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் பாட்ரிக் வென்ட்ரல்,

''இந்தவார ஆரம்பத்தில் இந்தியாவுக்கும் பயணம் மேற்கொண்டிருந்த வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரியின் பயண இலக்கு வெற்றிகரமாக முடிந்துள்ளது. இருநாடுகளுக்கிடையிலான எதிர்காலச் செயற்பாடுகள் குறித்த 4 ஆவது சுற்றுப் பேச்சுகளில் அவர் அங்கு கலந்து கொண்டிருந்தார்.

ஆப்கனில் அமைதி ஏற்படுத்துவது குறித்து இரு நாடுகளும் கலந்தாலோசித்தன. ஆப்கனுக்கு இந்தியா பொருளாதார ஒத்துழைப்பு வழங்கி வருவதை நாம் வரவேற்கின்றோம். அந்தப் பிராந்தியத்தில் அமைதி திருப்ப வேண்டும் என்பதே அமெரிக்காவின் விருப்பமுமாகும். அதேவேளை, இந்தியா - பாகிஸ்தான் - ஆப்கன் ஆகிய நாடுகளிடையே சுமுகமான உறவு நீடிக்க வேண்டும் என்றும் நாம் வலியுறுத்துகின்றோம்.'' என்று தெரிவித்தார். (ற)



## மண்டேலாவின் நிலை மோசம் மக்கள் பிரார்த்தனை

ஜொகன்னர்ஸ்பேர்க், ஜூன் 28
தென்னாபிரிகாவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் உடல்நிலை தொடர்ந்தும் மோசமடைந்திருப்பதாக தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில், அவர் பூரண குணமடைய வேண்டும் என்று உலகம் முழுவதும் உள்ள ஏராளமான மக்கள் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கின்றனர்.

நெல்சன் மண்டேலா பிறந்த கிராமத்தில், அவரது சகோதரியின் தலைமையில் கிராம மக்கள் நெல்சன் மண்டேலா குணமடைந்து வீடு திரும்ப வேண்டி பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

''அவர் எங்களுக்காக நிறைய செய்துள்ளார். அவருக்காக நாங்கள் பிரார்த்தனை மட்டும் தான் செய்கிறோம்'' என்று தென்னாபிரிக்க மக்கள் கூறுகின்றனர். (ற)

# சீனாவில் கலவரம்: 27 பேர் உயிரிழப்பு



பீஜிங், ஜூன் 28
சீனாவின் வடமேற்கு பகுதியில் உள்ள ஜின்ஜியாங் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கலவரத்தில் 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜின்ஜியாங் தலைநகர் உய்குரில் முஸ்லிம்களுக்கும், அங்கு குடியமர்த்தப்பட்டுள்ள ஹேன் சீன இனத்தவருக்கும் அவ்வப்போது மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் ஷான்ஷான் மாவட்டம், டுர்பன் பகுதியில் உள்ள காவல் நிலையங்கள், அரசு அலுவலகங்களில் புகுந்த மர்ம நபர்கள் பயங்கர ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சம்பவத்தின் போது பொலிஸ் வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டது. இந்த வன்முறைச் சம்பவங்களில் 9 பொலிஸார் உட்பட, பொதுமக்கள் 8 பேர் உயிரிழந்தனர். பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் கலவரத்தில் ஈடுபட்ட 10 பேர் உயிரிழந்தனர்.

தற்போது அந்தப் பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு, பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ற)

# குண்டுத் தாக்கு: 7 பேர் சாவு

கராச்சி, ஜூன் 28
பாகிஸ்தான், கராச்சி நகர் மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் 7 பேர் உயிரிழந்துள்ளதுடன், நீதிவான் உட்பட 9 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த நீதிவானின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என்று தெரிவித்துள்ள பொலிஸார், குறித்த குண்டுத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் இதுவரை உரிமை கோரவில்லை என்றும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகின்றது. (ற)

# ஸ்நோடனை ஒப்படைக்குமாறு மீள கோரிக்கை: முடிவில் மாறாத ரஷ்யா

நியூயோர்க், ஜூன் 28
ரஷ்யாவில் மொஸ்கோ விமானத்தளத்தில் தற்போது தங்கியுள்ள எட்வேர்ட் ஸ்நோடனை உடனடியாக தம்மிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்கா மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.


''ஸ்நோடன் விவகாரத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பாதிப்படையக் கூடாது என்று ரஷ்ய அதிபர் விலாடிமிர் புதின் தெரிவித்துள்ளார்.

''அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இருநாடுகள் இடையேயும் கைதிகள் தொடர்பான ஒப்பந்தங்கள் எதுவும் இல்லாதபோதும், ஸ்நோடனின் பயண ஆவணங்கள் மற்றும் அவர் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவரை நாடு கடத்துவதற்கு சட்டத்தில் இடமுண்டு.'' என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபை செய்தித் தொடர்பாளர் கெய்ட் லின் ஹைடன்.

''அண்மைக் காலங்களில் முக்கிய குற்றவாளிகள் சிலரை நாம் ரஷ்யாவிடம் ஒப்படைத்துள்ளோம். அதைக் கருத்தில் கொண்டு ஸ்நோடனையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும்'' என்று அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் பாட்ரிக் வென்ட்ரல் கருத்துத் தெரிவித்துள்ளார்.

எனினும், ஸ்நோடனை ஒப்படைக்க வேண்டும் என்ற [illegible] நிராகரித்ததுள்ளது.

கடந்த திங்கட்கிழமை ஹொங்கொங்கிலிருந்து வெளியேறிய ஸ்நோடன், ரஷ்யா-வெனிசுவேலா ஊடாக ஈக்குவடோர் சென்று தஞ்சமடைய திட்டமிட்டுள்ளார் என்று தெரியவருகின்றது. ஆனால் கடந்த 3 நாள்களாக ரஷ்யாவின் ஷெரிமெட்யெவோ விமான நிலையத்தில் ஸ்நோடன் தங்கி உள்ளார்.



இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ரஷ்ய வெளியுறவு விவகாரங்களின் குழுத் தலைவர் அலெக்சி புஷ்கோவ், ''ஸ்னோடெனை நாடு கடத்த வேண்டும் என்று ரஷ்யாவையும், கொங்கொங்கையும் அமெரிக்கா அச்சுறுத்தி வருகிறது. ஆனால் அந்த முயற்சி தோல்வியில் முடியும்'' என்று தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புங்குடுதீவு – மடத்துவெளி (வயலூர்) அருள்மி

## அதிசுந்தர புதிய மூன்றுதள இராஜகோபுர சகித புனராவர்த்தன சம்புரோக

# மஹாகும்பாபிஷேகப் பெருவி

### ஆசிச் செய்தி



புங்குடுதீவு மடத்துவெளியில் எழுந்தருளி இருந்து அருள் ஆட்சி புரியும் அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணிய பெருமானுக்கு இன்று மஹாகும்பாவிஷேக பெரும் சாந்தி விழா நடைபெறுவதனை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். குடமுழுக்குப் பெருஞ்சாந்தி இந்த ஆலயத்தில் நடைபெறுவது ஊருக்கும், மக்களுக்கும், ஆலயத்துக்கும் சிறப்பைத்தருவது ஆகும். இவ்வூரில் வாழும் மக்களுடைய வேண்டுதல்களை நிறை செய்கின்ற முருகப் பெருமானின் குடமுழுக்கைத் தரிசித்து அனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு.*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிய ஞானசம்பந்தபரமாசார்ய சுவாமிகள்.

### கனவு நனவாகிறது



எங்கள் குலதெய்வம் அருள்மிகு வயலூர் முருகனின் இராஜகோபுர கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மடத்துவெளி வாழ் மக்களின் நீண்டகாலக் கனவு இன்று நனவாகின்றது. ஆலய பரிபாலன சபையினரும் இவ்வூர் மக்களும் இணைந்து அழகிய மணிமண்டபத்துடனான மூன்று தளங்களைக் கொண்ட இராஜகோபுரத்தை நிர்மாணம் செய்து இன்றைய நன்னாளில் இவ் விழாவினை நடத்துகின்றனர். முருகனின் இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்று அடியார்கள் அனைவரும் வயலூர் முருகனின் அருளைப் பெற அவன் பாதங்களைப் பணிந்து வேண்டுகின்றேன்.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'

நல்லையா தர்மபாலன் (முன்னாள் அதிபர், புங்குடுதீவு மகாவித்தியாலயம்) திருப்பணிச் சபை, கனடா.

### மடத்து வெளியான் அருள் கிடைக்கட்டும்



வயலூர் முருகன் என வழங்கும் புங்குடு தீவு மடத்து வெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வு இன்று நடைபெறுகிறது. நீண்டகாலமாக புனரமைக்கப்படாது காணப்பட்ட எமது ஆலயம் அனை வரையும் அதிர்சிக்குள்ளாக்கும் வகையில் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. இதற்கென அரும் பாடுபட்ட எமதுதலைவர் அவர்களுக்கு வாழ்த்துக்களைக் கூறுவதுடன் நிதிப்பங்களிப்புகளையும் ஏனைய உதவிகளை வழங்கியவர்க ளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எமது ஆலயம் மேலும் பல புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டு சிறப்புற உங்கள் உதவிகளை வேண்டுவதுடன் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொண்டு எம்பெருமானின் ஆசியை பெற்றுக் கொள்ளுமாறு உங்களை அழைக்கின்றேன்.

நல்லதம்பி சசிதரன், பொருளாளர், ஆலய பரிபாலன சபை, ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயம், மடத்து வெளி, புங்குடுதீவு.

### கும்பாபிஷேகம் சிறக்கட்டும்



மடத்து வெளி ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமிகளின் கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்கு வதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். எமது முருகன் ஆலயம் கடந்த பல வருடங்களாக எந்த வித புனரமைப் புப் பணிகளும் செய்யப்படாது காணப்பட்ட போது அமரர் இராமநாதன் அவர்களின் முழுமையான நிதிப்பங்களிப் புடன் ஆலய புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகின. எனினும் அவரின் திடீர் மறைவினால் ஆலய புனரமைப்பு வேலலைகளை நிறுத்த வேண்டிய நிலை காணப்பட்டது. பின்னர் அவரது மருமகன் சே.சுந்தரலிங்கம் அவர் களினால் புனரமைப்பு பணிகள் முன் எடுக்கப்பட்டன. இந்த நிலையில் கனடாவிலிருந்து வருகை தந்த ஆ.சண்முக நாதன் அவர்கள் புனரமைப்புப் பணி முழுவதையும் பொறுப்பேற்று திறம்பட மேற்கொண்டு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. அனைத்து வழிகளிலும் உதவிய முருகன் அடியார்கள் அனைவருக்கும் எம்பெருமானின் ஆசி கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து, கும்பாபிஷேக நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

கா ர் சம் சதீ பன் ஜே.பி, செயலாளர், ஆலய பரிபாலன சபை, ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயம், மடத்துவெளி, புங்குடுதீவு.

### முயற்சி திருவினையாக்கும்



புங்குடுதீவு மடத்துவெளி பாலசுப்பிரமணிய சுவாமி ஆலய இராஜகோபுர சகித புனராவர்த்தன மகா கும்பா பிஷேகம் சிறப்புற நடைபெற முருகன் திருவருளை வேண்டி ஆலய திருப்பணி வேலைகளில் தங்களை முற்று முழுதாக ஈடுபடுத்திய திருப்பணிச்சபையினரை வாழ்த்தி, முயற்சி திருவினையாக்கும் என்ற வாக்கியத்தின் படி இவ்வூர் மக்களாலும் புலம் பெயர்ந்து வாழும் வயலூர் முருகனின் அடியார்களின் நிதியுதவியுடனும் அமைக்கப் பட்டுள்ள முத்தள இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற முருகப்பெருமானை வேண்டிநிற்கின்றேன்

சேனாதிராசா சுந்தரலிங்கம், பொதுப்பிரதிநிதி, ஆலயபரிபாலனசபை,

### மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிர

புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோயில் ஆரம்ப காலத்தி
நுழைந்ததும் முதலில் வரும் கிராமம் மடத்துவெளி. இக்கிராமதினுள் நுழைந்தது
நெல் வயல்களின் நடுவே கிழக்கு நோக்கி சிங்காரமாய் கோலோச்சும் முருகப்
எழுந்து நிற்கும் சிற்பத் தேர் முட்டியின் பின்னே பனங்கூடலின் பின்னணியி
இளந்தாரி நாச்சிமார் கோயில் என்ற தொன்மைப் பெயரை கொண்ட இவ்வால
ஆண்டுகளுக்கு முன்னே வள்ளி நாச்சியார் அயல் கிராமத்தில் இருந்து மடத்துவெ
நாச்சியார் மணமகன் வீட்டில் மூன்றுநாள் தங்கி வழமைப்படி இருந்தார். மூன்
போது வயிலின் உரிமையாளர் நீர் புகுந்த வீடு எம்மோடு சேர்ந்து வாழும் தகுதி
நாச்சியார் அதே இடத்திலேயே தனது தாலியை கழற்றி அந்த வயல் வரம்பில்
வீட்டுக்கு சென்று விட்டார். இதனைக் கண்ட இவரது கணவர் அன்றுமுதல் அ
வழிபட்டு தானும் மறுமணம் செய்து வாழ்ந்து வந்தார். வள்ளி நாச்சியார் தனது
இடத்தில் ஓர் ஆலயத்தை வைத்து வழிபட்டார். அந்த ஆலயம் வல்லன் இழு
கின்றது. மடத்துவெளி நாச்சிமார் கோயிலின் தெற்கில் ஓர் அரசமரம் நின்றது.
அரச மரத்தின் வேரானது நீளமாக பக்கத்தில் இருந்த சுண்ணாம்பினால் ஆன
கால் உருவில் வேர் படர்ந்திருந்ததாகவும் இந்த அதிசயத்தை பார்க்க மக்கள்
வயோதிப மாது இந்த வேரை முறித்துக்கொண்டுபோய் தன் வீட்டுக் கூரையி
வரலாறு கூறுகின்றது.

இவ்வாலயம் 1960 ஆம் ஆண்டு காலத்தில் புனரமைக்கப்பட்டு அதன்
இக்காலத்தில் இவ்வாலயத்திலிருந்த பொருள்கள் திருட்டுப் போய்விட்டன.
காட்ட வேண்டும். அதுவரை நான் ஆலயத்தைத் திறக்கவும் மாட்டேன்.
சென்றுவிட்டார். அதிகாலையில் பார்த்த போது திருட்டுப்போன பொருள்கள் அ
இருக்கக் காணப்பட்டது. அதன் பின்னர் ஆலயம் திறக்கப்பட்டு விளக்கு வைக்க
வர்த்தகர் வி.அருணாசலம் பொறுப்பேற்ற பின்னர் முற்றுமுழுதாக ஆலயம் புனரம
மூலையில் நாச்சியாரின் விக்கிரகமும் பிரதிஸ்டை செய்யப்பட்டு ஆலயத்தின்
நல்லூர் என்று செல்லமாக அழைக்கப்படும் இந்த ஆலயத்தில் நல்லூர் ஆல
அத்தோடு இவ்வாலயத்தின் திருவிழாக்கள் மிகக் கட்டுப் பாட்டுடன் முறையான
சலத்தைத் தொடர்ந்து இ.குலசேகரம்பிள்ளை, ஆசிரியர் .க.தியாகராசா, ஆசிரியர்
தொடர்ந்து வி.இராமநாதன் வர்த்தகர் பொறுபேற்றார். இவரது முயற்சியில் இவ்
முதலாக முற்றிலும் சித்திர வேலைப்பாட்டில் முடி வரை அமையப்பெற்ற நல்லூர் ஆ

பிரபல வர்த்தகர் அ.மாணிக்கம் மனைவியின் நினைவாக ஓர் அன்னதான ம
பணி 'அமுதகலசம்' என்னும் நாமமிட்டு நடத்தப்பட்டு வருகின்றது. வர்த்கர் ப
நடத்தி வருகிறார்.

திருவெம்பாவை அதிகாலை 4 மணிக்கு ஆரம்ப மணியோசையுடன் தொட
கச்சேரி, கூட்டு வழிபாடு என வரிசையாக நடைபெற்று காலை ஆறரைக்கு முடி
மன்றத்தினர் அதிகாலையிலேயே சங்கு, சேமக்கலம் சகிதம் கிராமந்தோறும் ப

இந்தப் பணியைப் பொறுப்பாக நான்கு தசாப்தமாக நடத்தி வந்த பெருமை

1991 காலப் பகுதியில் பெரும்பாலான மக்கள் இடம்பெயர ஆலயம் பெ
கு.கிருபானந்தன் செயலாளராகவும், திருமதி கி.சவுந்தரநாயகி பொருளாளரா
காலங்களில் தம்பிப்பிள்ளை என்பவர் தானே தனித்து ஆலயத்தை துப்பரவு செ
மீண்டும் நித்திய, நைவேத்திய கிரியைகள் நடைபெற்று வருகின்றன. அ
ராஜகோபுரத்தினை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் வேளையில் வி.
பொதுச்சேவையில் வரலாறுகளை பதிக்கும் மடத்துவெளி இளைஞர் மீண்டு
தலைவராக அ.சண்முகநாதன், செயலாளர் செல்வன் க.சதீபன், பொருளா
மறுமலர்ச்சிகாலமெனலாம். உலகெங்கும் பரவிவாழும் மடத்துவெளி இளம் த
சிறப்புப் பெறும் என நம்புவோமாக! ***


## ★★★★★ பிரசுர அனுசரணை

**மகிழன்**
பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி,
3 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

**அம்பாள்**
களஞ்சியம்
பிரதான வீதி,
முதலாம் வட்டாரம்,
புங்குடுதீவு.

**கிருபா**
சைக்கிள் வேக்ஸ்
பிரதான வீதி,
முதலாம் வட்டாரம்,
புங்குடுதீவு. 077 400 7223

**புண்ணியமூர்த்தி**
சைவ உணவகம்
பிரதான வீதி,
முதலாம் வட்டாரம்,
புங்குடுதீவு.

**சீதா**
சுவையகம்
பிரதான வீதி,
மூன்றாம் வட்டாரம்,
புங்குடுதீவு.

**புங்குடுதீவு தனியார் பேருந்து சேவையாளர் சங்கம்**
பிரதான வீதி,
முதலாம் வட்டாரம்,
புங்குடுதீவு.

**மகாமாரி**
சைவ உணவகமும்
குளிர்பான விற்பனையகமும்
பிரதான வீதி,
வங்களாவடிச் சந்தி,
வேலணை.
[illegible]


**ராஜலஷ்மி**
கட்டடப் பொருள்
விற்பனையகம்
132, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**சிவகாமி**
ஸ்ருடியோ
அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
077 297 4441

**பவித் டிஜிற்றல் விசன்**
போட்டோ & வீடியோ
யாழ்ப்பாணம்.
077 210 5350

**அரி**
சவு
சேவி
ஆறாம் வ
வேலணை
வேலன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயம்

## ...புரோக்ஷண மருந்து சாத்தி (அஷ்டபந்தன) நவ(9) குண்ட பக்ஷ பிரதிஷ்டா

# ...நம் சாந்தி விழா – 28.06.2013

### ...லசுப்பிரமணியர் ஆலய வரலாறு

...ஆரம்ப காலத்தில் நாச்சிமார் கோயில் என்றே அழைக்கப்பட்டது. புங்குடுதீவினுள்
...னுள் நுழைந்ததும் பிரதான வீதியின் வலது புறம் நெடுகிலும் பச்சைப் பசேலென்ற
...லாச்சும் முருகப் பெருமானின் அழகுமிகு திருத்தலம் காட்சியளிக்கும். கம்பீரமாய்
...ன் பின்னணியில் அருள் புரியும் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் எழுந்தருளி இருக்கிறார்.
...ண்ட இவ்வாலயம் சுமார் நானூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்ததாகும். நானூறு
...இருந்து மடத்துவெளி கிராமத்தைச் சேர்ந்தவரை திருமணம் செய்தார். மணமகளான
...இருந்தார். மூன்றாம் நாள் காலை நாச்சியார் முன்புறம் உள்ள வயலில் இறங்கிய
...ந்து வாழும் தகுதி அற்றது என்று ஏளனம் செய்தார். இதனைக் கேட்டு கவலையுற்ற
...வயல் வரம்பில் ஒரு கல்லின் மீது வைத்து சிரட்டையால் மூடிவிட்டு தனது பிறந்த
...அன்றுமுதல் அதே இடத்தில் அந்தக் கல்லை வைத்து ஒரு கோயிலை உருவாக்கி
...நாச்சியார் தனது பிறந்த ஊருக்கு சென்று அங்கே உள்ள இழுப்பண்ணை என்னும்
...ம் வல்லன் இழுப்பண்ணை நாச்சிமார் கோயில் என இப்போதும் அழைக்கப்படு
...சமரம் நின்றது. அங்கே பாம்பு ஒன்று வாழ்ந்து வந்தாகவும் கூறப்படுகின்றது. இந்த
...ம்பினால் ஆன கோயில் சுவரில் பாம்பு வாழ்ந்த ஓட்டையினருகே ஒரு மனித கை
...த பார்க்க மக்கள் கூடத் தொடங்கியதும் அக்கிராமத்தைச் சேர்ந்த பூரணம் என்ற
...வீட்டுக் கூரையின் மேல் எறிந்துவிட அவ்வீடு அன்றிரவு எரிந்து சாம்பலானதாக

...க்கப்பட்டு அதன் உரிமையாளராக வேலுப்பிள்ளை சபாபதி இருந்து வந்தார்.
...போய்விட்டன. இதனால் கோபம் கொண்ட சபாபதியார் "எனக்கு திருடனைக்
...ம் மாட்டேன். விளக்கு வைக்கவும் மாட்டேன்" என்று ஆலயத்தைப் பூட்டிச்
...ன பொருள்கள் அத்தனையும் ஆலய முன்றிலில் வைக்கப்பட்டு கற்பூரம் கொளுத்தி
...விளக்கு வைக்கப்பட்டது. இவரது வறுமை காரணமாக தொடர்ந்து இவ்வாலயத்தை
...க ஆலயம் புனரமைக்கப்பட்டது. மூலஸ்தானத்தின் உள்ளே வேலாயுதமும் வடமேற்கு
...டு ஆலயத்தின் பெயரும் பாலசுப்பிரமணியர் கோயில் என்றும் மாற்றப்பட்டது.சின்ன
...ல் நல்லூர் ஆலயம் போன்றே சரியான நேரத்தில் பூஜை நடைபெற்று வருகிறது.
...டுடன் முறையான சைவ விதிமுறைக்கு ஏற்ப நடைபெறுவது வழக்கம். வி. அருணா
...கராசா, ஆசிரியர் ப.பாலசுப்பிரமணியம், வே.சுப்பிரமணியம் தபாலதிபர் இவர்களைத்
...முயற்சியில் இவ்வாலயத்தில் எழுபதுகளின் ஆரம்பத்தில் புங்குடுதீவிலேயே முதன்
...பெற்ற நல்லூர் ஆலயத்தேரை ஒத்ததான சித்திரத் தேர் வீதியுலா வந்து பெருமை பெற்றது.
...ர் அன்னதான மண்டபத்தை அமைத்துக் கொடுத்துள்ளார் 1987முதல் அன்னதான
...ன்றது. வர்த்கர் பா.பாலசுந்தரம் தாகசாந்தி நிலையத்தை திருவிழாக் காலங்களில்

...சையுடன் தொடங்கி திருப்பள்ளி எழுச்சி பாடி துயில் எழுப்புதல், மங்கல வாத்தியக்
...ஆறரைக்கு முடிவுறுதல் வரலாற்றுப் பதிவாகும். இதே காலத்தில் கூட்டு வழிபாட்டு
...கிராமந்தோறும் பள்ளி எழுப்பும் தொன்மை வாய்ந்த நிகழ்வை மேற்கொள்வர்.
...தி வந்த பெருமை வர்த்தகரான கந்தையா அம்பலவாணரையே சாரும்.
...யர ஆலயம் பொலிவிழந்து போனது. பின்னர் சோ.சிவலிங்கம் தலைவராகவும்,
...கி பொருளாளராகவும் கொண்ட புதிய பரிபாலன சபையும் உருவாகியது. பின் வந்த
...தை துப்பரவு செய்து தினமும் விளக்கேற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. 2002 முதல்
...வருகின்றன. அண்மைக்காலமாக இந்த ஆலயத்தினை மீள் நிர்மாணம் செய்து
...வேளையில் வி.இராமநாதன் அவர்கள் முருகனடி சேர்ந்தமை துரதிர்ஷ்டமானது.
...இளைஞர் மீண்டும் 2012 பங்குனி மாதம் நடைபெற்ற புதிய நிர்வாகத்தில் புதிய
...தீபன், பொருளாளர் ந.சசிதரன் தெரிவுசெய்யப்பட்டமை முருகன் ஆலயத்தின்
...துவெளி இளம் தலைமுறையினரால் இனி வருங்காலங்களில் இவ்வாலயம் மேலும்

### முருகனின் அருள் மழை பொழியட்டும்





அருள் மிகு மடத்து வாசல், பாலசுப்ரம்மண்யர் திருக்கோயில் திரு மஞ்சன குடமுழுக்கு, பெருஞ் சாந்தி விழா நிகழும் மங்கலகரமான விஜய வருடம் ஆனி மாதம் 14 ஆம் நாள் இன்று (28.06.2013) வெள்ளிக்கிழமை காலை 9.20 மணி முதல் 10.25 மணி வரையும் வரும் சிங்கலக்ன சுப முகூர்த்த வேளையில் பாலசுப்பிரமணிய சுவாமிக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகின்றமை நம் எல்லோருடைய பூர்வ புண்ய பலனினாலேயாகும். அவன் அருளால் அவன் தாள் வணங்கி இக் கும்பாபிஷேகத்தை சிறப்புற நடத்தும் ஆலய பரிபாலகர் குடும்பத்தாருக்கும் நிர்வாக சபையினர், திருப்பணிகள் செய்தோர், பெரும் சாந்தியில் பங்கு கொண்ட அனைவருக்கும் முருகப்பெருமானின் திருவருள் கிடைக்க பிரார்த்திப்பதோடு அமரர் வீ.ஆர்.இராமநாத பெருந்தகையாருடைய பெருவிருப்போடு நிர்வாகத் திறனும் முருகனிடத்தே வைத்த பக்தியும் புங்குடுதீவு மக்களின் நன்மனத்தினால் முருகன் திருவருள் இக் கும்பாபிஷேகத்தை இனிதே நிறைவேற்ற துணை நின்றது. வள்ளிதேவசேனா சமேத முருகப்பெருமான் எல்லோரையும் வளமோடு வாழ வாழ்த்துவதோடு இந்தஆலயம் புதுமைப்பொலிவும் நித்திய நைமித்திய பூஜைகள், விழாக்கள் எல்லாம் காலம் தவறாது நிகழவும் முருகன் திருவருளை பிரார்த்திப்பதோடு, வேண்டிய வரங்களைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

கும்பாபிஷேக சர்வபோதக சிவாச்சாரியார் வை.மு.ப.முத்துக்குமாரசாமி நயினை ஆதீன பிரதம சிவாச்சாரியார்
பிரதிஷ்டா பிரதம சிவாச்சார்யார் சிவஸ்ரீ முத்துபாலகுமாரசாமி சிவாச்சாரியார்
(சிவாகம ஸாகரர்,சிவநெறிச்செம்மல், சிவாகமபானு, சாிதபூபதி)

### வழிபட்டு அருள்பெறுக



புங்குடுதீவு மடத்துவெளிக்கிராமத்தில் வயலூர் சேஷ்திரத்தில் வீற்றிருந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பக்தி,காலம்,நேரம் தவறாது பூசைகள் நடைபெற்ற ஆலயம் நாட்டின் சூழ்நிலையால் 22 ஆண்டுகளுக்குப் பின்னர் மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. முருகன் அடியவர்கள் வந்து வழிபட்டு அருள் பெற்றுய்யுமாறு ஆசி கூறி கும்பாபிஷேகம் இனிதே நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிவஸ்ரீ ஸ்ரீநிவாச அருணோதய சிவாச்சாரியார், ஆலய பிரதம குரு, ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயம், மடத்துவெளி, புங்குடுதீவு.

### தன்னை அழகுபடுத்த என்னை அழைத்தான்



வயலூர் முருகன் என வழங்கும் ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமிகளின் அருளால் எமது ஆலயம் புதுப் பொலிவு பெற்று மூன்று தள இராஜகோபுரம் அமைக்கப்பட்டு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. என்னைக் கனடாவில் இருந்து அழைத்து தன்னை அழகான ஆலயத்தில் குடியமர்த்துவதற்கு வயலூர் முருகன் ஆசி வழங்கியதன் பிரகாரம் எனது தலைமையிலான பரிபாலன சபையினரின் பூரண ஒத்துழைப்புடனும் வெளிநாட்டு வாழ் எமது கிராம மக்களினதும் உள்ளூர் மக்களினதும் நிதிப்பங்களிப்புடன் இன்று ஆலயம் புதுப் பொலிவு பெற்றுள் ளது. இதற்காக எனக்கு ஆசி வழங்கிய ஸ்ரீபாலசுப்பிரமணிய சுவாமியை வணங்கித் தொழுவதுடன், திட்டமிடப் பட்டுள்ள புனரமைப்புப் பணி கள் எண்ணியபடி நிறைவு செய்வதற்கு அவனின் ஆசியை வேண்டிநிற்கின்றேன்.எம் பெருமானின் மகா கும்பாபிஷேக தினத்தில் கலந்து கொண்டு அவனின் அருளாசியைப் பெற்றுக் கொள்ளுமாறு உங்கள் அனைவரையும் வேண்டிநிற்கின்றேன்.

அருணாச்சலம் சண்முகநாதன், தலைவர், ஆலய பரிபாலன சபை, ஸ்ரீ பால சுப்பிரமணிய சுவாமி ஆலயம், மடத்துவெளி புங்குடுதீவு.

### ஆசிச் செய்தி



அற்புதமாக ஆனந்தமயமாக எந்தமயமும் கந்தமயமாக காட்சியளிக்கின்ற புங்குடுதீவு - மடத்துவெளி பால சுப்பிரமணிய ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேக மலருக்கு ஆசியுரை வழங்குவதையிட்டு அகமகிழ்கின்றேன். யாழ்ப்பாணத்தின் தென் பகுதியில் கடலும் கடல்சார்ந்த நெய்தல் நிலத்தில் வள்ளி தெய்வானை சமேதராய் இருந்து அருளாட்சி புரிகின்ற கந்தப் பெருமாளுக்கு குடமுழுக்குக் காண்பது இக்கிராமத்துக்குக் கிடைத்த சிறப்பாகும். இந்த ஆலயத்தின் முகப்பிலே அமைக்கப்பட்டுள்ள இராஜகோபுரமானது கம்பீரமாக, வானுயர்ந்து நிற்கின்ற அழகு எம்மை மெய்மறக்கச் செய்கின்றது. மேலும், இந்த ஆலயத்தின் மணிமண்டபம், பரிவாரக் கோயில்கள் கலை நுட்பத்துடன் அமைக்கப்பட்டு சிறப்புற்று விளங்குகின்றன. குறைவில்லாத நிறை செல்வம் தரும் பாலசுப்பிரமணியனின் குடமுழுக்குத் திருநாள் சிறக்கவும் இந்த நிகழ்வைக் காணும் அடியவர்கள் அனைவரும் எம் பெருமானின் திருவருள் பெறவும் வாழ்த்தி ஆசிகளைக் கூறி நிற்கின்றேன்.

திருமதி மஞ்சுளாதேவி சதீசன், பிரதேச செயலர், வேலணை.

(C/10116)(2.6.3)


## ...சரணையாளர்கள்

**நேசன்**
புடைவையகம்
பிரதான வீதி,
முதலாம் வட்டாரம்,
புங்குடுதீவு.

**வரதா**
பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி,
இரண்டாம் வட்டாரம்,
புங்குடுதீவு.

**தேனு**
பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி,
11 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

**ரமேஸ்**
போட்டோ &வீடியோ
5 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு, யாழ்.
077 616 3349

**ஜனகன்**
பல்பொருள் வாணிபம்
4 ஆம் வட்டாரம்,
தம்பர் கடைச் சந்தி
புங்குடுதீவு.

**அரிகரா சவுண்ட் சேவிஸ்**
ஆறாம் வட்டாரம்
வேலணை மேற்கு,
வேலணை.

**V.S. மல்ரி விஷன்**
கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

**N.S. ரேடர்ஸ்**
05, ஆஸ்பத்திரி வீதி,
மாவத்தகம,
குருணாகல்.

**ஸ்ரீ காந் விநியோகஸ்தர்கள்**
(ஆச்சி தயாரிப்பின் ஏக விநியோகஸ்தர்கள்)
1209, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
077 292 7697

**ஆஞ்சநேயர்**
முச்சக்கரவண்டி சேவை
பிரதான வீதி,
வங்களாவடிச் சந்தி,
வேலணை.
077 297 4441

**S.A.S. ஸ்ரோர்ஸ்**
சிவன் கோயில் அருகில்
மூன்றாம் வட்டாரம்,
புங்குடுதீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட சி.க.கூ.சங்கத்தில் விதவைகள் தினம்

நெதர்லாந்து கூட்டுறவு மனிதநேய அமைப்பின் உதவியுடன், யாழ். மாவட்ட சி.க.கூ.சங்கங்களின் சமாசம் சர்வதேச விதவைகள் தினத்தை கடைப்பிடிக்கவுள்ளது.

இந்த நிகழ்வு சமாசப் பணிமனையில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதனும் சிறப்பு விருந்தினராக கூட்டுறவு சபைச் செயலர் திருமதி வே.செல்வரத்தினமும் கலந்து கொள்வர். நிகழ்வில் 15 பிரதேச செயலகங்களில் உள்ள சி.க.கூ.சங்க உறுப்பினர்களில் கணவனை இழந்த 100 உறுப்பினர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ந)

## நூல் வெளியீட்டு விழா அழைப்பு



இன்று பிறந்தநாள் காணும்
**சு.வரதகுமாரின்**
மனவடுக்கள் (கவிதைத் தொகுப்பு)
மனமேபேசு (குறுநாடகத் தொகுப்பு)
சிந்தித்தால் துன்பமில்லை (சிறுவர்கதை)
ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா
வவுனியா நகரசபை மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம். AVR movie

## வாழ்த்துகிறோம்



எமது பாடசாலையின் அதிபர்
**சுப்பையா அமிர்தலிங்கம்**
அவர்கள்
01.01.2006 முதல் இலங்கை அதிபர் சேவை தரம்-I இற்கு (SLPS-I) பதவி உயர்வு பெற்றமையையிட்டு பாடசாலைச் சமூகத்தினராகிய நாம் அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

பாடசாலைச் சமூகம்
வவுனியா நெளுக்குளம் கலைமகள் ம.வி

ஒன்பது வருடங்களின் பின்னர் மீண்டும்
## திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
## ஞானசௌந்தரி
**(இசை நாடகம்)**

1991 ஆம் ஆண்டிலும், 2004 ஆம் ஆண்டிலும் திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் யாழ்நகரில் மேடையேற்றப்பட்டு அனைவரது மனங்களிலும் நிறைந்து பாராட்டுக்களைப் பெற்ற
**ஞானசௌந்தரியை**
மீண்டும் ஒருமுறை பார்த்திட அரிய சந்தர்ப்பம்

காலம்: ஜூன் 30, ஜூலை 01. 2013 (ஞாயிறு, திங்கள்)
நேரம்: மாலை 6.45 மணி
இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு

ஆசனங்களுக்கான பதிவுகளை யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
திருமறைக்கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2393

# நடமாடும் பற்சிகிச்சை முகாம்

பருத்தித்துறை, ஜூ9ன் 28

பருத்தித்துறை பாடசாலை மாணவர்களுக்கு பல் சிகிச்சைக்கான நடமாடும் சேவை ஒன்று அண்மையில் தும்பளை சைவப் பிரகாச வித்தியா சாலையில் இடம்பெற்றது.

521 படைப் பிரிவினரின் ஏற்பாட்டில் மந்திகை வைத்தியசாலை பல் சிகிச்சை வைத்தியர்களின் பங்களிப்பில் இச் சிகிச்சை முகாம் இடம்பெற்றது.

மந்திகை வைத்தியசாலை பல் சிகிச்சை வைத்தியர் எஸ்.செந்தில் குமரன் உட்பட்ட 521 படைப் பிரிவின் அதிகாரிகள் கலந்து கொண்டதுடன் பருத்தித்துறை பிரதேச பாடசாலை மாணவர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (வ-122)

### விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய டாசோன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 744 8689

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாநகரசபை பிரதேசம், திருநெல்வேலி போன்ற இடங்களிலிருந்து சகல வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 779 2713

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1971 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பிறந்த செவ்வாய்க் குற்றமற்ற பட்டதாரி அரச தொழில் புரியும் மணமகளிற்கு மணமகன் தேவை.
தொடர்பு: 077 868 9460

### மலிவு விற்பனை

கட்டடத் தொழிலுக்குரிய, தச்சுத் தொழிலுக்குரிய, Tiles வேலைக்குரிய பழைய, புதிய Electrical Tools, தையல் இயந்திரங்கள் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 825 9052, 021 321 6096

### வீடு தேவை

சிறிய குடும்பத்திற்கு யாழ்நகரில் இருந்து 5km தூரத்திற்குள் வீடு வாடகைக்கு அல்லது விலைக்கு தேவை.
தொடர்பு: 077 301 3700

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)
**வட்டாரம்: 05**
**ஆதன இலக்கம் : 20**
**கல்லூண்டாய் றோட்**

வட்டாரம் 05 கல்லுண்டாய் றோட், ஆனைக்கோட்டை ஆதன இலக்கம் 20 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம்,யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி, மானிப்பாய் கோவில்பற்று ஆனைக்கோட்டை இறை 'எருக்கலம்பிட்டி' என்னும் பெயருள்ள விஸ்தீனரணம் நிலப்பரப்பு 01குளி16.28 கொண்ட ஆதனம்) இவ் ஆதனமானது யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காந்த லிங்கம் பொன்னம்பலம் என்பவர்களால் அறுதி உறுதி மூலம் சிவஞானம் பெண் நந்தினி ஆகிய இவர்களுக்கு குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் மாணிக்கம் தியாகராசா முகதாவில் நிறைவேறிய 14486 ஆம் இலக்க 24.07.2012 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதன மானது தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக் கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார்கள். இந்த 'எருக்கலம்பிட்டி' நிலப்பரப்பு 01குளி16.28 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாள்களுக்குள் கோரப்படாத விடத்து இவ்வாதனம் சிவஞானம் பெண் நந்தினி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்,
வலி.தென்மேற்கு பிரதேசசபை
மானிப்பாய்.

## கிராபிக்ஸ், அனிமேஷன், மல்டிமீடியா பயிற்சிகளுக்கான புலமைப்பரிசில்

Win 65% Scholarship



**மல்டிமீடியா புலமைப்பரிசில்**
பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்
விரும்பிய மொழியில் பரீட்சை
அடிப்படைத் தகைமை Grade 10
வினாத்தாள் 30 நிமிடங்கள் மட்டுமே
கலை, சினிமா, பொது அறிவு வினாக்கள்
இலவச பாடநூல்கள் (இந்தியா)
பயிற்சி முடிவில் இந்திய சான்றிதழ்கள்
தவணைமுறை கட்டண வசதி

இலவச புலமைப்பரிசில் பரீட்சை
July 6th & 7th

100% PRACTICAL

Softview Multimedia Specialist Program
- Digital Pre-press
- Digital Video Production
- Graphics Design
- AutoCAD ( 2D & 3D)
- Mastering Multimedia

Softview Animation Specialist Program
- 2D & 3D Animation
- Cartoon Animation
- Web Animation
- MAYA Animation
- Graphics & Animation

இலவச அனுமதிகளை அருகிலுள்ள பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளுங்கள்.

CSC-ASIAN COMPUTER EDUCATION

| யாழ்.நகரில் | சாவகச்சேரியில் | வவுனியா |
|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, T.P : 021-222 5677 | கட்டுக்காணி வீதி T.P : 021-2270267 | குருமண்காடு சந்தி மன்னார் வீதி T.P : 021-2262399 |

## பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது நீதிமன்றத்தில் பேச்சு மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றும்
**நடராஜா திருக்குமாரன்**
அவர்கள் சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளராக (தமிழ்/சிங்களம்) சாவகச்சேரி கௌரவ மாவட்ட நீதிபதி செ.லெனின்குமார் அவர்கள் முன்னிலையில் 2013.06.14 ஆம் திகதியன்று சத்தியபிரமாணம் செய்தமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் ஏற்கனவே (BA-Second Upper) (MA) முதுகலைமாணி இளம் சைவப்புலவர், சைவப்புலவர் போன்ற பட்டங்களைப் பெற்றமையைப் போல மேன்மேலும் பல பட்டங்களைப் பெறப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best

**வாழ்த்துவோர்:**
**நலன்புரி சங்கம், மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்.**
**பருத்தித்துறை.**
(37620)(3.6.11)

## ஷஷ்டியப்த பூர்த்தி விழா அழைப்பு
(மணிவிழா)

கற்புலத்து மனோன்மணி அம்பாள் துணை



பேரன்புடையீர் !

நிகழும் விஜய வருடம் ஆனிமாதம் 16ஆம் நாள் (30.06.2013) ஞாயிற்றுக்கிழமை உத்தரட்டாதி நட்சத்திர நன் நாளில் ஆரம்பமாகி ஆனிமாதம் 17 ஆம் நாள் (01.07.2013) திங்கட்கிழமை யாழ் / கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பாரம்பரிய குருவும், வவுனியா இறம்பைக்குளம் கருமாரி நாகபூஷணி அம்பாள் ஆலய ஆகம ஆலோசகரும் மற்றும் பல ஆலயங்களின் பிரதமகுருவும் ஆகிய

'வேதாகம கிரியா கலாநிதி'
'சிவாகம கிரியா தத்துவநிதி' 'கிரியா சாகரம்' 'சிவாகம சூடாமணி' 'பிரதிஷ்டாவித்தகர்' 'வேதாகம வித்தியா ஜோதி'
'வேதாகமகிரியா பூஷணம்' 'வேதாகம வித்வசாகரர்'

**சவஹ்ரு.முதது.ஜெயந்திநாதக் குருக்கள் (J.P)**
**ஸ்ரீமதி.ஜெ.ஜெயகௌரி (கீதா)**
தம்பதியினருக்கு (நந்தாவில)

ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா, மாங்கல்யதாரணம், மணிவிழா மலர் வெளியீடு என்பன சிறப்பாக நடைபெற குலதெய்வம் மனோன்மணி அம்பாள் திருவருளும் கருமாரி நாகபூஷணி அம்பாள் திருவருளும் குருவருளும் நிறைந்துள்ளது.

மேற்படி விழா வவுனியா இறம்பைக்குளம் கருமாரி நாகபூஷணி அம்பாள் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'ஜெயகௌரிவாசம்'
இல101, மக்சாலா றோட்
தோணிக்கல், வவுனியா,
ஸ்ரீலங்கா.
024-2220464 / 0777498654

சுபமங்கள
தங்கள் நல்வரவை நாடும்

மகன்
மருமக்கள்

(3.5.6.7)

## விசேட தவில் நாதஸ்வர இசைக் கச்சேரி

**ஆனைக்கோட்டை**
**மூத்தநாயனார் ஆலயத்தில்**
இன்று (28.06.2013) வெள்ளிக்கிழமை
பிற்பகல் 4 மணிக்கு
**இந்திய இலங்கை புகழ் பூத்த**
**தவில் - நாதஸ்வர**
**கலைஞர்களின் இசைமழை**
இடம்பெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

சோமசுந்தரம் லேன், ஆனைக்கோட்டை.

5ஆம் திருவிழா
உபயகாரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 28
புங்குடுதீவு மடத்துவெளி (வயலூர்) பாலசுப்பிரமணிய சுவாமி ஆலய மகா கும்பாபிஷேக பெரும் சாந்தி விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.20 மணிக்கு இடம்பெறும்.
22 வருடங்களின் பின்னர் புதிய மூன்று தள இராஜகோபுரம் அமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-5)

★ ★ ★


வடமராட்சி, ஜூன் 28
கரவெட்டி கிழக்கு கிழவி தோட்டம் அருள்மிகு விக்ன விநாயகர் கோயில் வருடாந்தப் பெருந் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.
10 தினங்கள் இடம்பெறும் பெருந்திருவிழாவில் தேர்த் திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமையும், தீர்த்தத் திருவிழா 7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் நடைபெறும். (வ-8)

★ ★ ★

சுன்னாகம் சந்திரசேகர விநாயகர் ஆலய புனராவர்த்தன நூதன பஞ்ச தள இராஜ கோபுர திரிதள விமான பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.25 இற்கும் 10.30 இற்கும் இடையில் நடைபெறவுள்ளது. (வ-86)

★ ★ ★

சாவகச்சேரி கோயில் குடியிருப்பு ஸ்ரீ ஞான வீரபத்திரர் ஆலய அலங்காரத் திருவிழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். ஜூலை 8 ஆம் திகதி இரவு சாவகச்சேரி நகர் பவனியுடன் திருவிழா நிறைவுபெறும். (வ-9)



யாழ். மாவட்ட மகளிர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கான வலுவூட்டல் பயிற்சிக் கருத்தரங்கு நேற்று வியாழக்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.
நிகழ்வில் கலந்துகொண்ட நல்லூர் உதவி பிரதேச செயலர் திருமதி சுபாஷினி மதியழகன், மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் நிலுப்புலகுலதுங்க மற்றும் விருந்தினர்களையும் நிகழ்வில் கலந்துகொண்ட மகளிர் அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளையும் காணலாம். (ஒ-7)

## மனக்கட்டுப்பாடு வேண்டும்

எல்லாப் பிறவிகளிலும் உயர்ந்த பிறவி இந்த மானிடப் பிறவி. ஏனெனில் ஆறாம் அறிவாகிய பகுத்தறிவும் உணர்வுகளைப் பரிமாறுவதற்குப் பேசுகின்ற வாயும் மனிதனுக்கு மட்டும்தான் கடவுள் கொடுத்திருக்கின்றார். அதை நல்ல முறையில் பயன்படுத்தவேண்டியது மனிதனுடைய பொறுப்பு, மற்றையவை வாயில்லா ஜீவன்கள், மனித வாழ்வில் நீதி, நியாயம், நேர்மை, உண்மை, வாக்கு என்ற எத்தனையோ இருக்கின்றது: அவற்றை வாழ்க்கையில் நீ கடைப்பிடிக்கிறாயா? சிந்தித்துப்பார்!
மனிதப்பிறவி எடுத்த ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்கவேண்டும். ஒரு நோக்கம் இருக்க வேண்டும். ஓர் இலட்சியம் இருக்கவேண்டும். 'குறிக் கோள்' இல்லாது கெட்டேனே! என்கிறார் அப்பரடிகள். ஆதலால் நமக்கென்று ஒரு கொள்கையும் குறிக்கோளையும் வைத்துக்கொண்டு வாழ்க்கையை நேரிய சீரிய பாதையில் இட்டுச் செல்லவேண்டும். முக்கியமாக எக்காரணங் கொண்டும் மனச்சாட்சிக்கு விரோதமாகச் செயற்படக்கூடாது. நேர்மையின்றும் இம்மியளவும், பிறளக் கூடாது; எவ்வளவுதான் துன்பம் வந்தாலும் எப்படித்தான் துயரம் வந்தாலும் நீதியை விட்டு விலகவே கூடாது. மனக்கட்டுப்பாடு மிகவும் முக்கியம்.

ஞானக்கதிர்

## ஞானச்சுடர் வெளியீடு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' சஞ்சிகையின் ஆனி மாத இதழ் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பேரவை உறுப்பினர் கே.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை நீர்வை மணியும் மதிப்பீட்டுரையை இளைப்பாறிய ஆசிரியர் க.நவரத்தினமும் நிகழ்த்துவர். (ந-8)

## திருஇருதயக் கல்லூரியின் நூற்றாண்டு விழா இன்று

வடமராட்சி, ஜூன் 28
கரவெட்டி திருஇருதயக் கல்லூரியின் நூற்றாண்டு தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு எஸ். அன்ரனிதாஸ் அடிகளார் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு கமில்போல் அடிகளார், கரவெட்டி கார்மேல் கன்னியர் மடத் தலைவி அருட்சகோதரி வினோதா ஆகியோர் கலந்து கொள்வார்கள். (ந-8)

## மரண அறிவித்தல்


### சுப்பிரமணியம் இராசாத்தி



ஈவினை, புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசாத்தி (22.06.2013) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா-செல்லம்மா தம்பதியரின் மருமகளும், C.T.B முன்னாள் ஊழியருமான சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சுரேஸ்குமார் (லண்டன்), வசீகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தாட்சாயினி (லண்டன்), சிவாஞ்சலி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், யதுசன், அபிசன்(லண்டன்), யனுஜன், விருஜன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், இரத்தினலிங்கத்தின் (இலங்கை) சகோதரியும், விமலாதேவியின் (இலங்கை) மைத்துனியும், சந்திரலீலாவின் (லண்டன்) உடன் பிறவா சகோதரியும், M.S றாஜன்(லண்டன்) மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் (30.06.2013) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கனடா. (38719) (3.6.7.11) தகவல்: குடும்பத்தினர்.

### சிவக்கொழுந்து சேனாதிராசா



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து சேனாதிராசா 26.06.2013 புதன்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா- பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லையா சேனாதிராசாவின் அன்பு மனைவியும், சிவராணி, லோகநாதன், சிவஞானவதி, லலிதாராணி, இராஜராஜேஸ்வரி, ஈஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் சச்சிதானந்தம், பத்மாவதி, கிருஸ்ணபிள்ளை, செல்லத்துரை, காலஞ்சென்றவர்களான குகதாசன், கேதாரகௌரி மற்றும் கருணாநிதி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் நடனசபேசன் (ஜேர்மனி), நிரஞ்சனா (பிரான்ஸ்), டர்சிகா (கொழும்பு), சுஜீவன் (கனடா), ஆதித்தியா, காலஞ்சென்ற பரணீதரன், நிசாதரன் (ஆஸ்திரேலியா), நிரோதரன், கிரிதரன், கிந்துஷா, கணேசானந்தா (கனடா), நிதுஷா (சுவிஸ்), லக்ஷிகா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மதுஷன் (பிரான்ஸ்), தனுஷன் (பிரான்ஸ்), அஜிந் (ஜேர்மனி), பிரஜிந் (ஜேர்மனி) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2013) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தியானை வைரவர் கோயிலடி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(38707)
தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சபாபதி அன்னம்



கல்லாரை, மல்லாகத்தினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாபதி அன்னம் 26.06.2013 புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை-விசாலாட்சி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான கதிர்வேலு-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சபாபதியின்(ஆசிரியர், உரும்பிராய் இந்து கல்லூரி) அன்பு மனைவியும், அருந்தவநாயகி, ஸ்ரீகாந்தமோகன்(நடராசா வைத்தியசாலை, சுன்னாகம்), தயாநிதி, தயாளஸ்ரீமோகன் (பிரான்ஸ்), ஸ்ரீகுமரகுருபரன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் சிவபாக்கியம் (ஓய்வு பெற்ற அதிபர்), நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரஞ்சோதி, காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சிவானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், இராசலிங்கம்(ஓய்வுபெற்ற உதவியாளர், பிரதேச செயலகம், தெல்லிப்பழை), செல்வமணி,மொனிக்(பிரான்ஸ்)ஆகியோரின் மாமியும், சுதாஜினி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்,பிரதேச செயலகம்,தெல்லிப்பழை), கஜமுகன் (ஆசிரியர், கிளிநொச்சி ம.வி), கார்த்திகேஜன்(கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), ஜனனி, ஃபுளோரின், ரிபனி, மய்வா (பிரான்ஸ்), தயாபரன்(பொது சுகாதார பரிசோதகர்), துஸ்யந்தி (விவசாய போதனாசிரியர்), விக்னேஸ்வரன் (வேலை மேற்பார்வை உத்தியோகத்தர்), றொமைன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும், ஹானுசன், தருட்சன், டிசால்,கௌஷல் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப.1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி, மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஐயனார் கோவிலடி,மல்லாகம். (38720)(3.6.7.5) தகவல்: குடும்பத்தினர்

### இராசா குமாரசாமி



புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு, நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா குமாரசாமி காலமாகி விட்டார்.
அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், கமலபூஷணி, ஸ்கந்தராசா, யோகரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், மேவின்பிலிப், சண்முகராசா, சத்தியகுமாரி ஆகியோரின் மாமனாரும், கஜேந்திரன், கௌசிகி, கலைவாணி, பராபரன், துஷி, நிசாந்தி, அனுஷா, அனோஜன், அரவிந்தன் ஆகியோரின் பேரனுமாவர்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2013) வெள்ளிக் கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

39, புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு. (38694)(3.6.7.11)
தகவல்: குடும்பத்தினர்
021 225 0940,077 400 3780

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
28/06/2013

# மன்னார் மக்களுக்காக முழு மனத்துடன் 29 வருடங்கள் அரச சேவை புரிந்தவர்

## மன்னார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் புகழாரம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

மக்களுக்கு அர்ப்பணிப் பான-வினைத்திறனுடைய அரச சேவையை முழுமன தோடு மன்னார் மக்களுக்கு செய்த வர் திருமதி றொசாரியோ பெணடேற் குரூஸ்.

கடந்த மூன்று வருடம் மன்னார் நகரசபையின் செய லாளர் பதவியை அலங் கரித்து முழுப் பங்காற்றியவர் இவர் என்றால் மிகையாகாது என்று மன்னார் பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணை யாளர் எம்.ஏ.ஜெ.துரம் தெரி வித்தார்.

29 வருடங்கள் சேவையில் பணியாற்றி ஓய்வுபெற்ற மன்னார் நகரசபை செய லாளர் திருமதி றொசாரியோ பெணடேற் குரூஸின் சேவை நயப்பு விழா அண் மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே துரம் மேற் கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இன்று அரச சேவைக்கு வரு வோர் பல்வேறு கஷ்டங் களின் மத்தியில் கடமையை பொறுப் பேற்கின்றனர்.

இவ்வாறு கடமையை பொறுப் பேற்றவர்கள் தங்களது தகுதி காண் காலத்திற்குள்ளேயே தாம் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்று பயிற்சி பெற் றிருந்தும் முடியாதவர்களாக உள்ளனர். - என்றார். (எ-50)



புன்னாலைக்கட்டுவன் ஈவினை ஆதி அண்ணமார் ஆல யத்தில் வருடாந்த பொங்கல் நிகழ்வும் வேள்வியும் இடம் பெற்றன.

சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட பொங்கல் நிகழ்வு இடம்பெற்றதைத் தொடர்ந்து கிராமிய வழிபாட்டு முறைக்கு அமைவாக பறை முழங்க ஆல யத்தில் முதியவர்கள் வேள்விக்கான பூசை வழிபாடுகளை மேற்கொண்டார்கள். சுமார் இருபத்தைந் துக்கும் மேற்பட்ட கடாக்களும், சேவல்களும் வெட்டப் பட்டன. நேர்த்திக்காக காவடி எடுத்தவர்களும் இந்த வேள்வியில் கலந்து கொண் டார்கள். (ஓ-86)

## தேசிய மட்ட நாடகப்போட்டி; மத்திய கல்லூரி இரு மாணவர் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 28

கொழும்பு றோயல் கல்லூரியினால் நடத்தப்பட்ட நாடகத் திறன்காண் தனிநடிப்புப் போட்டியின் தேசிய மட்டப்போட் டிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்கள் இருவர் தெரிவாகியுள்ளனர்.

கொழும்பு றோயல் கல்லூரியின் நாடக மன்றத்தினால் வருடாந்தம் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வருகின்ற நாடகத்திறன்காண் போட்டிகளில் ஒன்றான தனிநடிப்புப்போட்டியின் மாவட்ட மட்டப் போட்டிகள் நெல்லியடி மத்திய மகா வித்தியால யத்தில் நடைபெற்ற போது மேற்பிரிவினருக்கான போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் களான எஸ்.பிரியலக்ஸ்சன் முதலாமிடத்தையும் த.பிரவீன் இரண்டாமிடத்தையும் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். (ஓ)

## மணவாளக் கோலத் திருவிழா

நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலய மணவாளக்கோல சங்காபி ஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற வுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு வள்ளி தேவசேனா சமேத முத்துக்குமார சுவாமிக்கு திருக்கல்யாணம் நடைபெற்று சுவாமி வீதி வலம் வருவார். (ந)


5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சிவபாக்கியம் சுப்பிரமணியம்
(சர்வதாரி ஆண்டு ஆனி மாதம்
அபரபக்கம் ஷஷ்டி திதி)
தோற்றம்
26.12.1937
மறைவு
24.06.2008

அன்பின் உறைவிடமாய் ஆனந்த மாளிகையாய்
நல்லருள் நல்கிய நவநிதியே
ஆண்டு ஐந்து ஆயிடினும் ஆறவில்லை எமது மனம்
கண்மணி போலெம்மைக் கருணையொடு காத்தவரே
நித்தம் நித்தம் உந்தனுக்காய் ஈரவிழி நீர் சொரிந்து
உந்தன் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை
என்றும் வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கிளுவானை வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்
குடும்பத்தவர்.
(35677)(2.6.3)


## நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற் சவம் ஆரம்பமாகவுள் ளதையொட்டி ஆலயத்தை அண்டிய வீதிகள் சில புனரமைக்கப்படவுள் ளன.

கச்சேரி நல்லூர் வீதி, மருதடி வீதி, நல்லூர் குறுக்கு வீதி, இராசா வின் தோட்டம் வீதி, செட்டித் தெரு, றக்கா வீதி என்பன முன் னுரிமை அடிப்படை யில் திருத்த வேலை கள் மேற்கொள்ளப் படவுள்ளன. யாழ். மாநகரசபை இதற் கான நடவடிக்கைகளை எடுத் துள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழா எதிர் வரும் ஓகஸ்ட் 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்ப மாகின்றது. (ஓ-7)

## கழிவுநீர் தேங்கி துர்நாற்றம் வீசும் வீதி

யாழ். நகரில் கந்தப்ப சேகரம் வீதியில் உள்ள பிரதான வடிகால் வாயில் கழிவு நீர் தேங் கியதால் துர்நாற்றம் வீசுவதோடு சுகாதார சீர்கேடுகளும் ஏற்பட் டுள்ளன.

இந்தக் கால்வாயின் ஒரு பகுதி கடந்த சில மாதங்களாக உடைந்த நிலையில் காணப்படு கின்றது.

அதனைப் புனரமைப் பதற்கான ஏற்பாடு கள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்பட வில்லை. (ந-17)


ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் செல்லத்துரை
சிவபாதம்
திதி: பஞ்சமி
தோற்றம்: 10.06.1952
மறைவு: 15.07.2006



எங்கள் குலக் கொழுந்தேசு!
எங்கள் அருமைத் தம்பி, அண்ணா, மைத்துனா, மாமா,
எம்மை விட்டுப் பிரிந்து ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டதடா
ஆற வில்லையடா கண்ணீரும் வற்றவில்லையடா
என்றும் உன் நினைவாக வாழும்

அன்னைநிழல்,
செட்டியார் மடம், அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

உன் அன்புச் சகோதரர்கள்



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
14*06*1928
மறைவு
09*07*2012
அமரர் இராமநாதன் மகாலட்சுமி

எங்கள் அருமை அம்மாவே
நீங்கள் ஒரு கணப் பொழுதில்
எம்மை விட்டு நீங்கி
அதற்குள் ஒருவருடம் ஆனதோ
நீங்கள் எங்களை விட்டுச் சென்றாலும்
உங்கள் நினைவு எந்நாளும்
எம்மை விட்டு நீங்காது

முருகன் வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் செல்லப்பா
திருஞானயோகநாதன்

மண்ணில் மலர்வு
11*02*1940
விண்ணில் ஒளிர்வு
28*06*2012




ஓர் ஆண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் எங்கள் தந்தை
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

21 1/5, 1st சப்பல் லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06
(38636)(2.6.3)

உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக மாணவருக்கு பசும்பால் விநியோகம்



காரைநகர், ஜூன் 28
தீவகக் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கு பசும்பால் விநியோகிக்கும் திட்டம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

காரைநகர் தோப்புக்காடு மறைஞானசம்பந்த வித்தியாலயத்தில் இதன் ஆரம்ப நிகழ்வு அதிபர் திருமதி எஸ்.தேவராசா தலைமையில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரஸ், காரைநகர் கல்விக் கோட்ட பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன், பிரதேச சபை உறுப்பினர் வீ.கண்ணன், காரைநகர் கோட்ட பாடசாலை அதிபர்கள், தீவகக் கல்வி வலய அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் மாணவர்களுக்கான பசும்பால் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (வ-250)

# தனங்களப்பு மாணவருக்கு இலவச மாலை நேர வகுப்பு

தென்மராட்சி, ஜூன் 28
தனங்களப்பு பிரதேச மாணவர்களுக்கான இலவச மாலை நேர வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் பி.ப. 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை கற்பிக்கப்படவுள்ளன. தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கென ஆரம்பிக்கப்பட்டுள்ள பசும்பால் வழங்கும் திட்டத்தில் தனங்களப்பு அ.த.க. பாடசாலையும் இணைக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் 28 பாடசாலைகள் பசும்பால் வழங்கும் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் இவற்றுக்கு மேலதிகமாக தனங்களப்பு அ.த.க பாடசாலையும் இணைக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார். இதற்கான நிதியை ''வேள்ட் விஷன்'' நிறுவனம் வழங்கவுள்ளது. (வ-9)

# அரசியல் கட்சி ஆதரவாளர்கள் வங்கிகளுக்கு நியமனம்

## சமுர்த்தி உத்தியோகத்தர்கள் விசனம்

சமுர்த்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றவர்களை யாழ். வங்கிகளில் உள்வாங்குவதற்கென நடைபெற்ற பரீட்சையில் கலந்து கொண்ட போதும் அதற்கான முடிவுகள் வெளியிடப்படவில்லை. இந்த நிலையில் அரசியல் கட்சி ஒன்றின் ஆதரவாளர்களான பலர் வங்கிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பலர் விசனமடைந்துள்ளனர்.

நடைபெற்ற பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறுபவர்களே வங்கிகளில் உள்வாங்கப்படுவர் எனக் கூறப்பட்டபோதும் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவராத நிலையில் கட்சி ஆதரவாளர்களுக்கு வங்கிக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ-7)

### பனை அபிவிருத்திச் சபையின்

# தற்காலிக ஊழியர்கள் 38 பேருக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 27
வடமாகாணத்தில் கடமையாற்றும் பனை அபிவிருத்திச் சபை தற்காலிக ஊழியர்கள் 38 பேருக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் மேலும் 4 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பனை அபிவிருத்திச் சபையின் கீழ் வடமாகாணத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாமல் தற்காலிகமாகக் கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.


இந்த நிலையில் ஊழியர்களாகக் கடமையாற்றிய 34 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன் புதிதாக 4 பேருக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. நியமனங்களை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பெற்றுக் கொண்டனர். வழங்கப்பட்ட நியமனத்தின் அடிப்படையில் நியமனம் பெற்றவர்களுக்கு சம்பளக் கொடுப்பனவுகளும் ஏனைய சலுகைகளும் வழங்கப்படுவதுடன் தொழில் ரீதியாக முன்னேற்றமும் கிடைக்கப்பெறும்.

ஏற்கனவே கடமையில் இருந்த ஊழியர்கள் அந்தந்த பதவிகளில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன் புதிதாக ஆராய்ச்சி உதவியாளர்கள் 2 பேருக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 2 பேருக்கும் என 4 பேருக்கு புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.- என்றார். (வ-14)

# இடை விலகிய 11 மாணவர்கள் பாடசாலையில் இணைப்பு

தென்மராட்சி, ஜூன் 28
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இடைவிலகிய 11 மாணவர்கள் மீண்டும் கல்வியைத் தொடர்வதற்காக இணைக்கப்பட்டனர். பாடசாலைகளில் வரவு ஒழுங்கீன நிலையில் உள்ள மாணவர்களின் விவரங்களைப் பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர், வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவு ஆசிரிய ஆலோசகர், கட்டாயக் கல்விக் குழு பொறுப்பாசிரியர் பாடசாலை ஆசிரியர் அடங்கிய குழுவினரை இந்த மாணவர்களின் பெற்றோருடன் ஆலோசனைகளை மேற்கொண்டனர். அதையடுத்து இடை விலகியதாகக் கருதப்பட்ட 11 மாணவர்களும் தாமாகவே பாடசாலையில் இணைந்து கல்வியைத் தொடர்வதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் தெரிவித்தார். (வ-9)

# நூலகத்துக்கான மாடிக் கட்டடப் பணிகள் துரிதகதியில்



காரைநகர் அபிவிருத்திச் சபையால் பல மில்லியன் ரூபா செலவில் மாணவர் நூலகத்துக்கான இரு மாடிக் கட்டடம் ஒன்று காரைநகர் புதுவீதி சந்திக்கருகில் அமைக்கப்பட்டுள்ளது. நூலகத்துக்கான நிதியை புலம் பெயர்ந்து வாழும் காரைநகர் மக்களும் உள்நாட்டில் வாழும் காரைநகர் மக்களும் வழங்குகின்றனர். துரித கதியில் கட்டடப் பணிகள் இடம்பெறுகின்றன. (வ-250)

# அமைதிக்கு பங்கம் விளைவித்த இளைஞர்களுக்கு அபராதம்

வடமராட்சி, ஜூன் 28
மது போதையில் பொது இடங்களில் நடமாடி அமைதிக்கு பங்கம் விளைவித்த இருவருக்கு தலா 4 ஆயிரம் ரூபா அபராதம் பருத்தித்துறை நீதிமன்றில் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை பொது இடத்தில் வைத்து மது அருந்தி அமைதிக்குப் பங்கம் விளைவித்த இருவரைப் பருத்தித்துறை பொலிஸார் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது இருவரும் குற்றங்களை ஒப்புக்கொண்டனர். இதனைத் தொடர்ந்து இருவருக்கும் தலா 4ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-8)

# தீவகத்தில் முன்பள்ளிகளுக்கான நிரந்தரக் கட்டடங்கள்

## அமைக்க நடவடிக்கை என்கிறார் தீவக கல்விப் பணிப்பாளர்

காரைநகர், ஜூன் 28
தீவகப் பிரதேசத்தில் 14 முன்பள்ளிகளுக்கான நிரந்தரக் கட்டடங்களை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் , கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் இணைந்து முன்பள்ளிகள் அமைந்துள்ள காணிகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். முன்பள்ளிக் காணிகள் தனியாருக்குச் சொந்தமாக அமையாது முன்பள்ளிச் செயற்பாடுகளுக்குரியவையாக காணப்பட்டால் முன்பள்ளிகளுக்கான கட்டடங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மேற்கண்டவாறு தெரிவித்தார் தீவக வலய கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ். காரைநகர் மழலைகள் பூங்கா (கிட்ஸ் பாக்) பாலர் பாடசாலையின் கலை விழா ஆண்டு விழா மற்றும் நிறைவு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஓய்வு நிலை அதிபர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை தலைமையில் காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் வலய கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் மேலும் பேசுகையில்:-

முன்பள்ளிகளை இயக்கும் நிறுவனங்கள் அரச நிறுவனங்களாகக் காணப்படுவதில்லை. அவற்றுக்கான கட்டடங்கள் அரச கட்டடங்களாக அமையவில்லை. முன்பள்ளி தொடர்பான பதிவுகள் கல்வி வலயத்தில் மேற்கொள்ளப்படுவதில்லை.



இதனால் முன்பள்ளிகள் மீது கல்வி வலயங்கள் காட்டுகின்ற அக்கறை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த நிலையை மாற்றி கடந்த ஆண்டுகளில் முன்பள்ளி ஆசிரியர்களை அரச சேவையில் சேர்க்க வேண்டும் என்ற அங்கலாய்ப்பின் அடிப்படையில் இதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இருந்தபோதிலும் இலங்கை முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் பல இடங்களில் முன்பள்ளிகளில் கற்பிப்பவர்கள் போதியளவு கல்வித் தகைமை கொண்டிருக்கவில்லை என்ற காரணத்தை காட்டி அரச நியமனம் வழங்கப்படவில்லை.

எனினும் கல்வி வலயத்தினால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிகளையும் அவர்களுக்கான கற்பித்தல் உபகரணங்களையும் வழங்குவதுடன் , மாணவர் மட்டத்தில் மருத்துவ பரிசோதனைகளையும் போஷாக்கு உணவுகளான பால், முட்டை என்பவற்றையும் வழங்க பிரதேச செயலகங்கள் ஊடாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன-என்றார். (வ-250)

# தோப்புக்காடு கி.அ.சங்கத்துக்கு தண்ணீர் பவுசர் கையளிப்பு



காரைநகர், ஜூன் 28
ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தினால் (யு.என்.டி.பி) காரைநகர் குடிதண்ணீர் விநியோகத்துக்காக புதிய பவுசர் ஒன்று கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு கடந்த திங்கட்கிழமை தோப்புக்காடு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி ஆலய முன்றிலில் தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், யு.என்.டி.பி மாகாணத் திட்டப் பணிப்பாளர் சி.ஞானகணேசன் ஆகியோர் கலந்து கொண்டு கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் பவுசரை கையளித்தனர்.

எட்டாயிரம் லீற்றர் கொள்ளளவுடைய இந்த பவுசர் மூலம் வெளியிடங்களில் இருந்து கொண்டு வரப்படும் தண்ணீர் தோப்புக்காடு கிராம மக்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளது. தண்ணீருக்கு பற்றாக்குறை நிலவும் இந்தப் பிரதேசத்தில் இதுவரை காலமும் காரைநகர் அபிவிருத்தி சபையால் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோசமான வீதிகளால் நெருக்கடிக்குள் மக்கள்

அக்கராயன், ஜூன் 28

அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பு மக்கள் இங்குள்ள வீதிகளின் மோசமான நிலை காரணமாகப் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் இந்தக் கிராம மக்களின் போக்குவரத்துச் சிரமங்களைக் கருத்தில் கொண்டு வீதியொன்றை அமைப்பதென முடிவுகள் எடுக்கப்பட்ட போதிலும் இதுவரை வீதி வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

மழை காலங்களில் இங்குள்ள வீதிகளில் வெள்ள நீர் குளம் போன்று தேங்கி நிற்ப



தால் பாடசாலை மாணவர்கள் உட்பட கிராம மக்கள் அனைவரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சுமார் 100 குடும்பங்கள் வசிக்கின்ற இந்தக் குடியிருப்பில் குடிதண்ணீர்ப் பிரச்சினையும் இங்குள்ள மக்களை வாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க-18)

# பாவனைக்கு உதவாத நீரை அருந்தும் மாணவர்

## நோய்த் தாக்கம் ஏற்படும் அபாய நிலை

அக்கராயன், ஜூன் 28

அக்கராயன் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் பாவனைக்கு உதவாத குடிதண்ணீரைப் பருகி வருவதாகப் பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

அக்கராயன் மகா வித்தியாலயத்தில் தற்போது கடுமையான குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் இங்கு அமைந்துள்ள குடிதண்ணீருக்கு உகந்ததல்ல என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் தெரிவிக்கப்பட்ட குழாய்க் கிணற்றிலிருந்தே மாணவர்கள் தண்ணீரைப் பெற்று அருந்தி வருகின்றனர். இதனைப் பெறுவதற்கும் மாணவர்கள் முண்டியடிப்பதைக் காண முடிகின்றது.

இத்தகைய பாவனைக்கு உதவாத நீரை அருந்துவதால் தமது பிள்ளைகள் பாதிக்கப்படக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகப் பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

அக்கயரான் மகா வித்தியாலய மாணவர்கள் ஆண்டுதோறும் ஜூன், ஜூலை மாதங்களில் கடுமையான தண்ணீர் நெருக்கடியை எதிர்கொள்வது வழக்கமாகும்.



இந்த நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு இதுவரை எந்தவொரு அமைப்பும் முன்வராத அவல நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் பாவனைக்கு உகந்ததல்லவெனத் தெரிவிக்கப்பட்ட குழாய்க் கிணற்றின் நீரை அருந்த வேண்டிய பரிதாப நிலைக்கு மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் நோய்த் தாக்கம் ஏற்படக் கூடிய அபாய நிலை தோன்றியுள்ளது.

இதனையடுத்து தத்தமது வீடுகளிலிருந்து குடிதண்ணீரைக் கொண்டு வருமாறு பாடசாலை நிர்வாகத்தினர் மாணவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். எனவே மாணவர்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு நல்ல குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பெற்றோர் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

# கசிப்பின் ஆதிக்கத்தில் மூங்கிலாறு கிராமம்

## அசமந்தப்போக்கில் அதிகாரிகள்

முல்லைத்தீவு மூங்கிலாறு கிராமத்தில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரித்துக் காணப்படுகின்ற போதிலும் அதனைக் கட்டுப்படுத்துவதில் அதிகாரிகள் அசமந்தப் போக்கை கடைப்பிடித்து வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்–

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மூங்கிலாறு கிராமத்தில் என்றுமில்லாதவாறு கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரித்துக் காணப்படுகின்றது.

குடியிருப்பு, தேக்கங்காடு, இருட்டுமடு ஆற்றினை அண்மித்த பகுதி ஆகிய இடங்களில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் கொடிகட்டிப் பறப்பதைக் காண முடிகின்றது.

இதனைக் கட்டுப்படுத்தி உதவுமாறு மேற்படி கிராம மக்கள் பொலிஸாருக்கும், மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கும் பல தடவை தெரியப்படுத்தியபோதிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்–

இவ்வாறு கசிப்பின் ஆதிக்கம் அதிகரித்துக் காணப்படுவதனால் பல சமூக சீரழிவுகள் இடம்பெறுவதாககிராமமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-6)

# கண்டாவளையில் சமுர்த்தி வங்கி திறந்து வைப்பு

கண்டாவளைப் பிரதேசத்துக்கான சமுர்த்தி வங்கிக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நியமனம் வழங்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களின் வேலைத் திட்டத்தை விரிவுபடுத்தும் முகமாகவும், சமுர்த்தி வங்கியின் செயற்பாட்டினை முன்னெடுக்கும் முகமாகவும் இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கண்டாவளைப் பிரதேச சமுர்த்தி முகாமையாளர் எஸ்.உதயன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் திருமதி பி.ஜெயராணி, கண்டாவளைப் பிரதேச செயலர் த.முகுந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் திருமதி பி.ஜெயராணி உத்தியோகபூர்வமாக நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

அந்த நிகழ்வில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களும், பொது மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (க-421)

## ஓட்டப் பந்தயத்தில் பஸ்கள்

அக்கராயன், ஜூன் 28

கிளிநொச்சி நகரை நோக்கி பூநகரி முக்கொம்பனிலிருந்து காலையில் புறப்படும் அரச பஸ்ஸும் தனியார் மினி பஸ்ஸும் போட்டி போட்டுக் கொண்டு அதிவேகமாகச் செலுத்தப்படுவதால் விபத்து ஏற்படக் கூடும் என்ற அச்ச நிலைக்கு பயணிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஒரே நேரத்தில் இரு பஸ்களும் சேவையை ஆரம்பிப்பதே நாளாந்த ஓட்டப் பந்தயத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. (க-18)






அண்மையில் கண்டாவளை பிரதேச சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் திறப்பு விழா இடம்பெற்றபோது கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் திருமதி பி.ஜெயராணி பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைக்கின்றனர். நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கண்டாவளைப் பிரதேச செயலர் த.முகுந்தன் உரை நிகழ்த்துகின்றார். (க-421)

## இன்னும் மின் வசதி பெறாத 12 வீடுகள்

அக்கராயன், ஜூன் 28

பூநகரி ஆலங்கேணிக் கிராமத்திலுள்ள 12 வீடுகளுக்கு இதுவரை மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னமும் ஆறு மின் கம்பங்கள் நடப்பட்டால் இந்தப் 12 வீடுகளுக்கும் மின் இணைப்புக்கள் வழங்க முடியும் எனவும் தெரிய வருகின்றது. ஆனால் கடற்கரையோரங்களிலேயே மின் கம்பங்கள் நடப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

40 குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக் கிராமத்தில் 12 வீடுகளுக்கு மட்டும் ஏன் மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்டவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (க-18)

## ஆரம்பக் கல்வி மாணவரின் செயற்பாடுகளில் அக்கறை

### உதவிக் கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

அக்கராயன், ஜூன் 28

ஆரம்பக்கல்வி மாணவர்களின் சகல செயற்பாடுகளிலும் அக்கறை காண்பிக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி வலய ஆரம்பப்பிரிவுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலய விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி வலயத்தில் உள்ள ஊட்டப் பாடசாலைகளின் வளர்ச்சியில் வலயக் கல்விப் பணிமனை அக்கறை கொண்டு செயற்பட்டு வருகின்றது.

'யுனிசெப்' நிறுவனத்தின் குழுவொன்று விரைவில் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கு வருகை தந்து பார்வையிடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

# தமிழைக்கூட கற்பிக்க ஆசிரியர் இல்லை இது மாணவரின் உரிமையை மீறுகின்ற செயல்

## சிறிதரன் எம்.பி. விசனம் தெரிவிப்பு

அக்கராயன், ஜூன் 28

பூநகரி கிராஞ்சி அ.த.க. பாடசாலையில் தமிழ்ப் பாடத்துக்குக் கூட ஆசிரியர் இல்லாத நிலைமையானது இங்கு கல்வி கற்கின்ற மாணவர்களின் உரிமைகளை மீறுகின்ற செயலாகும். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறிதரன்.

கணித, விஞ்ஞானப் பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியது. ஆனால் மாணவர்களின் தாய் மொழியைக் கூட கற்பிப்பதற்கு ஆசிரியர் இல்லை என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழ் மொழியைக் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் மாவட்டத்தில் இல்லாமையும் அவர் அங்கு வினா எழுப்பியுள்ளார்.

கிராஞ்சிப் பாடசாலையில் தரம் 1 தொடக்கம் 9 வரையான வகுப்புக்கள் உள்ளன. 280



மாணவர்களுக்கு அதிபருடன் சேர்த்து 8 ஆசிரியர்கள் உள்ளனர்.

தமிழ், கணிதம், வரலாறு ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத நிலை இந்தப் பாடசாலையில் காணப்படுகின்றது.

இந்த நிலையில் பாடசாலையின் செயற்பாடுகளை அங்கு சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு நிலவும் குறைபாடுகளையும் கேட்டறிந்தார். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '13' ஐ ஆதரிக்கும் அமைச்சர்கள் பின்னணியில் அமெரிக்க 'டொலர்'

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு



கொழும்பு,ஜூன் 28
அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக குரல்கொடுக்கும் அமைச்சர்களின் பின்னணியில் அமெரிக்க டொலர் புகுந்து விளையாடுகின்றது.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், குறித்த அமைச்சர்களை இனியும் அரசில் வைத்திருந்தால் அது கொடிய விஷப் பாம்புக்கு பாலூட்டி வளர்க்கும் செயலுக்கு ஒப்பானதாகும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக அரசுக்குள் உருவாகியுள்ள புதிய கூட்டணி தொடர்பில் கருத்து வெயிடுகையிலேயே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர இவ்வாறு தெரிவித்தார்.


இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

போரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு நந்திக்கடலுடன் முடிவுக்கு கொண்டுவந்தாலும் இன்னமும் அரசியல் ரீதியிலான போரை முடிவுக்கு கொண்டுவரமுடியாமலுள்ளது. அரசியல் போரில் அமைச்சர்கள் சிலரே இன்று அரசுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர். இது அரசுக்கு நல்ல சகுனமல்ல.

தேசியப் பட்டியல் ஊடாக பதவி பட்டங்களை வாங்கிக் கொண்டு நன்றிகெட்ட வகையில் இடதுசாரி அமைச்சர்கள் இருவர் இன்று அரசுக்குள் சதி செய்கின்றனர். அவர்கள் மட்டுமல்ல அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, வாசுதேவ நாணயக்கார, ரெஜினோல் குரே, சந்திரசிறி கஜதீர ஆகியோரும் 13 ஐ ஆதரித்து அரசை எதிர்த்துள்ளனர்.

இதுவரைகாலமும் மௌமாக இருந்த அமைச்சர்கள் தற்போது துள்ளிக்குதித்து வீரவசனம் பேசுவதன் பின்னணியின் அமெரிக்க டொலர் புகுந்து விளையாடுகின்றதா என்ற சந்தேகமும் எமக்கு இருக்கின்றது.-என்றார். (ச)

# வட மாகாணத்தில் தாவரவியல் பூங்கா



கொழும்பு,ஜூன் 28
முப்பது வருடகால போர் நிறைவுக்கு வந்த நிலையில் வட மாகாணத்தில் புதிதாக தாவரவியல் பூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது. எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் இந்த பூங்காவை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை தாவரவியல் பூங்கா மற்றும் பொழுது போக்குத்துறை அமைச்சர் ஜயரத்ன ஹேரத் தெரிவித்தார்.

அவர் பேராதனை தாவரவியல் பூங்காவைப் பார்வையிடச் சென்றபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு சுற்றுலாத்துறை பெரும் பங்காற்றுகிறது. எனவே உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை மேலும் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

நாட்டின் வேறுசில பகுதிகளிலும் தாவரவியல் பூங்காக்கள் அமைக்கப் படும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# 13 இன் இரண்டு ஏற்பாடுகளை ரத்துச் செய்ய சு.க. தீர்மானம்

கொழும்பு,ஜூன் 28
அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் இரண்டு ஏற்பாடுகளை இரத்துச் செய்ய வேண்டும் என்ற உத்தியோக பூர்வ தீர்மானத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எடுத்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், அலரி மாளிகையில் புதன்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்த விவகாரத்தில் ஒரு பொது நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

அதன்பிரகாரம், 13 ஆவது திருத்தத்தில் இரண்டு ஏற்பாடுகள் அகற்றப்படவேண்டுமென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாண சபைகள் இணைந்து தனி மாகாண சபையாக இயங்கமுடியும் என்ற ஏற்பாடு நீக்கப்படல் வேண்டும் என்பது அதில் ஒன்றாகும்.

மாகாண சபை அதிகாரத்தின் கீழுள்ள பொதுப்பட்டியலில் உள்ள விடயங்களை திருத்துவதற்கு சகல மாகாண சபைகளினதும் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்பது இரண்டாவது தீர்மானமாகும். (ச)



கொழும்பு, கோட்டை ஒல்லாந்தர் வைத்தியசாலை வர்த்தகக் கட்டடத்தின் இரண்டாம் தொகுதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ திறந்து வைத்த பின்னர் பொருள்களைப் பார்வையிடுகிறார். அருகில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட பலர் காணப்படுகின்றனர்.

# ஹெரோயின் வைத்திருந்த நபர் கைது



கண்டி, ஜூன் 28
கண்டி, போகம்பரை சிறைச்சாலையில் ஹெரோயின் வைத்திருந்த கைதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி பொலிஸ் அதிகாரிகள் சிறைச்சாலையினுள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதன்கிழமை இரவு இடம்பெற்ற இந்த சோதனையின் போது கைது செய்யப்பட்டவரிடமிருந்து 3 கிராம் 620 மில்லிகிராம் ஹெரோயின் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச)

# நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் சமசமாஜக் கட்சி, மு.காவுக்கு இடமில்லை

## நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 28
நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அரச தரப்பில் உள்ள சகல கட்சிகளுக்கும் வாய்ப்பளிக்க முடியாது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இடம்பெற்றுள்ள இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், லங்கா சமசமாசக் கட்சி ஆகியவற்றுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை.

இவ்வாறு அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழுவின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபாநாயகரினால் நியமிக்கப்பட்டுள்ள 31 பேர் கொண்ட தெரிவுக்குழுவில், 19 பேர் அரச தரப்பில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

31 பேர் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அரச தரப்பில் 19 பேர் மட்டுமே இடம்பெற முடியும். சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் விருப்பப்படியே அவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அரசில் பல கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. அக்கட்சிகள் அனைத்தினதும் பிரதிநிதிகள் தெரிவுக்குழுவுக்கு நியமிக்கப்படவில்லை. அது நடைமுறைச் சாத்தியமில்லை.

ஆனால் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுக்கும், தெரிவுக்குழுவுக்குத் தமது யோசனைகளை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும்.

தெரிவுக்குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டத் தொகுதியில் நடத்தப்படும். அதில் தெரிவுக்குழுவின் நிகழ்ச்சி அட்டவணை தயாரிக்கப்படும்.

எதிர்க்கட்சிகள் தரப்பில் ஐ.தே.க, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன, இன்னமும் தெரிவுக்குழுவுக்கான பிரதிநிதிகளை நியமிக்கவில்லை. அவர்கள் தமது பிரதிநிதிகளை நியமிக்காது [illegible] படத் தொடங்கும்.-என்றார்.(ச)

# சுவீடனிலுள்ள இலங்கையர் நாடு கடத்தப்படவுள்ளனர்

## அந்நாட்டு அரசு தகவல்



கொழும்பு, ஜூன் 28
சட்டவிரோதமாக சுவீடனில் தங்கியுள்ள இலங்கையர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர்.

இலங்கை நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள காரணத்தால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று சுவீடன் அரசு அறிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் சுவீடனில் தங்கியிருக்கும் அகதிக் கோரிக்கையாளர்களே [illegible] கடத்தப்படவுள்ளனர். [illegible] விசேட விமானமொன்றின் மூலம் அவர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர்.

சுவீடனில் தங்கியுள்ள இலங்கை அகதிக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைகள் தொடர்பில் சுவீடன் அரசு இலங்கைக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளது.

போர் இடம்பெற்ற காலத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை அகதிக் கோரிக்கையாளர்கள் சுவீடனில் தஞ்சமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மாதுறுஓயா தேசிய பூங்காவில் தீ

கொழும்பு, ஜூன் 28
மாதுறுஓயா தேசிய பூங்காவில் அரலகங்வில வீதிக்கு அண்மையிலுள்ள பகுதியில் புதன்கிழமை இரவு முதல் தீ பரவியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார், இராணுவத்தினர், விமானப்படையினர் மற்றும் இடர்முகாமைத்துவ



பிரிவினருடன் பிரதேசவாசிகளும் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இப்போதும் இங்கிருந்து அகதிகள்; தவிர்க்க, தடுக்க எவ்வழி தேறும்?

கடந்த ஆண்டில், அனைத்துலக மட்டத்தில் மொத்தம் 45.2 மில்லியன் மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் 28.8 மில்லியன் மக்கள் தமது நாடுகளுக்கு உள்ளேயே இடம்பெயர்ந்து இருக்கின்றனர். அதேவேளை 16.4 மில்லியன் மக்கள் தத்தமது சொந்த நாடுகளை விட்டு பிற நாடுகளுக்கு அகதிகளாகச் சென்று தஞ்சம் கோரினர்.

தமது நாடுகளில் நடைபெற்ற போர்களால் 93,700 பேர் வேறு தேசங்களில் புகலிடம் கோரியுள்ளனர். இத்தனை எண்ணிக்கையானோரில் மிகப் பெரும் பகுதியினர் அகதிகளானதற்கு, இடம்பெயர்ந்தமைக்கு போரே காரணம் என்று அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் பிந்திய அறிக்கை வெளிப்படுத்துகிறது.

கடந்த ஆண்டில் அகதிகளானோர் எண்ணிக்கை 1994 ஆம் வருடத்துக்குப் பின்னர் அடுத்த வரிசையில் உள்ளதாகவும், அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. மிகச் சுருக்கமாகக் கூறின், நாம் ஒரு முறை கண், சிமிட்டும் போதும் அதாவது 4.1 வினாடிகளுக்கு ஒரு முறை ஓர் அகதி உலகில் கடந்த வருடம் உருவாக்கப்பட்டுள்ளார்!

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் கணிப்பின் பிரகாரம், அனைத்துலக மட்டத்தில் அதிக அகதிகள் ஆப்கானிஸ்தானிலேயே உருவாகிறார்கள் என்பதும் நோக்கற்பாலானதாகும். சோமாலியா, ஈராக், சிரியா ஆகியன கடந்த ஆண்டில் இரண்டாம், மூன்றாம், நான்காம் இடங்களை பிடித்துள்ளதாக ஐ.நா.அறிக்கை மேலும் சுட்டிக்காட்டுகிறது.

எமது நாட்டை, இலங்கையைப் பொறுத்த வரையில் போர் முடிவுற்ற போதிலும், அகதிகளாக நாட்டை விட்டுத் தப்பிச்செல்வோர் எண்ணிக்கை குறைந்ததாக இல்லை எனலாம். தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்று வரும் வாழ்வியல், அரசியல் ஒடுக்கு முறைகளால் எமது மக்களில் பலர் வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடுகின்றனர்.

நாட்டை விட்டு சட்டவிரோதமாகவும், அதேவேளை சட்டபூர்வமாகவும் வெளியேறுவோரின் வரிசையில் இலங்கை குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்து வருகிறது.

போர் தீவிரமடைந்த வேளை இலங்கையில் இருந்து சென்ற அகதிகள் எண்ணிக்கை மிக அதிகரித்திருந்தது. ஆனால் அது முடிவுற்று நான்கு வருடங்கள் கடந்த போதும் கூட அது கணிசமான அளவு தொடர்கிறது.

மிகக் குறிப்பாக, இப்போது ஆஸ்திரேலியாவுக்கே அகதிகளாக அதிகமானோர் செல்கிறார்கள். அவர்களில் பலர் திருப்பி அனுப்பப்படுகின்றனர். இலங்கையில் பாதுகாப்பு இல்லை என்று கருதியே அவர்கள் சென்றாலும், திருப்பி அனுப்பப்படுவோருக்கு இங்கு ஆபத்து இல்லை என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எஸ்.பீரிஸ் உறுதி அளித்திருக்கிறார்.

இலங்கையில் இருந்து பிறநாடுகளுக்கு மக்கள் சட்டவிரோதமாகச் செல்வதால், அவர்கள் இங்கு பாதுகாப்பாக வாழ்வதற்கு உகந்த, ஏற்ற சூழ்நிலை இல்லை என்ற தப்பான தோற்றம் உருவாகிறது. அது முற்றிலும் தவறானது என்றும் அரச தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆனால், வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் போர் முடிவுற்ற பின்னரும் நிம்மதியான, இடரில்லா வாழ்க்கையை நடத்த முடியாத நிலை தொடர்வதை இனங்கண்டு அதனை நீக்க அரசு உள்ளார்ந்து மனம் கொண்டுள்ளதா? வெறும் வாய்வேதாந்தம் இன்றி, அதற்கான முயற்சியில் அது கால் பதிக்கவில்லை என்பதே யதார்த்தமாகி வருகிறது.

போர் முடிவுற்ற பின்னர், நாட்டில் வழமை நிலையும், பல வழிதுறைகளில் முன்னேற்றமும் தென்பட்டாலும், வடக்கு, கிழக்கு வாழ் மக்களில் மிகப் பெரும்பாலானோரின் வாழ்க்கை நிலை சொல்லளவில் உயர்த்திக் காட்டப்பட்டாலுங்கூட அவர்களில் மிகப் பெரும்பாலானோர் இன்னமும் அடிமட்ட நிலையிலேயே அல்லாடுகின்றார்கள் என்பதே உண்மை நிலை.

அதனை மக்கள் நேயத்துடன், மனிதாபிமானத்துடன் அரசும் அதன் அதிகாரிகளும் நோக்கிச் செயற்பட்டால் அன்றி, வெறும் அறிக்கைகளையும் நேரத்துக்கு நேரம் ஆளுக்கு ஆள் முரண்பட்ட நிலைப்பாடுகளையும் கருத்துக்களையும் வெளிப்படுத்துவதன் ஊடாக பயன்தரும் வகையில், இன்னலுறும் மக்களுக்கு மனதார்ந்து உதவ முடியாது.

தன்வினை தன்னைச்சுடும் என்ற வாக்கு ஒரு போதும் பிசகாது; பிசிறாது. இதனை ஆட்சியாளர்களும் அவர்களின் அதிகாரிகளும் மனதில் கொள்வது நன்றல்லவா? நன்றும் தீதும் பிறர்தரவாரா.

# அசைந்து அல்லாடுகிறது '13' இந்தியாவே மௌனம் ஏன்?

மன்னார் சிந்தா

அரசியலமைப்புக்கான 13ஆம் திருத்தத்தின் பிதாமகரான இந்தியா, ராஜீவ் காந்தியின் கொலையின் பின் அத்திருத்தம் தொடர்பாக செயற்பட்டுவரும் தன்மைகள் பற்றியும், ஆராய வேண்டிய பொறுப்பு ஈழத்தமிழர்களுக்கு இருக்கிறது.

13ஆம் திருத்தத்தை அரசமைப்பிலிருந்து அகற்றுவது அவ்வளவு சுலபமானதல்ல என்றும், அப்படி அது நீக்கப்பட்டதால் அது தமிழரின் பலத்தை அதிகரிக்கக்கூடும் என்றும், கூறப்பட்டிருந்த எதிர்வு கூறலின் யதார்த்தம் இப்போது உணரப்பட்டு வருகிறது. இப்போது இன்னுமொரு படி முன்னேறி வடமாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படுவது கூட தமிழரின் பலத்துக்கு வலுச்சேர்க்கும் என்ற நிலைமை தோன்றியுள்ளது. இத்தனைக்கும் 13ஆம் திருத்தச் சட்டமும் அதன்மூலம் உருவான மாகாணசபை முறையும் சிங்களவர்களால் வெறுக்கப்பட்ட ஒன்றாகவும், தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாகவும் இருந்து வந்தது. அதில் ஒரு கையொப்பதாரியான ஜே.ஆர் ஜயவர்தன கூட இதனை விரும்பாது, இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே அதனை ஏற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருந்தார். ஆக மொத்தத்தில் இவ்வொப்பந்தம் இந்தியாவினது கூட அல்ல, ராஜீவ் காந்தியின் சுய விருப்பத்தின்பேரிலோ அல்லது சுயதீர்மானத்தின் பேரிலோ ஏற்படுத்தப்பட்ட, வேறு யாருக்கும் தேவைப்பட்டிராத, யாராலும் விரும்பப்படாத ஒன்றாகவே ராஜீவ் காந்தியால் கொண்டுவரப்பட்டதாகும் என ஜே.ஆர். அந்த வேளையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அந்த ஒப்பந்தத்தை இலங்கைத் தமிழர் நலனை முன்னிட்டே ராஜீவ் காந்தி உருவாக்கினார் என்பதில் எவ்வித மாற்று கருத்துக்களுக்கும் இடமில்லை. ஆனால், அவ்வொப்பந்தத்தினுள் இந்தியாவின் நலன்கள் உள்ளடக்கப்பட்டளவுக்கு தமிழரின் தேவைகள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்பதே உண்மை. இது ஜே.ஆர். கூறியது போல அவரது அரசியல் முதிர்ச்சியின்மையா? ஒப்பந்தத்தை தயாரித்த அதிகாரிகளின் அசமந்தப் போக்கா? அல்லது நெடுமாறன் கூறியது போல அவரசப் புத்தியா? எல்லாவற்றிலும் மேலாக ஜே.ஆர். ஜயவர்தனவின் அரசியல் சாணக்கியத்தை இந்திய இராஜதந்திரம் குறைத்து மதிப்பிட்டதா? என்பவையே அன்றும் இன்றும் எழுப்பப்படும் கேள்விகளாகும்.

எது எப்படியிருப்பினும், இன்று இந்த ஒப்பந்தமும், அதன்மூலம் உருவாக்கப்பட்ட அரசமைப்புத் திருத்தமும், நிலைத்து நிற்க வலுவற்றதாகி ஆட்டம் காணும் நிலைக்கு வந்து விட்டன. இந்த இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இருநாட்டுத் தலைவர்களாலும், அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட் பிரதான விடயங்கள் வருமாறு:-

01. வடக்கு - கிழக்குப் பிரதேசங்கள் தமிழரின் பாரம்பரிய தாயகப்பூமி
02. வடக்கு - கிழக்கு ஒரே மாகாணமாக இணைப்பு.
03. காணி அதிகாரம்.
04. தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக காவல்துறை அதிகாரம்
05. ஒன்றுக்கு மேற்பட்ட சபைகள் இணைந்து ஒரே சபையாக இயங்குதல்
06. மாகாண அரசிற்கும் மத்திய அரசிற்குமிடையே ஒதுக்கப்படாத விடயங்களை ஒரு பொதுப்பட்டியலில் உள்ளடக்கி அதிகாரங்களைப் பகிர்தல்
07. மாகாண சபை செயற்பாடுகளில் மாற்றம் செய்வதானால் அனைத்து மாகாணசபைகளின் அங்கீகாரம் தேவை.
08. தமிழ்மொழிக்கு உத்தியோக மொழி அந்தஸ்து

போன்றவற்றை உள்ளடக்கி தமிழர் இனப்பிரச்சினை தீர்வுக்காக உருவாக்கப்பட்ட இம்மாகாண சபை அரச முறை இத்தீர்வுடன் சம்பந்தப்படாத ஏனைய ஏழு மாகாணங்களிலும், அதன் ஆரம்ப காலம் முதலே செயற்பட்டு வருகின்ற போதிலும், வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண அரசாக தமிழ்ப் பகுதியில் முதல் இரண்டு வருடங்களில் மாத்திரமே செயற்பட்டது.

போரின்போது 2008ஆம் ஆண்டு வாக்கில் கிழக்கு மாகாணம் புலிகளிடமிருந்து பூரணமாக மீட்கப்பட்டதும், அம்மாகாணம் ஒரு நீதிமன்றத் தீர்மானம் மூலம் சட்ட நுணுக்க தொழில்நுட்ப காரணங்களைக் காட்டி பிரிக்கப்பட்டதும், எதுவித தாமதமுமின்றி உடனடியாகவே அம்மாகாணத்தில் தேர்தல் நடத்தப்பட்டு கிழக்கு மாகாண சபை அரசு ஏற்படுத்தப்பட்டது. அது எதுவித பலமுமற்ற சீறக்கூட முடியாத உணர்வற்ற பல்லுப் பிடுங்கப்பட்ட பாம்பாக இருந்து வருகிறது. ஆயினும், வடமாகாண சபை எந்தவொரு அசைவுமின்றி முடங்கியே கிடக்கின்றது. இருப்பினும் இந்த இடைப்பட்ட காலப்பகுதியில் ஏட்டுச்சுரைக்காயாக எழுத்தில் மட்டும் வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் சத்தமின்றி ஆரவாரமின்றி ஒவ்வொன்றாக பறிக்கப்பட்டன. அவையாவன :-

★ தேசிய பாடசாலைகள் உருவாக்கத்தின் மூலம் கல்வி அதிகாரங்கள் பறிக்கப்பட்டன.

★ தேசிய வைத்தியசாலைகள் சட்டத்தின் மூலம் சுகாதார சேவை அதிகாரங்கள் பறிக்கப்பட்டன.

★ நாடுநகர அபிவிருத்திச்சட்ட மூலம் உள்ளூராட்சி சபைகளின் பல அதிகாரங்கள் பிடுங்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சிடம் வழங்கப்பட்டன.

★ திவிநெகும சட்டத்தின் மூலம் (அது அரசமைப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தும் அதற்கு மாறாக) மாகாண சபைகளின் கீழ் வந்த பல திணைக்களங்களில் செயற் பாடுகள் பிடுங்கப்பட்டு மத்திய அமைச் சரின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன.

★ வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு மேற்கூறப்பட்டபடி நீதிமன்றத் தீர்ப்பால் துண்டிக்கப்பட்டது.

ஆரவாரமின்றி சத்தமின்றி பறித்தெடுக்கப்பட்ட மேற்படி முதல் நான்கு அதிகாரங்களுக்கும் மேலாக ஆரவார வெற்றி முழக்கங்களுடன் இந்திய ஒப்பந்தத்தின் ஆணிவேரான வடகிழக்கு இணைப்பு பிரிக்கப்பட்ட போதும்கூட இந்தியா ஏன் மௌனம் சாதித்தது என்பதுதான் புரியாத புதிராக இருக்கின்றது.

இந்தியா தனது தலைமைப் பெருமகன் ஒருவரின், அதுவும் கால வெள்ளத்தில் காற்றில் கலந்து அமராகிவிட்ட ஓர் இந்தியப் பெருமகனின் குறிக்கோள் ஒன்று அடாவடியாக அழிக்கப்பட்டதை இந்தியா உணரவில்லை. ஆனால், இப்போது அன்னை இந்திராவும், அவரது புதல்வர் ராஜீவ்காந்தியும், எந்தத் தமிழருக்கு நலம் செய்ய வேண்டுமென்று இலங்கைக்கு அச்சுறுத்தல் வழங்கி இந்நாட்டின் இறைமையைப் புறக்கணித்து அதன் உள்விவகாரத்துள் தலையிட்டு எந்தவொரு ஒப்பந்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்களோ அந்நடைமுறையின் ஆணிவேரே பிடுங்கப்பட்டுப் புள்ளம் தோண்டப்படும்போது எப்படி இந்தியப் பேரரசினால் மௌனம் காக்க முடிகிறது? இது முன்னர் கூறியது போல் இலங்கை அரசோ, சிங்களவர்களோ, அல்லது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களோ கூட விரும்பி கேட்டி ராத ஒரு தீர்வாகும். இருந்தும் இத்தீர்வு தமிழருக்கு நலம் தரும் என்ற ஆவலின்பேரில் ராஜீவ் காந்தி தனது சுயவிருப்பின்பேரில் கொண்டுவரப்பட்டது என்பதால் அதன் மூலம் அவரது அபிலாஷையாக 13ஆம் திருத்தம் அமைந்துள்ளது. அவரது விருப்பமும் அபிலாஷையும் அவமதிக்கப்படுவதை எப்படி அந்த நாடு கண்டுகொள்ளாமல் இருக்கிறது? இந்தியாவைப் பொறுத்தமட்டில் தனது முன்னாள் பிரதமர் இன்னொரு நாட்டுடன் செய்துகொண்ட ஒப்பந்தமொன்று நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்வது அதன் தார்மீகக் கடமை மாத்திரமல்ல சர்வதேச நியதி நெறிமுறைகளின் படி பொறுப்புக் கூறவேண்டிய கட்டாயமுமாகும். இவ் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைப் பொறுத்த மட்டில் இலங்கைச் சிங்களவரின் சார்பில் ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜயவர்த்தன கையொப்பமிட்டார். எனவே, அது இலங்கை அரசினதும், இலங்கை மக்களதும், அங்கீகாரம் பெற்ற ஒன்றாகும்.

ஆனால், தமிழர் தரப்பில் தமிழ்த் தலைவர்கள் எவரும் ஒப்பமிடவில்லை. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியே, தமிழர் சார்பில் அவர்களின் பிரதிநிதியாக கையொப்பமிட்டிருந்தார். எனவே, தமிழ் மக்களுக்கு இவ்வொப்பந்தம் தொடர்பாக ஏற்படக்கூடிய சகல பின்விளைவுகளுக்கும் பொறுப்புக் கூற வேண்டியது இந்தியப் பிரதமரும், இந்தியாவுமே. இவ் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து சுதுமலையில் நடந்த ஏராளமான மக்கள் திரண்டிருந்த கூட்டத்திலும், இந்த ஒப்பந்தத்தை தான் ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் ஆனால், இந்தியா அவ்வொப்பந்தத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றிருப்பதால் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கும், தேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும், இந்தியாவே பொறுப்பு என்றும், பிரபாகரன் கூறியிருந்ததை நாம் நினைவுகூர வேண்டும்.

போராளி அமைப்புக்களிடமிருந்து ஆயுதங்களைக்களைந்து இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டவும், இலங்கைத் தமிழருக்கு இவ்வொப்பந்தத்தின் மூலம் பொருத்தமான தீர்வு பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை ஏற்று பின் புலிகளுடன் முரண்பட்டு முதலில் அவர்களுடன் போரிட்டும் பின்னர் இறுதிப் போரில் புலிகளை நிர்மூலமாக்க முழுமையான பங்களிப்பை வழங்கிய இந்தியாவே அவ்வொப்பந்தத்தை பாதுகாத்து தமிழருக்கு நியாயமான தீர்வை பெற்றுக்கொடுக்கும் கடமையை நிறைவேற்றவேண்டும். அதுமாத்திரமல்ல ராஜீவ்காந்தியின் கொலைக்காக முழுத் தமிழினத்தையும் பழி வாங்கிய இந்தியாவும், அதிகாரத்தின் உச்சத்திலிருக்கும் அவரது மனைவியான சோனியாகாந்தியும் உண்மையில் அவரில் பாசமும், பற்றும், மதிப்பும் கொண்டிருந்தால் அவரது அபிலாஷையான இந்திய - இலங்கை ஒப்பந்த மூலம் உருவாக்கப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்திவிக்க உறுதி பூணவேண்டும். ஏற்கனவே குறைபாடுகள் நிறைந்த அச்சட்டத்தில் மேலும் பலவீனப்படுத்தும் வகையில் மாற்றங்கள் செய்வதோ அல்லது அவற்றை இல்லாமல் ஆக்குவதோ, இந்தியாவுக்கு ஓர் இழுக்காகவும், இந்தியாவின் வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயமாகவும், அமைந்துவிடும் என்பதை இந்தியா உணர்ந்து கொள்ள வேண்டும். இவ் விடயத்தை இந்தியா தானாக உணர்ந்து கொள்ளாவிட்டால் அதனை இந்தியாவுக்கு உணர்த்தும் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழையின் சிரிப்பில்.....

● சோபனா



இன்று உலக ஏழைகள் தினம்

"பொழுது விடிஞ்சிட்டு; இப்படி யோசிச்சுக் கொண்டே இருந்தா இண்டைய பொழுதுக்கு என்ன செய்யிறது? எங்காவது போய்த் தேடிக்கொண்டு வாங்கோவன். தன்னை மறந்து யோசனையில் ஆழ்ந்திருந்த முத்துவை பரிதாபக் குரல் ஒன்று தட்டி எழுப் பியது.

சரி ! அந்தப் பையை எடுத்துக் கொண்டு வா. இப்படியே எங்காவது போய்ப் பார்த்துக் கொண்டு வாறன் . நீ வீட்டு வேலையைப் பாரு. மனைவியிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டு கால் போன திசையில் ஏக்கத்தோடு நடக்க ஆரம்பித்தான் முத்து. சொந்த இடத்துக்கு வந்த நிம்மதி ஒரு புறம் இருந்தாலும் இல்லாமை யில் இருந்து மீள முடியாத அள வுக்கு சோதனைகள் அவர்களைத் துரத்தியது. மென்று தின்ற கொடூரப் போர் ஆசையாகக் கட்டிய வீட்டையும் தரை மட்டமாக்கியது. இப்ப கொண்டு வந்து மீள்குடியேற்றப் போர்வையில் ஒன்றுமில்லாமல் நிர்க்கதியான நிலையில் தள்ளப்பட்ட குடும்பங்களில் முத்துவின் குடும்பமும் ஒன்று. யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் கொடுத்த தறப்பாள் தான் வெயிலிலும் , மழையிலும் இருந்து இவர்களைக் காப்பாற்றியது.

உயர்ந்த வேப்ப மரத்தின் கீழ் நான்கைந்து தடிகளால் சுற்றிக் கட்டப்பட்ட தறப்பாள் கொட்டகை தான் இவர்களது இப்போதைய வீடு. இருந்த சொத்துக்கள் அழிந்த பின் புதிதாக ஒவ்வொன்றையும் தேட பொருளாதார நிலை இடம் கொடுக்கவில்லை. அன்றாட வயித்துப் பசி மட்டும் தான் நினைவாக இருந்தது. விடிகின்ற ஒவ்வொரு பொழுதையும் எவ்வாறு கழிக்கப் போகிறோம் .

பிள்ளைகளின் பசியை எப்படித் தீர்க்கப் போகிறோம்? ஐயோ கடவுளே! இண்டைக்கு என்றாலும் வழிகாட்ட மாட்டாயா?'' என்று மனதுக்குள் சிந்தனை ஊட்டல்கள் வந்து போய்க் கொண்டிருக்கும் வறுமையில் சிக்குண்ட இந்த மக்களது மனங்களில்.

மேலும் மேலும் தமது வாழ்வாதாரத் தேவைகளுக்காக அரச சார்பற்ற நிறுவனங்களில் தங்கியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை வடக்குக் கிழக்கைப் பொறுத்த வரை குறைந்தபாடில்லை.

போருக்குப் பின்னர் , போருக்கு முன்னர் என வரையறுத்துக் கூறப்பட்டாலும் பாதிப்புற்ற குடும்பங்களது ஏக்கங்கள் வறுமையின் பிடியில் இருந்து மீள வேண்டும் என்பதாகவே இருக்கும். இன்னும் சொல்லப் போனால் அவர்களது முக்கிய தேவை வயிற்றுப் பசியைப் போக்க வேண்டும் என்பதே.

இன்றும் அரசின் சமுர்த்தியை நம்பி கையேந்திகளாக இருக்கும் குடும்பங்களும் உள்ளன. ஆனால் மக்களது வாழ்வாதாரத் தேவைகள் முக்கிய அடிப்படைத் தேவைகளை சரியான முறைகளில் பெற்றுக் கொடுக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

'' இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே'' எனும் நிலையில் அரச அதிகாரிகள் தமது நலன்களை மட்டுமே கருத்தில் கொள்கிறார்கள். ஆனால் வறுமையில் சிக்குண்டுள்ள மக்களது அவலங்கள் அவர்களது கண்களுக்குத் தெரியவில்லை.

வடக்குக்கிழக்கைப் பொறுத்த வரையில் சொத்தழிவுகள் தாராளமாக நடைபெற்றதால் அவற்றை மீளப் பெறுவதற்கான முயற்சிகளிலேயே பொது மக்கள் இருக்கின்றனர். எனினும் பொருளாதாரப் பின்னடைவு, தொழில் வாய்ப்பின்மை, குடும்பச் செலவு, பொருள்களின் விலையேற்றம் அவர்களை அன்றாட சீவியத்தை மட்டும் கட்டுப்படுத்தின. ஒவ்வொரு நாளும் இன்றைய பொழுதை பசியில்லாமல் எப்படிக் கழிப்பது என்ற சிந்தனையுடனே கழிகிறது.

குடாநாட்டின் 6 இலட்சத்துக்கும் மேற்பட்ட சனத் தொகையில் 4 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டுக்குள் இருப்பதுடன் சமுர்த்தி முத்திரைகளை நம்பியும், அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளுடனும் தங்கி வாழ்கின்றனர். இந்த வறுமைக்கு மூல காரணமாக தொழில் வாய்ப்பின்மை கூறப்படுகிறது. தொழில் வாய்ப்பின்மை பிரதானமாக இருப்பதால் அடுத்த படியாக நிதிப் பற்றாக்குறை பெரும் தலையிடியைக் கொடுக்கிறது.

எனவே அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற கைகொடுக்கும் தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மஹிந்த சிந்தனையின் கீழ் வறுமையற்ற இலங்கையைக் கட்டியெழுப்புவோம் எனும் குறிக்கோள் நடைமுறை ரீதியில் சரியான முறைகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா? மக்களை வறுமையில் இருந்து மீட்சியடைய வைக்கிறதா என்பதை நாம் பாதிப்புற்றுள்ள மக்களது முன் நிறுத்திப் பார்க்க முடியும்.

ஏனைய நாடுகளைப் போன்று பட்டினிச் சாவுகள் எமது நாட்டில் உருவெடுக்கா விட்டாலும் எதிர்வரும் காலங்களில் அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட இடமளிக்காது அதற்கான மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பார்கள். அந்த ஏழையின் வயிற்றுப் பசி போக்கப்பட்டால் மட்டுமே அந்த ஏழையால் புன்முறுவல் செய்ய முடியும்.

# மாணவரும் தலைமைத்துவமும்....

● தென்னவன்

தென்மராட்சி கல்வி வலயத்தினர் வலயப் பாடசாலைகளின் மாணவத் தலைவர்களுக்கு தலைமைத்துவ திறன்விருத்தி தொடர்பான மூன்று நாள் பயிற்சி நெறியை அண்மையில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடத்தினர். இந்தப் பயிற்சி நெறியில் பாடசாலைகளைச் சேர்ந்த 76 ஆண், பெண் மாணவத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

மூன்று தினங்கள் வதிவிடப் பயிற்சிகளாக நடத்தப்பட்ட பயிற்சி நெறியில் பங்குபற்றிய மாணவர்கள் பயிற்சியின் முழுமையைத் தாம் நேரடியாக அனுபவித்து பூரண அறிவைப் பெறக்கூடியதாக அமைந்ததாக தமது அனுபவப் பகிர்வின் போது தெரிவித்தனர்.

பயிற்சிகளின் போது வழங்கப்பட்ட ஒவ்வொரு செயற்பாடும் எம்மை அவற்றில் முழுமையாக ஈடுபட வைத்ததுடன் எமக்குக் கிடைத்த அனுபவங்களை எமது பாடசாலைகளின் அனைத்து மாணவர்களுக்கும் விரிவுபடுத்தி பாடசாலையின் த்ரத்தை மேன்மேலும் உயர்த்தப் பாடுபடுவோம்.

எமது பாடசாலைக் கல்விச் செயற்பாட்டுக்கு அப்பால் உள்ள விடயமாக கருதி பயிற்சிக்கு வந்த எம்மை கல்வியின் உயர்வை மட்டுமன்றி கல்விச் சமூகத்தையும் எந்த வகையில் பயன்படுத்தி எமது எதிர்காலத்தை திட்டமிட்டு மேம்பாடு காண உழைக்க முடியும் என்பதையும், எதிர்காலத்தில் நடத்தப்படும் இவ்வாறான பயிற்சி நெறிகளின் நாள்களை அதிகரித்து எம் போன்ற மாணவர்களுக்கு சிறந்த தலைமைத்துவத்தை மட்டுமல்ல சிறந்த எதிர்காலத்தையும் உருவாக்க முடியும் என்பதும் மாணவர்களின் அனுபவப் பகிர்வாகும்.

மாணவர்களுக்கு தலைமைத்துவப் பண்புகளை விளக்கும் வகையில் ஒவ்வொரு பயிற்சிகளும் கருத்துரைகளும் அமைந்திருந்தன. எந்த நேரத்திலும் எம்மை ஒரு நிலைப் படுத்தக்கூடிய தியானப் பயிற்சிகள் எமது எதிர்காலத்துக்கு மிகமிக பயனுள்ளதாக அமைந்துள்ளன. பயிற்சிகளில் யாழ். பல்கலைக் கழக வணிகக் கற்கைகள் பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா '' தலைமைத்துவ திறன்கள்'' என்னும் தலைப்பில் ஆற்றிய உரை மாணவர்களை மேன்மேலும் திறனுள்ளதாக மாற்றக்கூடிய கருத்துக்களாக அமைந்தன.

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி பி.நந்தகுமார் ''சூழலும் சவால்களும்'' என்னும் தலைப்பில் ஆற்றிய கருத்துரை மிகமிக சிறப்பாக அமைந்தது. அதனைக் கருத்துக்கள் என்பதை விட அவரது அனுபவத்தை மாணவர்களுடன் தானும் ஒரு மாணவனாக மாறி பகிர்ந்து கொண்ட விதங்கள் பெரிதும் பயனுள்ளதாக அமைந்தன. மனித வாழ்வில் நேரம் என்பது ஒரு அவசியமானதொன்றாக இருக்கவேண்டும் என்பதை உதாரணங்களுடன் தெளிவாக புரியக்கூடிய வகையில் உரையாற்றிய ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் ச.சுந்தரரேசனின் கருத்துக்கள் பெறுமதிமிக்கவை.

தன்னைத் தானே அடக்கி மனதை ஒரு நிலைப்படுத்தி ஆன்மிக சிந்தனையை உருவாக்கக்கூடிய தியானப் பயிற்சியானது ஒவ்வொரு மாணவனும் அவசியம் தெரிந்திருக்க வேண்டிய கலையாகும். வடமாகாண சின்மய மிஷன் வதிவிட ஆச்சாரியார்-ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் பொறியியற்பீட மாணவனாக இருந்த காலத்திலேயே ஆன்மிக செயற்பாடுகளில் ஏற்பட்ட ஆர்வத்தினால் குருவிடம் தாம் பெற்ற கல்வியை மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லும் 'பயிற்சியின் பக்குவம் சிறந்த தலைமைத்துவ சிந்தனையை மாணவர்களுக்கு உருவாக்கும் என திடமாக நம்பலாம்.

'தொழில் வழிகாட்டல்' என்னும் தலைப்பில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி ஆற்றிய உரையில் நல்ல வேலையை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதில் உள்ள நிலைப்பாடுகளை மாணவர்கள் . எந்த வகையில் கைக்கொள்ள வேண்டும் என்பதை தெளிவாக விளக்கியதாக அமைந்தது. தொழில் தெரிவின் போது நிதானமாக கற்பித்தல், நல்ல மனிதர்களுடன் கலந்தாலோசித்தல், ஆசிரியரிடம் ஆலோசனை பெறல், பெற்றோருடன் இணைந்து முடிவெடுத்தல், தன்னம்பிக்கை , கல்வியில் அக்கறை போன்றவற்றைக் கைக்கொள்ள வேண்டுமென அவர் அறிவுறுத்தினார்.

'' செயற்படுத்தி முடிக்கும் வரை சில விடயங்கள் எப்பொழுதும் சாத்தியமற்றதொன்றாகவே காட்சி தருவதுண்டு '' என தென்னாபிரிக்க குடியரசின் தந்தை நெல்சன் மண்டேலா தெரிவித்த கருத்தை மாணவர்கள் உதாரணமாகக் கைக்கொண்டு செயற்படுவது எதிர்காலச் சிறப்புக்கு பெரிதும் கை கொடுக்குமென தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தனது தலைமையுரையில் தெரிவித்து அறிவோ திறனோ மனப்பாங்கோ எதுவாயிருப்பினும் அவற்றை பிறர் கற்றுத் தரட்டும் என முழுமையாக எதிர்பார்த்து நிற்பதை தவிர்த்து விடுவோம் . ஏனெனில் பிறர் கற்றுத் தரட்டும் என முழுமையாக எதிர்பார்த்து நிற்கும் மாணவர்களிடையே தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு விடும். அது அவர்களது செயற்திறனைக் குறைத்து விடும். சிந்தனை ஆற்றலை மழுங்கடித்து விடும். எனவே இலக்கு நோக்கிய உங்களது ஈடுபாட்டை ஆழமாக்குங்கள். ஈடுபாட்டை ஆழமாக்க மேம்பாடு உங்களைத் தேடி வரும். இங்கு பெறும் பயிற்சிகளை இதற்கான ஒரு கருவியாக பயன்படுத்திக் கொள்ளுங்கள். எமது காலத்தில் நாட்டுக்கு நற்பணியாற்றிய உலகத் தலைவர்களாக பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய நெல்சன் மண்டேலா, அன்னை திரேசா, அப்துல் கலாம் போன்றோரின் பெயர்களைக் கொண்ட அணிகளாக உங்களைப் பிரித்து பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இது உலகப் புகழ்பெற்ற உன்னத தலைவர்களது நினைவுகளை வாழ்க்கை வரலாற்றை மாணவர்களின் தலைமைத்துவப் பயிற்சியின் போதும் பின்னரும் நினைவு கூரத்தக்க வகையில் உங்கள் செயற்பாடுகள் அமைய வேண்டும் எனக் கூறினார்.

பயிற்சிக் காலத்தில் வழங்கப்பட்ட ஒவ்வொரு செயற்பாடுகளும் மாணவர்களின் எதிர்காலக் கனவுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டவையாக அமைந்தன என்பது ஒட்டுமொத்த கண்ணோட்டமாக அமைகிறது. ஒழுங்கமைத்த அனைவருக்கும் பாராட்டுக்களைக் கூறுவதுடன் இவ்வாறான பயிற்சிகள் அனைத்து மாணவர்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் டெங்கு ஒழிப்பு



தென்மராட்சி, ஜூன் 28
சுகாதார அமைச்சால் விடுக்கப்பட்ட டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளில் வீடு வீடாகச் சென்று டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக செயற்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வாரத்தில் பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபை ஊழியர்கள், கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பட்டதாரி பயிலுநர்கள், சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் அந்தந்தப் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொலிஸார், படையினர் ஆகியோரின் பங் களிப்புடன் பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன.

இதன் பிரகாரம் ஜூலை முதலாம் திகதி மட்டுவில், மந்துவில் பிரதேசங்களிலும், 2 ஆம் திகதி கைதடி, 3 ஆம் திகதி நாவற்குழி, 4 ஆம் திகதி கொடிகாமம், 5 ஆம் திகதி சாவகச்சேரி நகரசபை, 6 ஆம் திகதி வரணி, 7 ஆம் திகதி எழுதுமட்டுவாழ் ஆகிய பிரதேசங்களில் டெங்கு நுளம்பு ஒழிப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## வீதி உரிமை தொடர்பில் சபைகளிடையே திண்டாட்டம் சிரமத்தில் பொதுமக்கள்

வலி.வடக்கு, ஜூன் 28
குறித்த வீதி எந்தப் பிரதேச சபைக்குரியது என் பதில் ஏற்பட்டுள்ள குழறுபடியால் பொது மக்கள் சிரமத்துக்கு உள்ளாகும் நிலையில் உள்ளனர்.

வலி. வடக்கு தெல்லிப்பளைப் பிரதேச சபையையும் வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச சபையையும் பிரிக்கும் எல்லையாக காணப்படும் வயாவிளான் குட்டியபுலம் பகுதியில் உள்ள வீதியே இத்தகைய நிலையில் உள்ளது.


குட்டியபுலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் தெற்கு புறம் அமைந்துள்ள வீதியே இத்தகைய நிலைக்குட்பட்டுள்ளது. பொது மக்கள் பயணிக்க முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டு காணப்படுகின்ற போதிலும் இரு பிரதேச சபைகளாலும் கவனிக்காது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

ஏற்கனவே மக்கள் போக்குவரத்து வசதிகள் இன்றி தவிக்கும் இக்கிராமத்தில் போக்குவரத்துப் பாதையும் சீரற்ற நிலையில் காணப்படுகின்றமை அவர்களை மேலும் துன்பத்துக்கு உள்ளாக்குகிறது.

அரைகிலோ மீற்றர் தூரமான பாதை குன்றும் குழியும் நிறைந்து காணப்படுவதுடன் மழை பெய்தால் போக்குவரத்து செய்ய முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

குறித்த வீதியை வலி கிழக்கு பிரதேச சபையோ அன்றி வலி.வடக்கு பிரதேச சபையோ மனிதாபிமான அடிப்படையில் திருத்தி மக்கள் போக்குவரத்தை இலகுவாக மேற்கொள்ளக் கூடியதாக மாற்ற வேண்டும் என அந்தப் பகுதியில் உள்ள பொது அமைப்புக்களாலும் மக்களாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ-86)

## குடாநாட்டில் தாராளமாக றம்புட்டான்



கொழும்புத்துறை, ஜூன் 28
குடாநாட்டில் றம்புட்டான் பழங்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. தென்பகுதியிலிருந்து எடுத்துவரப்படும் றம்புட்டான் பழங்கள் யாழ்.நகரில் பல இடங்களிலும் குவியலாக வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

தென்பகுதியில் இருந்து வாகனங்களில் கொண்டு வரப்படும் பழங்கள் பருமனுக்கேற்ப பல விலைகளிலும் விற்கப் படுகின்றன. பொதுமக்களும் பழங்களை வாங்குவதில் அதிக நாட்டம்காட்டி வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (வ-135)

## ஆயர் தினம் ஜூலை 3 இல்

கொழும்புத்துறை, ஜூன் 28
யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் 3 சிறப்பு நிகழ்வுகளின் நினைவையொட்டி ஆயர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை ஆயரின் பெயர் கொண்ட புனிதர் விழாவும், ஆயரின் அபிஷேகத் தினமும், பிறந்த தினமும் ஒருங்கே அமைந்த தினமாக அமைந் துள்ளது.

அன்றையதினம் காலை 9 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் பாடசாலை மாணவர்கள், அருட்தந்தையர்கள், பொது நிலையினருடன் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இது யாழ். ஆயரின் 75 ஆவது பிறந்த தினம் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-135)

## நால்வருக்கு விளக்கமறியல்

பளை, ஜூன் 28
அனுமதிப் பத்திரமின்றி மரப் பலகைகளை வாகனத்தில் ஏற்றி வந்த நால்வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றால் உத்தரவிடப்பட்டுள்ளது. கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இன்று வரை நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

## இன்னமும் 25 ஆண்டுகளில் யாழ்ப்பாணத்து நிலத்தடி நீர் அபாயகரமான கட்டத்தை எட்டிவிடும்

### எச்சரிக்கிறார் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்



அக்கராயன், ஜூன் 28
இன்னமும் 25 ஆண்டுகளுக்குள் யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் அபாயகரமான கட்டத்தை எட்டி விடும். இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான திருமதி துஸ்யந்தி மிகுந்தன்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் இரு நாள்களாக இடம் பெற்ற கருத்தரங்கொன்றில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கில் காலநிலை காரணமாக நீரில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாக திருமதி துஸ்யந்தி மிகுந்தனும் பெண்களுக்கும் நீருக்கும் இடையிலான தொடர்பு பற்றிய மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் இணைப்பாளர் திருமதி சறோசா சிவசந்திரனும், கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய நீர்ப்பாசனம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர் என்.சுதாகரனும், நீரும் தொற்று நோய்களும் தொடர்பாக மருத்துவர் எஸ்.முரளிகரனும், குழாய் நீர் வழங்கல் தொடர்பாக நீர் வழங்கல் சபையின் பொறியியலாளரும் கருத்துரை வழங்கினர்.

கிளிநொச்சி அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலாநிதி துஸ்யந்தி மிகுந்தன் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:

யாழ்ப்பாணத்தின் நீரிலும் மரக்கறி வகைகளிலும் நைதரசன் கலந்துள்ளது. இன்னமும் 25 ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் பெரும் ஆபத்தை எதிர்கொள்ளும் எனவும் அச்சம் வெளியிட்டார். (க-18)

## விபத்துக்களில் சிக்கிய மூவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, ஜூன் 28
வீதி விபத்துக்களில் சிக்கிக் காயமடைந்த மூவரும் தாக்குதலுக்கு இலக்கான பெண்ணும் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டனர்.

மட்டுவில் வெட்டவெளிப் பகுதியில் வேகமாக வீசிய காற்று மோட்டார் சைக்கிளை வீதியை விட்டு தூக்கி வீசியதில் கச்சாய் தெற்கைச் சேர்ந்த செல்வ நாயகம் ஜெயந்தன் (வயது-22) என்பவரும், ஏ9 வீதியில் இடம் பெற்ற வீதி விபத் தில் வட்டுக் கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த குலேந்திரன் தினேசன் (வயது-19) என்பவரும், கைதடிப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் கைதடி தெற்கைச் சேர்ந்த கதிரவேல் ரட்ணாகரன் என்பவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் குலேந்திரன் தினேசன் என்பவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

## நீரிழிவு பரிசோதனை முகாம் கொடிகாமத்தில்

தென்மராட்சி, ஜூன் 28
தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையமும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் இணைந்து கொடிகாமம் பிரதேச மக்களுக்கான நீரிழிவு பரிசோதனை முகாமொன்றை நடத்தவுள்ளன.

கொடிகாமம் சந்தை வளாகத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரையும் நீரிழிவு பரிசோதனை முகாம் நடத்தப்படவுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை பொதுவைத்திய நிபுணர் தலைமையிலான மருத்துவக் குழுவினர் பரிசோதனைகளை மேற்கொள்வதுடன், 'நீரிழிவு நோயால் ஏற்படும் பாதிப்புகளும் அவற்றைத் தடுக்கும் முறைகளும்' என்னும் பொருளில் கருத்தரங்கும் இடம்பெறும்.

பரிசோதனை முகாமில் அனைத்து மக்களையும் காலை உணவு அருந்தாமல் வந்து பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)


உளமார வாழ்த்திப் பாராட்டுகின்றோம்



எமது பாடசாலை அதிபர்
தியாகராசா சத்தியபாலன் SLPS-I
அவர்கள் அதிபர் சேவை தரம்-I இற்கு பதவி உயர்வு பெற்றமையை பாராட்டுவதோடு இன்னும் கல்வி புலத்தில் பல உயர்வுகள் பெற்றுப் பாரினில் சிறந்து விளங்க அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

கலட்டி வீதி,
நீர்வேலி. (38721)

பாடசாலைச் சமூகம்,
யா/முத்துத் தம்பி மகா வித்தியாலயம்.

யாழ்.நகரில்
29ஆம், 30ஆம்
திகதிகளில்
கனேடிய நாட்டு
கல்லூரிகளுக்கான
நுழைவு நேர்காணல்

For Canadian Education
I TRUST SENATOR!

LAST CALL FOR SEP'13 INTAKE

STUDY IN CANADA
STEP UP IN LIFE!

Brock University | Conestoga | Niagara College | University of Victoria | Seneca | Fanshawe College

CANADIAN ACADEMIC INSTITUTIONS
CERTIFIED COUNSELLORS - Not just Agents.

Why Canada?
- Immigration Friendly Laws, Economical cost of living & affordable tution fee
- Earn-While-U-learn Programs
- World's soundest banking system (Rated by World Economic Forum - Geneva)

Why Senator?
- Since 1998 - Asia's largest & Oldest Centre for Canadian Education
- COMPLETE Services- Admission to graduation travel & stay, change of status
- On spot interview and admission services
- Authorized admission Counsellers, not Agents

SOME OF OUR JAN&MAY '13 STUDENTS



Harish - PG-Pressure Systems, Conestoga College
Harini - Masters in Mech Engg, Concordia University
Keerthi - MBA-Univ. of Victoria (CAD 9000 scholarship)
Preethi - Internetworking, Alberta University
Jaidushia - Masters in Info. Security, Concordia University
Karthik - ITP Course, Lambton College

SPOT INTERVIEW ON 29th, &30th JUNE 2013 From 10.00am to 5.00pm
at 49, Subash Tourist Hotel, Victoria Road, Jaffna.

SENATOR
CENTRE for CANADIAN EDUCATION
An ISO 9001:2008 Organisation
Astra International Education & Logistics Pvt.Ltd.
33-A, 1/1, W.A.Silva MW Colombo-06
+94 077 271 5015, 075 848 9252, 011 ... 313 5051
www.TheSenator.org, info@thesenator.org
(C/10127)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 26 பேர் கைது

கஞுவாஞ்சிக்குடி, ஜூன் 28
சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்த 26 பேரை இராணுவத்தினர் வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.
களுவாஞ்சிக்குடி கடற்கரையிலிருந்து சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு முற்பட்டபோதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்களில் 15 பேர் வவுனியா பிரதேசத்தையும், ஆறு பேர் இங்கிரிய பிரதேசத்தையும், மூன்று பேர் மீகம பிரதேசத்தையும், ஏனையோர் களுவாஞ்சிகுடி மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களையும் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்டவர்கள் இராணுவத்தினரால் களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச)



திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் புனருத்தாபனப் பணிகளுக்காக அடிக்கல் நடும் விழா வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்தநிகழ்வில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவரது பாரியார் உட்பட அடியார்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## நவியான்குளப் பகுதி தனிநபரால் ஆக்கிரமிப்பு

### தடை செய்யக் கோருகிறார் றஹ்மான்

அம்பாறை, ஜூன் 28
மருதமுனைப் பிரதேசத்தின் பொதுத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய நவியான் குளப் பகுதி தனிநபரொருவரால் ஆக்கிரமிக்கப்பட்டு துண்டு துண்டாக அவரால் விற்பனை செய்யப்படுவதைத் தடை செய்ய வேண்டும்.
இவ்வாறு கல்முனை மாநகர சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர் இஸட். ஏ.எச்.றஹ்மான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
கல்முனை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் மருதமுனை நவியான் குளப் பகுதி தொடர்பாகக் கவனவீர்ப்புப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
மருதமுனைப் பிரதேசத்தில் அல்-மனார் மத்திய கல்லூரிக்குப் பின்புறமுள்ள நவியான் குளப்பகுதி சுமார் 21 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட முக்கிய பகுதியாகும்.
மழைகாலங்களில் மருதமுனையிலேற்படும் வெள்ளம் வடிந்தோடி இந்தக் குளப் பகுதியில் தேங்குவது வழக்கமாகும்.
அதேபோல் மருதமுனைப் பிரதேசத்தின் பொதுத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டிய முக்கிய பகுதியாகவும் இந்தப்பகுதி இருந்து வருகின்றது.
மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரிக்கான விளையாட்டு மைதானமாகவும் இதன் ஒரு பகுதி பயன்படுத்தப்பட்டு வருகின்றது.
ஆனால் தற்போது தனிநபரொருவர் நவியான்குளப்பகுதியை முறைகேடாக ஆக்கிரமித்து விற்பனை செய்து வருகிறார்- என்றார். (ச-30)

## கிழக்குப் பல்கலையின் விரிவுரை திங்கள்முதல்



மட்டக்களப்பு.ஜூன்28
கிழக்குப் பல்கலைக் கழகத்தின் விவசாய மற்றும் வர்த்தக முகாமைத்துவம் ஆகிய பீடங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.
விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ள இந்த பீடத்தினைச் சேர்ந்த மாணவர்கள் விடுதிகளுக்கு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை சமுகமளிக்குமாறு கிழக்குப் பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.
ஏனைய பீடங்களின் புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ச)

# மட்டு.நுழைவாயிலில் மீண்டும் புத்தர்சிலை

### அமைக்க திட்டமிடுகிறது புத்தசாசன அமைச்சு

மட்டக்களப்பு.ஜூன் 28
மட்டக்களப்பு நகர நுழைவாயிலில் மீண்டும் புத்தர் சிலையை நிறுவும் முயற்சி இரகசியமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இலங்கை மதவிவகார மற்றும் புத்தசாசன அமைச்சினால் இந்த நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு இரகசியமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று குற்றம் சாட்டப்படுகிறது.



மட்டக்களப்பு நுழைவாயிலில் புத்தர் சிலை அமைப்பதற்கு ஏதுவான நிலை தொடர்பில் ஆராயுமாறு இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய கலாசார திணைக்களங்களுக்கு இலங்கை மத விவகார மற்றும் புத்தசாசன அமைச்சினால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.
மட்டக்களப்பு நுழைவாயிலில் புத்தர் சிலை அமைப்பதற்கு மட்டக்களப்பில் பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துவரும் அதேவேளையில், மட்டக்களப்பு மங்கலராமய விகாராதிபதி அம்பட்டியே சுமங்கல தேரரின் வேண்டுகோளின் பேரில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன என்று கூறப்படுகிறது.
இதுதொடர்பில் ஒருவார காலத்துக்குள் அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மத விவகார, புத்தசாசன அமைச்சினால் கோரப்பட்டுள்ளது.
இன்னமும் சில நாள்களில் மூன்று, திணைக்களங்களையும் சேர்ந்த தலைவர்கள் மட்டக்களப்புக்கு வருகை தந்து இவ்விடயம் தொடர்பில் ஆய்வு செய்யவுள்ளனர்.
இதேவேளை மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்துக் கோயில்கள் உடைக்கப்பட்டு திருடப்பட்டமை தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அபிவிருத்தித் திட்ட ஆராய்வுக் கூட்டம்



மட்டக்களப்பு.ஜூன் 28
மட்டக்களப்பு மாவட்டத்துக்கான ஐந்து ஆண்டு அபிவிருத்தித் திட்டம் குறித்த திணைக்களங்களின் முன்மொழிவுகள் தொடர்பான ஆராய்வுக் கூட்டங்கள் மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ். எம்.சாள்ஸ் தலைமையில் நடைபெற்று வருகின்றன.
அத்றக்கமைய விவசாயம், நீர்ப்பாசனம் உள்ளிட்ட துறைகளுக்கான ஆராய்வுகள் புதன்கிழமை நடைபெற்றன.
இந்தக் கூட்டத்தில் விவசாயத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், விதைகள் அத்தாட்சிப்படுத்தல் பிரிவு ஆகியவற்றினது உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.
மாவட்ட அபிவிருத்தித் திட்டம் 2013 முதல் 2017 ஆம் ஆண்டு வரை நடைமுறைப் படுத்தப்படும் வகையில் தயாரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தூய எண்ணத்துடன் செயற்பட்டால் மாணவர் ஆளுமை மேலோங்கும்

### கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கூறுகிறார்

கல்முனை,ஜூன் 28
மாணவர்கள் தூய எண்ணத்துடன் செயற்படும் போதுதான் அவர்களது ஆளுமை மேலோங்கும் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீன் குறிப்பிட்டார்.
கல்முனைக்குடி அல் பஹ்ரியா மகா வித்தியாலயத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற அடிக்கல் நடும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
நவீன யுகத்துக்கு மாணவர்களைத் தயார் படுத்த வேண்டும். அவர்களுக்கு கணினி அறிவு அவசியமாகின்றது.
சில அரசியல் வாதிகள் அபிவிருத்தி எனக்கூறி கற்களை நட்டுவிட்டுப் போகின்றனர்.
பின் கல் வைத்த தடயமே இல்லை. அதை நானும் செய்ய விரும்பவில்லை. இந்தப் பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் நாம் தொடர்ந்தும் பங்காற்றுவோம்- என்றார். (ச-ரி)

## நாளை கட்டட திறப்பு விழா

அம்பாறை,ஜூன் 28
மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்ட நிந்தவூர் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
நிந்தவூர் பிரதேச செயலாளர் திருமதி ஆர்.யூ. அப்துல் ஜலீல் தலைமையில் நடைபெறவுள்ள இத் திறப்பு விழாவில், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. டி.ஜே.செனவிரத்ன பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் தாமதமாகலாம் ஆள் சேர்ப்புக்கான காலம்

## புனர்வாழ்வு அமைச்சின் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

வடக்கு மாகாணத்தில் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கான ஆள்சேர்ப்பு மேலும் காலதாமதமாகும். புதிய சேவைப் பிரமாண குறிப்பு வெளியான பின்னரே ஆள்சேர்ப்புக்கான நடவடிக்கை எடுக்கமுடியும் என வடக்கு மாகாண உள்ளூராட்சி நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

2013 ஜனவரி முதலாம் திகதியன்று முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட ஆளணிகளின் வெற்றிடங்களுக்கு ஏற்ப வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவில் அனுமதிக் கப்படும்.

எனினும் இதற்காக ஆளுநரினதும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினதும் அங்கீகாரத்துடன் புதிய சேவை பிரமாண குறிப்பு தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும். அதன் பின்னரே 1.1.2013 இன் ஆளணி அங்கீகரத்துக்கு அமைய ஆள் சேர்ப்பு இடம்பெறும்.

இதேவேளை - அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளுக்கு புதிய சேவைப்பிரமாண குறிப்பில் உள்வாரியாக உள்ள ஆளணியினரை உள்வாங்க 8 ஆம் வகுப்பில் சித்தியும்-

வெளிவாரியாக ஆள்சேர்ப்பு செய்யப்படின் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் 6 பாட சித்தியுடனேயே அட்டவணைப்படுத் தப்படாத பதவியணிகளுக்கான ஆள்சேர்ப்பு இடம்பெறுவதற்கான சேவைப் பிரமாண குறிப்பு தயாரித்து வெளியிடப்படவுள்ளது.

உள்வாரியாக உள்ள அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளை வகிக்கும் தரப்பினருக்கான மேற்படி சேவைப் பிரமாண குறிப்பு வெளியிட ஏற்பட்டுள்ள காலதாமதத்தால் வடமாகாணத்தில் உள்ள சிற்றூழியர்கள் பெரிதும் பாதிக் கப்பட்டு வருகின்றனர்.

> 2013 ஜனவரி முதலாம் திகதியன்று இல் முகாமைத்துவ சேவைத் திணைக் களத்தால் அனுமதிக் கப்பட்ட ஆளணிகளின் வெற்றிடங்களுக்கு ஏற்ப நிரப்புவதற்கு விரைவில் அனுமதிக் கப்படும்.

மேலும் புதிய சேவைப் பிரமாண குறிப்பு இந்த ஆண்டு முடிவடைவதற்குள் வெளியிடப்படுமா? என உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரையும், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரையும் பாதிக் கப்பட்டு வரும் சிற்றூழியர்கள் கோரிய வண்ணம் உள்ளனர்.- என்றுள்ளது. (வ-9)

# வல்லிபுர ஆழ்வாருக்கு கும்பாபிஷேகம்



வடமராட்சி, ஜூன் 28

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

கலசங்கள், தூபிகள், இராஜகோபுரம் ஆகியவற்றுக்கு முதலில் வரிசைப்படி அபிஷேகம் இடம்பெற்று விநாயகர் அபிஷேகம் நடைபெற்றதைத் தொடர்ந்து மூல மூர்த்தியான சங்கு சக்கர ஆழ்வாருக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றன.

பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்களின் வழிகாட்டலில் பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு, பிரம்மஸ்ரீ ச.க.புருஷோத்தமக் குரு ஆகியோர் தலைமையில் ஸ்தானிக இளைய குரு பிரம்மஸ்ரீ சுதர்சன கணபதீஸ்வரக் குரு மகா கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார். (வ-8)

# சேமலாப அங்கத்தவரின் கைவிரல் அடையாளமிடும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

ஊழியர் சேமலாப நிதித்திட்டத்தில் இணைந்தவர்களுக்கான கைவிரல் அடையாளம் பெறும் பணிகள் வடமாகாண தொழில் திணைக்களத்தால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வட மாகாண தொழில் திணைக்களம் பிரதித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைந்துள்ள அங்கத்தவர் தமது நிதியை சேமிப்பில் வைத்திருப்பதற்கு கைவிரல் அடையாளம் முக்கியமான தொன்றாகக் கணிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கத்தவர்களது கைவிரல் அடையாளம் உறுதிப் படுத்தப்பட வேண்டியுள்ளது.

வடமாகாணத்தில் ஏற்கனவே இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் நிலையில் இதுவரை கைவிரல் அடையாளத்தை உறுதிப்படுத்தாத ஊழியர் சேமலாப நிதி அங்கத்துத்திற்கு உரியவர்களது கைவிரல் அடையாளங்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பண்ணை வீதியில் அமைந்துள்ள வடமாகாண தொழில் திணைக்களத்தில் இந்தப் பணிகள் இடம் பெற்றுவருகின்றன என்று மேலும் தெரிவித்தார். (வ-14-17)

# நான்கு நூல்களின் வெளியீட்டு விழா

நெளுக்குளம், ஜூன் 28

வவுனியாவில் நான்கு நூல்களின் வெளி யீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளன. வவுனியா நகர சபை மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணியளவில் சு.வரதகுமாரின் மனவடுக்கள் (கவிதைத் தொகுப்பு), மனமே பேசு (குறுநாடகத் தொகுப்பு), சிந்தித்தால் துன்பமில்லை (சிறுவர் கதை), செ.சதீஷின் இரும்புக் கதவுக்குளிருந்து (கவிதைத் தொகுப்பு) ஆகிய நான்கு நூல்களின் வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளன.

வவுனியா தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கவுள்ளார். (க-402)

## தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?




**மேடர்:** உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப் பீர்கள். நீண்ட நாள்களாகப் பார்க்க நினைத்தவரை சந்திப்பீர்கள். உத்தி யோகத்தில் இழந்த உரிமையைப் பெறுவீர்கள்.



**இடபர்:** நண்பர்களின் ஆதரவு அதிகரிக்கும். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார்.



**மிதுனர்:** வீண் பதற்றம் வந்து செல்லும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலை யாளகளைத் தேடுவீர்கள். உத்தி யோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.



**கடகர்:** செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். சில நேரங்களில் மற்றவர்களுக்காக நியாயம் பேசப் போய் வம்பில் சிக்கிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களைக் குறை கூற வேண்டாம்.



**சிங்கர்:** திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாக முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். உத்தி யோகத்தில் அதிகாரிகள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.



**கன்னி:** மற்றவர்களை நம்பி எந்த வேலைகளையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் நிம்மதி உண்டு.

**நாளை**

*ஆனி-15 சனிக்கிழமை 29.06.2013*
*திதி: ஸப்தமி பி.இ.04.38 வரை*
*நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ. 08.07வரை*
*சுபநேரம்: 02.56 - 04.26 வரை*
*இராகுகாலம்: 08.56 - 10.26 வரை*



**துலார்:** தைரியமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். நீண்ட நாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.



**விருச்சிகர்:** கம்பீரமாகப் பேசி காரியங்களை சாதிப்பீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் தேடி வரும்.



**தனுசு:** நம்பிக்கைக்குரியவர்களை ஆலோசித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். பால்ய நண்பர்கள் உங்கள் தேவையறிந்து உதவுவார்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள்.



**மகரர்:** உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதைக் கண்டறிவீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும்.



**கும்பர்:** சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.



**மீனர்:** சிக்கனமாக இருங்கள். வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 1 | | 3 | | 7 | 6 | |
| | 7 | 4 | 5 | 6 | 9 | 1 | | |
| 3 | | | | 7 | | 5 | | |
| | | | 4 | | | | | |
| | | 2 | 6 | 5 | 3 | 9 | | |
| | | | | | 8 | | | |
| | | 5 | | 4 | | | | 3 |
| | | 3 | 9 | 8 | 7 | 6 | 1 | |
| | 6 | 8 | | 1 | | 4 | 2 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 9 | 6 | 2 | 3 | 8 | 1 | 7 |
| 1 | 7 | 6 | 8 | 4 | 9 | 3 | 5 | 2 |
| 3 | 8 | 2 | 7 | 5 | 1 | 9 | 4 | 6 |
| 7 | 1 | 4 | 3 | 6 | 8 | 2 | 9 | 5 |
| 9 | 6 | 8 | 5 | 7 | 2 | 4 | 3 | 1 |
| 2 | 3 | 5 | 1 | 9 | 4 | 7 | 6 | 8 |
| 8 | 5 | 3 | 9 | 1 | 7 | 6 | 2 | 4 |
| 4 | 9 | 1 | 2 | 8 | 6 | 5 | 7 | 3 |
| 6 | 2 | 7 | 4 | 3 | 5 | 1 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய, வடமத்திய மாகாணங்களில் 13 இற்கு எதிரான பிரேரணை இன்று

## பெரும்பான்மை ஆதரவு அரசுக்கே

கொழும்பு, ஜூன் 28

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பிலான பிரேரணை அங்கீகாரத்துக்காக இன்று மத்திய, வடமத்திய மாகாண சபைகளில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வடமேல், சப்ரகமுவ, தென் மாகாணங்கள் குறித்த பிரேரணைக்கு ஒப்புதல் வழங்கியுள்ள நிலையில், இன்று மேற்படி இரண்டு மாகாணங்களின் அங்கீகாரமும் இதற்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்விரு மாகாணங்களிலும் பெரும்பான்மையான வாக்குகளுடன் 13 தொடர்பிலான பிரேரணை நிறைவேறுவது உறுதியானதும், ஆளுந்தரப்பிலுள்ள சிலர் பிரேரணையை எதிர்க்கவுள்ளமையானதும் அரசுக்குப் புதியதொரு அரசியல் நெருக்கடியாக அமையப் போகின்றது.

குறிப்பாக, மத்திய மாகாண சபையைப் பொறுத்தமட்டில், அரசின் பங்காளிக் கட்சியாகவுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஐந்து உறுப்பினர்களும், குறித்த பிரேரணைக்கு எதிராக வாக்களித்தாலும், அதை நிறைவேற்றிக் கொள்வதற்கான பலம் ஆளுந்தரப்புக்கு இருக்கின்றது. 58 உறுப்பினர்களில் சுமார் 18 பேரே எதிரணியில் இருக்கின்றனர்.

எனவே, ஐ.தே.கவுடன் இணைந்து 13இற்கு எதிரான பிரேரணையை இ.தொ.கா. உறுப்பினர்கள் எதிர்த்தாலும், அதைத் தோற்கடிப்பது இயலாத விடயமாக இருந்தாலும் குறித்தப் பிரேரணைக்கு எதிராக வாக்குகளைச் செலுத்தி இ.தொ.கா. கட்டாயம் எதிர்ப்பை வெளியிட வேண்டும் என்று மலையக புத்திஜீவிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மத்திய மாகாணசபை அமர்வுகள் இன்று நடைபெறவுள்ளன. இதன்போது முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவால் குறித்த பிரேரணை சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதேவேளை, வடமத்திய மாகாணசபையிலும் 13 தொடர்பிலான பிரேரணையை முதல்வர் இன்று ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கவுள்ளார்.

ஆளுந்தரப்பிலுள்ள 21 பேரில் சிலர் பிரேரணையை எதிர்க்கக்கூடும் என அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகின்றன. பேர்ட்டி பிரேம்லாலின் குழுவே இவ்வாறு செயற்படும் எனக் கூறப்பட்டாலும் அது தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வ தகவல்கள் வெளியாகவில்லை.

வடமத்திய மாகாணத்தில் ஆளுந்தரப்பில் இரண்டு முஸ்லிம் உறுப்பினர்களும் இருக்கின்றனர். 11 ஐ.தே.க. உறுப்பினர்கள் உட்பட எதிரணியில் 12 பேர் உள்ளனர். இருப்பினும், தீர்மானிக்கும் சக்தியாக ஆளுந்தரப்பே இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(த-சி)

# பஸ் கட்டண உயர்வு இரு நாட்களில் பதில்

## பஸ் உரிமையாளர் சங்க அறிக்கை குறித்து அமைச்சர் கருத்து

கொழும்பு, ஜூன் 28

பஸ் கட்டண உயர்வு தொடர்பாக நேற்று நடைபெற்ற பேச்சின் போது தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டண உயர்வு குறித்த அறிக்கைக்கு இன்னும் 2 நாட்களில் பதிலளிக்கப்படும் என தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சீ.பி.ரத்னாயக்க தெரிவித்தார்.

பஸ் கட்டண உயர்வு தொடர்பான பேச்சு, நேற்றுக்காலை தனியார் பஸ் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், தனியார் போக்குவரத்துத் துறை அமைச்சருக்கும் இடையில் போக்குவரத்து ஆணைக் குழுவில் நடைபெற்றது.

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் பஸ் கட்டணங்களை 10 சதவீதத்தால் அதிகரிக்குமாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் கோரி வந்தது.

இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை பேச்சு நடத்தப்பட்ட போது முடிவு எட்டப்படாத நிலையில், நேற்றுவரை பேச்சு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இதன்படி நேற்றைய சந்திப்பில் கட்டண உயர்வு தொடர்பில் கோரிக்கை அடங்கிய அறிக்கையொன்றை தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சீ.பி.ரத்னாயக்கவிடம் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன சமர்ப்பித்திருந்தார்.

இந்நிலையில், இதற்கான பதில் இன்னும் இரண்டு தினங்களில் அறிவிக்கப்படும் என்று அமைச்சர் சீ.பி.ரத்னாயக்க 'உதயனி'டம் தெரிவித்தார்.

# மஹிந்த நேற்று தன்சானியாவுக்கு



கொழும்பு,ஜூன் 28

ஐந்து நாள் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்சானியா மற்றும் சிசெல்ஸ் ஆகிய நாடுகளுக்கு நேற்று காலை புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இந்த இரு நாடுகளுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ மேற்கொள்கின்ற முதல் பயணம் என்பதுடன் இலங்கையின் ஜனாதிபதி ஒருவர் மேற்கொள்கின்ற முதல் பயணம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது, தன்சானியா ஜனாதிபதி ஜகாயா மிரிஷோ கிக்வெட் மற்றும் சீசெல்ஸ் ஜனாதிபதி ஜேம்ஸ் எலிக்ஸ் மிஷெல் ஆகியோருடன் இருதரப்பு பேச்சுக்களில ஜனாதிபதி ஈடுபடவுள்ளார்.

கடந்த வருடம் இலங்கைக்கு பயணம் செய்த சீசெல்ஸ் ஜனாதிபதி, தனது நாட்டுக்கு பயணம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ராஜபக் ஷவுக்கு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(த)

# அங்குசபாசப் பிள்ளையார் அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்.வண்ணை அங்குசபாசப் பிள்ளையார் (கீரிப்பிள்ளையார்) ஆலய அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை நடைபெறும் விசேட அபிஷேக, பூசைகளைத் தொடர்ந்து 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் சுவாமி உள் வீதி வலம் வருதலும் இடம்பெறும்.

11 ஆம் நாளன்று பகல் தீர்த்தோற்சவம் இடம்பெற்று மாலை வசந்த மண்டப பூசையை தொடர்ந்து திருவூஞ்சல் நடைபெற்று சுவாமி வெளிவீதியுலா வருதலும் இடம்பெறும்.

# பிச்சைக்காரரை கைது செய்த பொலிஸாரை கழந்த நீதிவான்

## நள்ளிரவில் ஆஜர்படுத்திய போது

கொழும்பு, ஜூன் 28

நள்ளிரவுவேளையில் யாசகர்களை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய பொலிஸாரிடம், 'உங்கள் பகுதியில் இந்நேரத்தில் வேறு எவ்வித குற்றச்செயல்களுமே இடம்பெறவில்லையா'? என நீதிவான் கேள்வி எழுப்பியதுடன், உணவு, உடை வழங்கி யாசகர்களைப் பொலிஸ் நிலையத்தில் தங்கவைக்குமாறு பணிப்புரை விடுத்த சம்பவமானது நேற்றுமுன்தினம் நள்ளிரவில் இடம்பெற்றுள்ளது.

மஹரகம பகுதியில் வழமையாக இரவுநேர ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் பொலிஸார் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு ஆறு யாசகர்களை கைது செய்தனர். சமூகத்துக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலே இவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என கூறப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட யாசகர்கள் நள்ளிரவு 11.05 மணியவில் பொலிஸாரால் மஹரகமவிலுள்ள நீதிவான் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இதன்போதே நீதிவான் மேற்படி பணிப்புரையை விடுத்தார்.

அதாவது, "நாளை காலைவரை இவர்களை பொலிஸ் நிலையத்தில் தங்கவைத்து உணவு, உடை, பானம் உட்பட இருப்பிட வசதியையும் அதற்குள்ளேயே ஏற்படுத்திக் கொடுக்கவும்" என்பதே கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகேயினால் பொலிஸாருக்கு விடுக்கப்பட்ட பணிப்புரையாகும்.

தேசிய பாடசாலை ஆசிரியர்தெரிவுப் பரீட்சைக்கான கருத்தரங்கு

சனி(28/06), ஞாயிறு(29/06)
காலை 10.00 - 4.00 மணிவரை
[illegible]

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள்பிரிவு
(ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### கூட்டமைப்பு - மு.கா. சந்திப்பு 13 தொடர்பாக முக்கிய பேச்சு

மையகமான தாருஸ்ஸலாமில் இடம்பெற்றது.

13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அரசு முயற்சிப்பதைக் கடுமையாக எதிர்க்கும் இவ்விரு கட்சிகளும் இந்தச் சந்திப்பின்போது அது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடின.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மு.காவின் சார்பில் அதன் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம், செயலாளர் எம்.ரி. ஹஸனலி, கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உயர்பீட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக அரசு நியமித்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்காதிருக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளது. அதேவேளை, இந்தத் தெரிவுக்குழுவில் தனது பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சேர்க்காது அரசு அதைப் புறக்கணித்துள்ளது.

இந்நிலையில், நேற்று இடம்பெற்ற கூட்டமைப்பு - மு.கா. சந்திப்பின்போது தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்காமைக்கான காரணங்கள் குறித்து சம்பந்தன், மு.காவிடம் தெளிவாகக் கூறியுள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் ஜனாதிபதி தம்மைப் பழிவாங்கிவிட்டார் எனவும், எனினும், 13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அரசு எடுக்கும் நடவடிக்கைகளைத் தாம் கடுமையாகத் தொடர்ந்து எதிர்ப்போம் என்றும் இந்தச் சந்திப்பின்போது மு.காவின் தலைவர் அமைச்சர் ஹக்கீம் கூட்டமைப்பிடம் உறுதியளித்துள்ளார்.

நேற்றிரவு இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது 13ஆவது திருத்தச் சட்டத்தில் அரசு திருத்தங்களைக் கொண்டுவந்தால் தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கவுள்ள பிரச்சினைகள் குறித்தும் இரு கட்சிகளும் ஆராய்ந்தன.

### இந்தியப் பொறியே 13 ஆவது திருத்தம்

னில் உள்ளக யுத்தமொன்று ஏற்பட்டது. அன்று வட பாகிஸ்தான், தென்பாகிஸ்தான் என்று பிளவு ஏற்பட்டிருந்தது. இதன் மூலம் அரசியல் இலாபத்தைப் பெறமுனைந்த இந்திய அரசு அதற்கான சூழ்ச்சி ஒன்றை வகுத்தது.

அதன்படி பாகிஸ்தானைத் துண்டாடுவதற்காகத் தனது படைகளை அங்கு அனுப்பியது இந்தியா. பாகிஸ்தான் துண்டாடப்பட்டது. பங்களாதேஷ் என்ற தனிநாடு உருவாகியது. இவ்வாறு தெற்காசிய நாடுகளைப் பலவீனப்படுத்த இந்தியா சகுனி வேஷத்தைத் தரிக்க ஆரம்பித்தது.

இதன் இன்னொரு கட்டமாக இலங்கையைப் பலவீனப்படுத்தித் துண்டாடுவதற்கு இந்தியா முயற்சித்தது. அன்று ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜயவர்தனவை இதற்காக மயக்கியது இந்தியா. யுத்தத்தில் பின்வாங்கிய நமது படைகளின் பலவீனத்தை உணர்ந்த இந்தியா, தனது படைகளை இங்கு அனுப்ப சூழ்ச்சிசெய்தது.

13 என்ற ஒன்றை இலங்கைக்குள் திணித்து அதனூடாக இந்தியப் படையை அனுப்பியது. அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவும் வேறு வழியின்றி 13ஐ ஏற்றார். இந்தியாவின் சூழ்ச்சியை அறிந்து 13இற்கு எதிர்ப்புத் தெரிவித்த என்னை அவர் கட்சியிலிருந்து விலக்கினார்.

எனினும், இலங்கையைத் துண்டாடுவதற்கு ஜே.ஆர்.ஜயவர்தன இடங்கொடுக்கவில்லை. என்றாலும், 13ஐ அனுமதித்து பெரிய பிழையை இழைத்துவிட்டார். இந்தியாவின் இரண்டாவது பொறியான இந்தியப் படை இன்று இலங்கையில் இல்லாவிட்டாலும் 13 என்ற முதலாவது பொறி இன்று மீண்டும் பிரச்சினைகளை உருவாக்கி வருகிறது.

இன்று 13இலுள்ள பொலிஸ், காணி அதிகாரங்களைக் கேட்டு ஒருசாரார் கோஷம் எழுப்புகின்றனர். ஒரு பொலிஸ் திணைக்களத்தை வைத்துக்கொண்டே இவ்வளவு அக்கிரமங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில், மகாணங்கள் தோறும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கினால் மேலும் அநியாயங்கள் இடம்பெற வாய்ப்புகள் உள்ளன. எனவே, சிந்தித்துச் செயற்படவேண்டும் என்றார்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது கல்லூரியின் அதிபர்

திருமதி. ஜெயந்தி தனபாலசிங்கம் (S.L.P.S.-I)

அவர்கள் 25.06.2013ஆம் திகதியன்று கல்வி அமைச்சில் நடைபெற்ற நிகழ்வில் அதிபர் சேவை தரம் ஒன்றிற்கு (S.L.P.S.-I) 01.06.2007ஆம் ஆண்டு தொடக்கம் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இவர் மேலும் பல உயர்வுகளைப் பெற்றிட மனதார வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி,
கிளிநொச்சி.

(சி/10129)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்பியனாகினர் இராமநாதன் மகளிர்



வெற்றிக் கிண்ணத்துடன்.....



சாதித்த இராமநாதன் மகளிர்...

யாழ்ப்பாணம், ஜுன் 28

யாழ்ப்பாணம் வேம்படி உயர்தரப் பாடசாலையின் 175 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாட சாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 15 வயதுப் பிரிவு மகளிருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் இராமநாதன் மகளிர் கல் லூரி அணி சம்பியனாகத் தெரிவாகியது.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி (கறுப்பு) அணியும், இராமநாதன் மகளிர் கல்லூரி அணியும் களமிறங்கின.

இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காது தமது திறமையை வெளிப்படுத்தின. விறுவிறுப்பாக நடை பெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் மாறி மாறிப் புள்ளி களைப் பெற்றவண்ணம் இருந்தன.

ஆட்டநேர முடிவில் இராமநாதன் மகளிர் கல்லூரி மகளிர் 43:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வேம்படி மகளிர் அணியை வெற்றி கொண்டனர்.

சிறந்த வீராங்கனைக்கான விருதை இராமநாதன் மகளிர் கல் லூரி அணி வீராங்கனை ஐஸ்வர்யா தட்டிச் சென்றார். (ற-23)



சளைக்காது போராடிய வேம்படி மகளிர்....



## சாதித்தது யூனியன்

யாழ்ப்பாணம், ஜுன் 28

யாழ்ப்பாணம் வேம்படி உயர்தரப் பாடசாலையின் 175 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாட சாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவு மகளிருக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் தெல்லிபழை யூனியன் கல்லூரி மகளிர் அணி சம்பியனாகத் தெரிவாகியது.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிபழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பமானது முதலே இரு அணிகளும் ஆக்ரோஷமாக மோதிக்கொண்டன. இரு அணியினரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில் மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தனர்.

ஒரு கட்டத்தில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மகளிரின் கை ஓங்கத் தொடங்கியது. அடுத்துத் தடுத்து புள்ளிகள் கிடைக்க, ஆட்டநேர முடிவில் தெல்லிபழை யூனியன் கல்லூரி மகளிர் அணி 26:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி மோதியது. அதில் 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி வெற்றிபெற்றது. (ற-23)

## இளவாலை கன்னியர் மட மகளிர் சம்பியன்

வடமாகாணப் பாடசாலைக ளுக்கு இடையே நடத்தப் பட்ட எறிபந்து சுற்றுத் தொட ரில், 19 வயது மக ளிர் பிரிவில் இள வாலை கன்னியர் மட மகா வித்தியாலய அணியும் வெற்றிபெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.

இறுதி யாட்டத்தில் இளவாலை கன்னியர் மட மகா வித்தி யாலய அணியை எதிர்த்து வவு னியா சுந்தரபுரம் சரஸ் வதி வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் இளவாலை கன் னியர் மட மகா வித்தியாலய அணி 13:25, 25:22, 25:17 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரி வாகியது. (ற-23-422)




## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜுன் 28

மற்றிக்ஸ்கோம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்ட சுற்றுத் தொடரில், யாழ். இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டத்திடலில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:-

பி.ப. 4மணி

யாழ்.இந்துக் கல்லூரி – ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை. (ற-23)


## கிரிக்கெட் சுற்றுத் தொடருக்கு விண்ணப்பிக்கலாம்


வடமராட்சி, ஜுன் 28

புலோலி குரும்பைகட்டி உதய சூரியன் விளையாட்டுக் கழகம் 10 பந்துப் பரிமாற் றங்கள் கொண்ட கிரிக்கெட் [illegible] ந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னராக உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தில் தொடர்பு கொள்ள [illegible] என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(ற-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விம்பிள்டன் ரென்னிஸ் : பெடரர், மரியா அதிர்ச்சித் தோல்வி



நடப்பு விம்பிள்டன் சம்பியனான சுவிற்ஸர்லாந்தின் ரொஜர் பெடரர் 2ஆம் சுற்றில் அதிர்ச்சித் தோல்வியடைந்து இந்த ஆண்டுக்கான விம்பிள்டனிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். பெண்கள் தனிநபர் பிரிவில் ரஷ்யாவின் மரியா ஷரபோவாவும் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

ஆண்கள் தனிநபர் பிரிவில் 3ஆம் நிலை வீரரான ரோஜர் பெடரர், உக்ரைனின் சேர்ஜி ஸ்ரக்வோஸ்கியிடம் 7:6, 6:7, 5:7, 6:7 என்ற செற் கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

6ஆம் நிலை வீரரான பிரான்ஸின் ஜோ வில்பிரட் சொங்கா, லத்வியாவின் ஏர்னஸ்ற் கர்பிஸிற்கு எதிராக 6:3 என்ற கணக்கில் முதலாவது செற்றைக் கைப்பற்றிய போதிலும், அதன் பின்னர் உபாதைக்குள்ளாகி 3:6, 3:6 என்ற கணக்கில் பின் தள்ளப்பட்டார். உபாதையின் தீவிரம் காரணமாக போட்டியிலிருந்து வெளியேறினார்.

10ஆம் நிலை வீரரான குறோசியாவின் மரின் சிலிக், பிரான்ஸின் கென்னி டிசெப்பருக்கெதிரான போட்டியில் உபாதை காரணமாகப் பங்குபற்றாது வெற்றியை விட்டுக் கொடுத்தார்.

பெண்கள் தனிநபர் பிரிவில், உலகின் 3ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா, போர்த்துக்கலைச் சேர்ந்த மிச்செல் லார்க்கெர் டி பிறிற்றோவிடம் 3:6, 4:6 என்ற நேர் செற் கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார்.

9ஆம் நிலை வீராங்கனையான கரோலின் வொஸ்னியாக்கி, செக் குடியரசைச் சேர்ந்த பெட்ரா செற் கோவ்ஸ்காவிடம் 2:6, 2:6 என்ற கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்ததோடு, 12ஆம் நிலை வீராங்கனை அனா இவானோவிக், கனடாவைச் சேர்ந்த இயூகெனி பௌச்சர்ட்டிடம் 3:6, 3:6 என்ற கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

உலகின் 2ஆம் நிலை வீராங்கனையான பெலாரசின் விக்ரோறியா அஷரெங்கா, இத்தாலியின் பிளவியா பெனற்றாவிற்கெதிரான போட்டியில் பங்குபற்றாது வெற்றியை விட்டுக் கொடுத்தார். அவரும் உபாதையினாலேயே ஆட்டத்தில் பங்கேற்கவில்லை.

(ற)

# விரைவில் குற்றப்பத்திரிகை

ஐ.பி.எல். தொடரில் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஸ்ரீசாந்த், அங்கித் சவான், சண்டிலா ஆகியோர் மீது விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட ஸ்ரீசாந்த், அங்கித் சவான் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சண்டிலா மட்டும் தற்போதும் சிறையில் உள்ளார்.

இவர்கள் மீது மொகோகா எனும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதியப்பட்டுள்ளது. அதன்படி ஆறு மாத காலத்துக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும்.

இதுகுறித்து டெல்லி பொலிஸ் ஆணையாளர் நீரஜ் குமார் கூறுகையில்,

''ஸ்ரீசாந்த், அங்கித் சவானை நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்திருக்கலாம். அதற்காக எங்கள் தரப்பு பலவீனமாக உள்ளதாக கருதக் கூடாது, எங்களிடம் வலுவான ஆதாரங்கள் உள்ளன. இந்தியாவில் சூதாட்டத்தைத் தடுக்க சரியான சட்டம் இல்லை. எனினும் மொகோகா பிரிவில் இந்த வழக்கை நடத்தலாம்.

சாதாரணமாக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய மூன்று மாத அவகாசம் உண்டு. இப்பிரிவில் ஆறு மாதம் வரை எடுத்துக்கொள்ளலாம்.'' என்று தெரிவித்துள்ளார்.(ற)

# நியூஸிலாந்து அதிரடி ஆட்டம் மண் கவ்வியது இங்கிலாந்து

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ''20/20' கிரிக்கெட் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது.

இங்கிலாந்து சென்றுள்ள நியூஸிலாந்து அணி, இரு '20/20 ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி லண்டனில் உள்ள லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

**ரூதர்போர்ட் அதிரடி**

நியூஸிலாந்து அணியை பிராங்கிளின் (0) ஏமாற்றினார். பின் இணைந்த ரூதர்போர்ட் மற்றும் அணித் தலைவர் பிரண்டன் மக்கலம் இணை அதிரடியில் மிரட்டியது. வோக்ஸ் வீசிய இரண்டாவது பந்துப்பரிமாற்றத்தில் ரூதர்போர்டு ஒரு சிக்சர், இரண்டு பவுண்டரிகள் பறக்கவிட்டார். பிரண்டன் தன் பங்குக்கு, ஒரு பவுண்டரி அடிக்க, அந்தப் பந்துப்பரிமாற்றத்தில் மொத்தம் 19 ஓட்டங்கள் பெறப்பட்டன.

'20/20' அரங்கில் தனது முதல் அரைசதத்தை பதிவு செய்த ரூதர்போர்டு 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அணித்தலைவர் பிரண்டன்

(68) 11ஆவது அரைசதத்தை பூர்த்தி செய்தார். கடைசி நேரத்தில் லதாம் (22), ரோஸ் ரெய்லர் (32) கைகொடுக்க, நியூசிலாந்து அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 201 ஓட்டங்களைக் குவித்தது.

**ரைட் அரைசதம்**


கடின இலக்கை துரத்திய இங்கிலாந்து அணிக்கு ஆரம்ப வீரர்களான லம்ப் (29), ஹேல்ஸ் (39) ஓரளவு கைகொடுத்தனர். அணித்தலைவர் மோர்கன் (7), பட்லர் (17) நிலைக்கவில்லை. லூக் ரைட் (52) அரைசதம் கடந்தார்.

கடைசி பந்துப்பரிமாற்றத்தில் இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு 16 ஓட்டங்கள் தேவைப்பட்டன. கோரி ஆண்டர்சன் வீசிய கடைசி பந்துப்பரிமாற்றத்தில் முதல் பந்தில் ஸ்டோக்ஸ் ஒரு சிக்சர் அடித்தார். இரண்டாவது பந்தில் ஓட்டம் எதுவும் எடுக்கப்படவில்லை.

மீதியிருந்த நான்கு பந்திலும் நான்கு ஓட்டங்கள் மட்டும் எடுக்கப்பட, இங்கிலாந்து அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 196 ஓட்டங்களை மட்டும் எடுத்து தோல்வி அடைந்தது. போபரா(30), ஸ்டோக்ஸ் (9) ஆகியோர் ஆட்டமிழக்காது இருந்தனர்.

ஆட்டநாயகன் விருதை நியூஸிலாந்து அணியின் ரூதர் போர்டு தட்டிச்சென்றார்.

(ற)





# இறுதியாட்டத்தில் பிரேஸில்

கொன்படரேசன் கிண்ண உதைபந்துத் தொடரில் பிரேசில் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

கொன்படரேசன் கிண்ண உதைபந்துத் தொடர் பிரேஸிலில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் மொத்தம் 8 நாடுகள் பங்கேற்றன. அவை 2 பிரிவாக பிரிக்கப்பட்டன.

'ஏ' பிரிவில் பிரேஸில், இத்தாலி, மெக்சிகோ, ஜப்பான் அணிகளும் 'பி' பிரிவில் உலக சம்பியன் ஸ்பெயின், நைஜீரியா, உருகுவே, தஹிதி அணிகளும் இடம் பெற்றன. கடந்த 23ஆம் திகதியுடன் லீக் ஆட்டங்கள் முடிந்தன.

இதன் முடிவில் 'ஏ' பிரிவில் இருந்து பிரேசில், இத்தாலி அணிகளும் 'பி' பிரிவில் இருந்து ஸ்பெயின் -உருகுவே அணிகளும் அரை இறுதிக்கு த்குதி பெற்றன. மெக்சிகோ, ஜப்பான், நைஜீரியா, தஹிதி அணிகள் வெளியேற்றப்பட்டன.

பிரேஸில்- உருகுவே அணிகள் மோதிய முதலாவது அரை இறுதி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் பிரேஸில் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

ஆட்டத்தின் 41ஆவது நிமிடத்தில் பிரேஸில் வீரர் பிரெட் முதல் கோலை அடித்தார். முதல் பாதியில் பிரேசில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. 2ஆவது பாதி ஆட்டம் தொடங்கிய 3ஆவது நிமிடத்தில் உருகுவே பதில் கோல் அடித்து சமன் செய்தது. எடின்சன் கவானி அந்த கோலை அடித்தார்.

ஆட்டம்முடிவடைய4நிமிடங்கள் இருந்தபோது பிரேஸில் அணி 2ஆவது கோலை அடித்து வெற்றி பெற்றது. பவுலினோ இந்த கோலை அடித்தார்.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L பொருளியல் நூல்
நடைமுறை விடயங்கள்
வினா-விடை
2013 A/L &
போட்டிப் பரீட்சைகளுக்குரியது.
விலை: ரூபா 80
வே.கருணாகரன்
(38628)
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

## நாளை மின்தடை

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும் உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் நாளை சனிக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் அச்சுவேலி இடைக் காடு, பத்தமேனி, வளலாய், தொண்டமானாறு வீதிப் பிரதேசம், இளவாலை, மாதகல், சில்லாலை, சுழிபுரம், விளான், பண்டத் தரிப்பு, வடலியடைப்பு ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

# வழக்குகளின் விசாரணைகளை உடனடியாகத் துரிதப்படுத்துங்கள்

## சட்டமா அதிபருக்கு பிரதம நீதியரசர் உத்தரவு

கொழும்பு,ஜூன் 28

வழக்கு விசாரணை எதுவும் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான வேலைத் திட்டம் ஒன்றைத் தயார் செய்யுமாறு இலங்கையின் சட்ட மா அதிபருக்கு பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் உத்தரவிட்டுள்ளார்.

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டு சுமார் 7 வருடங்களுக்கும் மேலாக விசாரணைகள் எதுவும் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணையின் போதே பிரதம நீதியரசர் அடங்கலான 3 நீதியரசர்கள் அடங்கிய குழு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

அந்த மனுதாரரின் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி தனது வாதத்தில் இவ்வாறு வருடக் கணக்கில் விசாரணை இன்றித் தடுத்து வைக்கப்படுவது இலங்கை அரசமைப்பை மீறும் செயல் என்று வாதிட்டார்.

இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் இவ்வாறு விசாரணைகள் இன்றி வருடக் கணக்கில் ஆள்களைத் தடுத்து வைப்பதை அனுமதிக்க முடியாது என்று கூறினார்.

இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தல் அல்லது விடுதலை செய்தல் குறித்து சட்டமா அதிபர் துரித முடிவை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.



இதனடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்களுக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கான அல்லது விடுதலை செய்வதற்கான ஒரு துரித திட்டத்தைத் தயாரிக்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

இதன் முதற் கட்டமாகப் போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுப் பல காலம் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் பட்டியலை அடுத்த மாதம் 9ஆம் திகதிக்கு முன்னதாகச் சமர்ப்பிக்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

அதனைப் பரிசீலித்து தான் அவர்களுக்கு வழக்கு தாக்கல் செய்வதா அல்லது அவர்களை விடுதலை செய்வதா என்பது குறித்து முடிவு எடுக்கவுள்ளதாகவும் மொஹான் பீரிஸ் தெரிவித்தார். (த)

# போதையில் நடனமாடிய பிக்குவுக்கு விளக்கமறியல்

கொழும்பு,ஜூன் 28

பொசன் போயா தினத்தன்று போதையில் நடனமாடிய பிக்கு ஒருவரை இன்று வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு குருநாகல் நீதிமன்ற நீதிவான் ரவிந்திர பிரேமரத்தன உத்தரவிட்டுள்ளார்.

குருநாகல் தெலியாகொன்ன பிரதேசத்தில் வைத்தே குறித்த பிக்கு குடித்துவிட்டு நடனம் ஆடியதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து குறித்த பிக்குவைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

பிக்குவை நேற்றுமுன் தினம் புதன்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தியபோது அவரை இன்று வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளதுடன் அவருடைய பௌத்த பிக்கு அடையாள அட்டையையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். (த)

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்
இனத்துவக் கற்கைக்கான சர்வதேச நிலையம்
இணைந்து நடத்தும்
"அவளின் கதைகள்"
அனுமதி இலவசம்
வடக்கிலும் தெற்கிலும் வாழ்கின்ற போரினால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்களத் தாய்மார்களின் வாய் மூலக் கதையாடல்களின்
கண்காட்சி
இடம்: Y.M.C.A. மண்டபம்
A-9வீதி, யாழ்ப்பாணம்.
(கச்சேரிக்கு அருகில்)
காலம்: இன்று 28/06/2013, நாளை 29/06/2013
மு.ப 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(38690)

SPOKEN ENGLISH
யாருக்காக?
- அரச, தனியார் அலுவலர்கள்
- பல்கலை, உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- தொழில் தேடுவோர்.
சனி, ஞாயிறு பிரிவுகள் - 3 மாதங்கள்
பிரிவு 01 : காலை 8.00 - 10.00 பிரிவு 02 : மு.ப 10.00 - 12.00
பிரிவு 03 : பி.ப 1.00 - 03.00 பிரிவு 04 : மாலை 3.00 - 5.00
.பயிற்சி நெறி முடிவில் ஆங்கிலத்தில் சரளமாக பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
இடநெருக்கடியை தவிர்க்க 30.06.2013 இற்கு முன் பதிவு செய்க.
SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்
தொ.பே : 077 621 4567

Spoken English
Veta Fluency Diploma
DMI COMPUTER EDUCATION
City & Guilds
அனேகரின் வேண்டுகோளுக்கமைய
வார, வாரஇறுதிநாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்
• அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்.
• அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
• அர்த்தமுள்ள பாடப்புத்தகங்கள்.
• நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள்.
யாழ்ப்பாணம் Sat, Sun 8.30 a.m. Mon,Wed 9.30 a.m.
நெல்லியடி Sat, Sun 3.00 a.m. Wed,Fri 3.30 a.m.
சாவகச்சேரி Tue, Thu 9.30 a.m.
சுன்னாகம் Sat, Sun 10.30 a.m.
சனி, ஞாயிறு காலை 9.30 மணிக்கு முதல் வகுப்பு இலவசம்
பதிவுகளுக்கு Tel.0777577333
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113 Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V.வீதி, Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, Tel. : 021-227 0775
சுன்னாகம் Tel. : 021-224 1970

பணிப்பெண் தேவை
இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்திற்கு வீட்டுப் பராமரிப்பு வேலைகளுடன் சமையல் வேலை நன்றாக செய்யக் கூடிய 45 வயதுக்குட்பட்ட பணிப்பெண் தேவை.
தொடர்பு:- பி.ப.2.30 மணிக்குப் பின்னர் 0779859218
(35084)

சமாதானப் பெருந்தொனி
"உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்..." (யோவான் 16:20)
கவலையா, கண்ணீரா,
தீராத வியாதியா,
பிசாசின் பிடியா,
வியாபாரத் தோல்விகளா,
பில்லி - சூனியக்கட்டுக்களா,
பாவங்களா,
பரம்பரை சாபங்களா,
அடிமைத்தனங்களா,
ஆகியவற்றிலிருந்து...
இயேசு விடுதலை கொடுக்கிறார்...
காலம் : ஆனி மாதம் 28,29,30ம் திகதிகளில்
நேரம் : தினமும் மாலை 4.00 மணிக்கு
இடம் : பிரதேச சபை மைதானம் ,
பரந்தன் வீதி , புதுக்குடியிருப்பு.
(பெற்றோல் செற் முன்பாக)
இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
1ம் வட்டாரம்,வேணாவில்,புதுக்குடியிருப்பு.
இயேசு செய்த அற்புதங்களில் சில...
* குருதிப்புற்று நோயிலிருந்து விடுதலை [லூக்கோமியா]

எனக்கு மூன்று வருடங்களாக இருந்த குருதிப்புற்று நோயால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டேன் ஜெப வேளையில் பரிபூரண விடுதலையை பெற்றுக்கொண்டேன்.
[ச.பரணிதரன் - புத்தூர்]
* மார்பக புற்று நோயிலிருந்து அற்புத விடுதலை

எனக்கு மார்பகத்தில் இருந்த புற்றுநோயால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் வைத்தியங்கள் பலனளிக்காத நிலையில் ஜெபத்தின் மூலம் அற்புத சுகத்தை பெற்றுக்கொண்டேன்.
[இ.யசோதா - நெடுந்தீவு]
* மூளையில் இருந்த கட்டி மறைந்தது

எனது மூளையில் நரம்புச்சுருக்கத்தால் ஏற்பட்ட கட்டியினால் அடிக்கடி ஏற்படும் வலிப்பு நோயினால் அவதிப்பட்டு இருந்தேன். ஜெபத்தின் மூலம் அற்புத சுகத்தை பெற்றுக்கொண்டேன்.
[த.தனுஷன் - நாவற்குழி]
கடந்த மாதம் முல்லைத்தீவில் நடந்த சமாதானப் பெருந்தொனி சுவிசேஷக் கூட்டத்தில் அநேகர் பல அற்புத சுகத்தை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.
[குருடர்கள் பார்வையடைந்தார்கள், செவிடர்கள் கேட்டார்கள், முடவர்கள் நடந்தார்கள். இது போன்ற பல அற்புதங்கள் நடைபெற்றன.]

முதலீட்டாளர் கருத்தரங்கு
நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு
கம்பனிகளின் நிதிக்கூற்றுப் பகுப்பாய்வுகளுடன் தொடர்புபட்ட LKAS, Ratio analysis, Common size statement, Financial Shenanigans, Leverage போன்றவற்றை உள்ளடக்கிய Case Study முறையிலான பயிற்சிப் பட்டறை வார இறுதி நாள்களில் மாலை 3 மணி தொடக்கம் பங்குப் பரிவர்த்தனை கேட்போர் கூடத்தில் நடைபெற்று வருகிறது.
பதிவுகளுக்கு: 0777822014
(வி/10121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.